ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே ஶரணம்

# ஸ்ரீஶைலேஶதயாபாத்ரம்

பராங்குஶ திருஅவதார ௵
5110
விரோதி ௵ பங்குனி
29, 12–4–2010
க்ரந்த பரிபாலந ட்ரஸ்ட்
வெளியீடு

FOR PRIVATE CIRCULATION ONLY - Not for sale



ஸ்ரீஶைலேஶத$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$ கு$_3$ணார்ணவம்।
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம்॥
जीवोज्जीवनसङ्कल्पं हरेः पूर्णं विधित्सुकाम्।श्रियं सत्याशिषं कुर्वत्सदाचार्यपरम्परा ॥
यावत् , विजयतां तावत्सीमातिक्रान्तवैभवा ।श्रीशैलेशदयापात्रनाम्नीयं पत्रिका शुभा ॥

ஆலோசகர்: ஸ்ரீ.உ.வே.பரதன்ஸ்வாமி
ஆசிரியர்:
ஸ்ரீவைஷ்ணவமஹாநிதி R.ரகுராமன் (பாலாஜி)9994606427
24/71,புத்தூர் அக்ரஹாரம் திருச்சி–620 017.
துணையாசிரியர்: K.ஆராவமுதன் (98942 12038)

# பொருளடக்கம்

**மலர் 2 இதழ் 12** **பக்கம்**


| | | |
|---|---|---|
| திருவேங்கடமுடையான் வைபவம் | | *1–03* |
| ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் | | *03–05* |
| ஶரணவரணம் | | *05–08* |
| மஹநீயர்களைப்போற்றுவோம்-5 காரப்பங்காடு மஹாவித்வான் ஸ்ரீ.உ.வே.வேங்கடாசார்யஸ்வாமி | | *09–12* |
| நம்மாழ்வார் கட்டியங்கள் | *(14–17)* | *13–16* |
| ஸ்ரீயதிபதிதிநசர்யா | *(10–16)* | *17–23* |
| கேள்வி – பதில் | | *24* |
| ஸ்ரீரங்கராஜஸ்தவவுரை | *(33–34)* | *25–26* |
| பரந்தரஹஸ்யவிவரணம் | *(37–46)* | *27–36* |
| ஸ்ரீக்ருஷ்ணகர்ணாம்ருத உரை | *(45–48)* | *37–40* |
| பெரியாழ்வார் திருமொழி வ்யாக்யாநங்கள் | *(173–180)* | *41–48* |


அன்பர்களே,

இவ்விதழோடு நமது பத்ரிகைக்கு இரண்டாண்டுகள் பூர்த்தியாகின்றன. இதுவரை கண்ணிநுண்சிறுத்தாம்பு ஸகல வ்யாக்யாநங்களுடனும், அரும்பதங்களுடனும் வெளிவந்துள்ளது. நூறுவருடங்களுக்குப் பின்னர் பெரியாழ்வார் திருமொழியின் இரண்டுவ்யாக்யாநங்களுடனும் அரும்பதத்துடனும் வெளிவருகிறது. இதில் முதற்பத்து சென்றவிதழோடு நிறைவுற்று, இவ்விதழில் இரண்டாம்பத்து தொடங்கப்படுகிறது. ஸம்ஸ்க்ருதபதங்களுக்கு முன்பதிப்புக்களில் இல்லாத 2,3,4 எண் குறியீடுகள் இவற்றில் குறிக்கப்பட்டுள்ளன. சது:ஶ்லோகிக்கு பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த வ்யாக்யாநம் ஸ்ரீ.உ.வே.ஸுதர்ஶனர் ஸ்வாமியின் விவரணத்துடன் வெளிவந்துள்ளது. இதுவரை ஓலைச்சுவடியிலேயேயிருந்த அண்ணவைப்பங்கார் அருளிச்செய்த வரவரமுநிஸுசரிதசஷகம் முதன்முறையாக நமது பொழிப்புரையுடன் இப்பத்ரிகையில் வெளிவந்துள்ளது. தெலுங்குலிபியிலிருந்து ராமாநுஜரஹஸ்யத்ரய வ்யாக்யாநமும் ஸ்ரீயதிபதிதிநசர்யா என்கிற ஸ்தோத்ரமும் தமிழ்எழுத்தில் வெளிவந்துள்ளன. நமது பொழிப்புரையுடன் கூடிய ஸ்ரீயதிபதிதிநசர்யா இவ்விதழோடு நிறைவுபெறுகிறது. ஆழ்வார்திருநகரி நம்மாழ்வார் கட்டியங்கள் பெரும்பாலானவை இதுவரை அச்சிடப்பெறுதவை. அவை மிகுந்த ப்ரயாஸத்துடன் முதன்முறையாக நம்மால் வெளியிடப்படுகின்றன. கருடவாஹநபண்டிதர் இயற்றிய திவ்யஸூரிசரிதம் ப்ரதிஶ்லோகத்திற்கு தமிழ்ப் பொழிப்புரையுடன் வெளியிடப்படுகிறது. முதல்ஸர்க்கம் நிறைவுற்று, அடுத்தவிதழில் இரண்டாவது ஸர்க்கம் தொடங்கப்படவுள்ளது. வரவரமுநிதிநசர்யா மற்றும் யதிராஜவிம்ஶதிக்கு அண்ணவைப்பங்காரின் வ்யாக்யாநத்தை அடியொற்றி ஸ்ரீ.உ.வே.தி.அ.கி. ஸ்வாமியால் எழுதப்பட்ட உரை நமது பத்ரிகையில் வெளிவந்துள்ளது. ஸுதர்ஶனர்ஸ்வாமியின் பரந்தரஹஸ்ய–திருமந்த்ரப்ரகரண விவரணம்

# திருவேங்கடமுடையான் வைபவம்

**(காரப்பங்காடு மஹாவித்வான் ஸ்ரீ.உ.வே.வேங்கடாசார்யஸ்வாமி)**

ஶ்ரிய:பதியான ஸர்வேஶ்வரன் பரம், வ்யூஹம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என்னும் ஐந்து நிலைகளை உடையவன். பரமபதத்தில் திருவடி, திருவநந்தாழ்வான் முதலான நித்யஸூரிகளும், முக்தர்களும் அநுபவித்து அடிமை செய்து உகப்பிக்கு மாறு எழுந்தருளி இருக்கும் நிலையை ‘பரம்’ என்று கூறுவர். இவ்வுலகை ஆக்கி, அளித்து, அழித்து, தூண்டி, நடத்தி நிர்வஹிப்பதற்காகப் பாற்கடலில் ஸங்கர்ஷணன், ப்ரத்யும்நன், அநிருத்தன் என்னும் ரூபங்களோடு எழுந்தருளி இருக்கும் நிலையை ‘வ்யூஹம்’ என்பர். திருவயோத்யை வடமதுரை முதலிய இடங்களில் ஸ்ரீராமனாகவும், ஸ்ரீக்ருஷ்ணனாகவும் திருவவதாரம் செய்து எழுந்தருளி இருக்கும் நிலையை ‘விபவம்’ என்பர். ஒவ்வொரு பொருளிலும் ஆத்மாவாய் எழுந்தருளி இருக்கும் நிலையை ‘அந்தர்யாமித்வம்’ என்பர். திருவரங்கம் முதலான திருப்பதிகளில் ‘பின்னானார் வணங்கும் சோதி’யாய் எழுந்தருளியிருக்கும் இருப்பை ‘அர்ச்சை’ என்று கூறுவர். மேற்கூறிய ஐந்து நிலைகளில் அர்ச்சை என்பது தான், நாம் பற்றி இம்மை மறுமைகளில் மோக்ஷம் பெறுவதற்குத் தகுந்ததாம்.

அக்$_3$நௌ திஷ்ட$_2$தி விப்ராணாம் ஹ்ருதி$_3$திஷ்ட$_2$தி யோகி$_3$நாம்।
ப்ரதிமாஸ்வ அப்ரபுத்$_3$த$_4$ாநாம் ஸர்வத்ர ஸமத$_3$ர்ஶிநாம்॥

(பரமன் அந்தணனுக்கு அக்நியிலும், யோகிகளுக்கு இதயத்திலும், அறிவிலிகளுக்கு அர்ச்சையிலும், ஸமமாகப் பார்ப்பவர்களுக்கு எங்கும் எழுந்தருளியிருக்கிறான்.) என்னும் ஶ்லோகத்தை மேலெழுந்தவாரியாகப் பார்ப்பவர்களுக்கு அறிவில்லாதவர் களுக்கு அர்ச்சை ஆதரிக்கத்தக்கதாம் என்னும் கருத்து தோன்றக்கூடும். ஆனாலும் இந்த ஶ்லோகத்துக்கு அவ்வாறு கருத்துக்கூற இடமில்லை. பரமபுருஷன் இவ்வுலகில் ஸ்ரீராமனாகவும், ஸ்ரீக்ருஷ்ணனாகவும் திருவவதாரம் செய்தருளி எழுந்தருளியிருந்த காலத்தில் அர்ச்சாரூபத்தைப் பூஜித்து வந்ததாக இதிஹாஸம் கூறுகிறது. ஸ்ரீராமனும், கண்ணனும் அவ்வாறு எழுந்தருளி இருந்த காலத்தில் அர்ச்சாரூபத்தைப் பூஜித்தது நாம் அனைவரும் அர்ச்சாரூபத்தை வணங்கி வழிபட்டு நன்மைபெறவேண்டும் என்பதைத் திருவுள்ளம் பற்றியேயாகும். அந்த எம்பெருமான்களை அறிவிலிகள் என்று கூற இடமில்லை. தபோமஹிமையினால் சிறந்த அறிவு பெற்றிருக்கும் ரிஷிகளும், மயர்வறமதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களும், அவ்வாழ்வார்களைப் போன்றுள்ள நம் பூர்வாசார்யர்களும் திருவரங்கம் முதலான திருப்பதிகளில் அர்ச்சாரூபத்தோடு கூடிய

எம்பெருமானை ஆதரித்துவந்த விஷயம் மிகவும் ப்ரஸித்தமானது. ரிஷிகள், ஆழ்வார்கள், ஆசார்யர்கள் இவர்களையும் அறிவிலிகள் என்று கூற இயலாது. ஆதலால் 'ப்ரதிமாஸு அப்ரபுத்$_3$த$_4$நாம்' என்னுமிடத்தில் 'அபி' என்னும் சொல்லை வருவித்து, 'அப்ரபுத்$_3$த$_4$நாம் அபி ப்ரதிமாஸு' என்று சேர்த்து அறிவிலிகளும் அர்ச்சையில் பூஜிக்குமாறு பரமன் எழுந்தருளியிருக்கிறான் என்னும் கருத்தை அவஶ்யம் கொள்ளவேணும். இக்கருத்தைக் காண்பாருக்கு சிறந்த அறிவுள்ளவர்களுக்கும் அர்ச்சாரூபம் மிகவும் ஆதரிக்கத்தக்கது என்பது நன்கு விளங்கும். இக்கருத்து நம் பூர்வாசார்யர்களாலேயே அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. இதனால் எல்லாருக்கும் ஆதரிக்கக்கூடிய இடம் அர்ச்சை என்பது தேறிற்று.

பரமபதத்தில் எழுந்தருளி இருக்கும் எம்பெருமான், தன்னை அர்ச்சாரூபத்தில் அனைவரும் வணங்கி வழிபட்டு க்ஷேமம் பெறவேண்டும் என்று திருவுள்ளம் பற்றி முதன்முதலில் திருவேங்கடம் என்னும் திருப்பதியில் ஆவிர்பவித்து நிற்கிறான் என்பதை ப்ரமாணங்களால் அறியலாம். ஆழ்வார்களில் ஒருவராகிய திருப்பாணாழ்வார் பெரியபெருமாளைத் திருவடி முதல் திருமுடி வரையில் நன்கு அநுபவித்து, அங்ஙனமான தம் அநுபத்தை 'அமலனாதிபிரான்' என்னும் திவ்யப்ரபந்தத்தால் வெளியிட்டிருக்கிறார். அதிலுள்ள ஒரு பாசுரத்தில், 'மந்திபாய் வடவேங்கட மாமலை வானவர்கள் சந்தி செய்ய நின்றான் அரங்கத்து அரவின் அணையான்' என்று அருளிச்செய்திருக்கிறார்.

'வடதிசையில் உள்ளது திருவேங்கடம் என்னும் திருமலை. அத்திருமலையில், பெண் குரங்குகள் ஒரு கிளையிலிருந்து மற்றொரு கிளைக்கு பாய்ந்து திரியா நிற்கும். பகவான் இப்படி மிகத்தாழ்ந்த வானரங்களுக்கும் முகம் கொடுத்துக் கொண்டு நிற்கிற நிலையிலே (எம்பெருமானது ஶீலத்திலே) ஈடுபட்டவர்கள் திருவடி, திருவநந்தாழ்வான் முதலான நித்யஸூரிகள். அந்த நித்யஸூரிகள் (பரமபதத்திலே) உள்ள பூக்களைக் கொண்டு ஆராதிக்கும்படி நிற்பவனும் திருவேங்கடமுடையான். அத்திருவேங்கட முடையானே திருவரங்கம் திருப்பதியில் திருவநந்தாழ்வானாகிய இனிய படுக்கையில் சாய்ந்தருளி இருப்பவனும்' என்பது இதன் கருத்தாகும். இந்தக் கருத்தை நன்கு ஊன்றி அநுபவிப்பவருக்கு 'பரமபதத்தில் எழுந்தருளி இருக்கும் எம்பெருமான் முதன்முதலில் திருவேங்கடத்தில் ஆவிர்பவித்து நின்று, அங்கிருந்து வடக்குவாசலாலே கோயிலுக்கு எழுந்தருளி, திருவநந்தாழ்வானாகிய இனிய படுக்கையில் கண்வளர்ந்துகொண்டு இருக்கிறான்' என்பது தெளிவாகும். இதனால் திருவேங்கடமுடையான்தான் திருவரங்கம் திருப்பதியில் கண்வளர்ந்தருளும் பெரியபெருமாள் என்பதும், அவன் நித்யஸூரிகளுக்குப் பூஜ்யன் என்பதும் நன்கு விளங்குகின்றன அல்லவா? இவ்வாறு முக்யத்வம் பெற்றிருக்கிற திருவேங்கடமுடையான் ஆழ்வார்களாலும், ஆசார்யர்களாலும் மங்களாஶாஸநம் செய்யப்பெற்றவன் ஆவான். ஆழ்வார்களுள் தலைவர் என்று கொண்டாடப்படும் நம்மாழ்வார்–

அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல்மங்கை உறை மார்பா
நிகரில் புகழாய்! உலகம் மூன்று உடையாய்! என்னை ஆள்வானே!
நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே!
புகல் ஒன்றுமில்லா அடியேன் உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே!

என்னும் பாசுரத்தில் அலர்மேல்மங்கைத்தாயாரைப் புருஷகாரமாக முன்னிட்டுத் திருவேங்கடமுடையான் திருவடிகளைச் சரணம் பற்றியிருக்கிறார்.

ஒழிவில் காலமெல்லாம் உடனாய்மன்னி
வழுவிலா அடிமை செய்யவேண்டும் நாம்
தெழிகுரல் அருவித் திருவேங்கடத்து
எழில்கொள் சோதி எந்தை தந்தை தந்தைக்கே.

என்னும் பாசுரத்தில் அலர்மேல்மங்கைத்தாயார், திருவேங்கடமுடையான் ஆகிய இருவருமான சேர்த்தியிலே எல்லா அடிமைகளும் செய்யவேண்டும் என்று பாரித்து ப்ரார்த்தித்து நிற்கிறார். பூர்வாசார்யர்களுள் ப்ரதாநரான நம் ஸ்வாமி எம்பெருமானார் 'ஶ்ருதிஶிரஸி விதீ₃ப்தே ப்₃ரஹ்மணி ஸ்ரீநிவாஸே ப₄வது மம பரஸ்மிந் ஶேமுஷீ ப₄க்தி ரூபா' என்று வேதாந்தங்களில் நன்கு விளங்குகின்ற ப்ரஹ்ம ஶப்தப்பொருளான திருவேங்கடமுடையானிடத்திலேயே தமக்கு பக்தி எப்போதும் இருக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டிருக்கிறார். 'கலௌ வேங்கடநாயக:' என்று கலியுகத்தில் திருவேங்கடமுடையானே ப்ரதாந தெய்வம், ரக்ஷகன் என்று கொண்டாடப்படுகிறான். இவ்வாறு பரமபுருஷன் முதன்முதலில் நம் க்ஷேமார்த்தமாகத் திருவேங்கடம் என்னும் திருப்பதியில் ஆவிர்பவித்து நிற்கிறவன் என்றும், நித்யஸூரிகளாலும் ஆழ்வார்களாலும் ஆசார்யர்களாலும் பூஜிக்கப்பட்டவன் என்றும் கலியுகத்தில் விஶேஷித்து அனைவருக்கும் ரக்ஷகனாய் இருப்பவன் என்றும் திருவேங்கடமுடையான் வைபவத்தைச் சிறிது அநுபவித்தோம். அவனுடைய திருவடிகளுக்கு 'உன் சேவடி செவ்வி திருக்காப்பு' என்று நாம் அனைவரும் எப்பொழுதும் பல்லாண்டு பாடுவோம்.

**ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே ஶரணம்**

## ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

**(காரப்பங்காடு மஹாவித்வான் ஸ்ரீ.உ.வே.வேங்கடாசார்யஸ்வாமி)**

திருமகள் கொழுநனான பரமபுருஷன் திருவயோத்தியில் சக்ரவர்த்தி திருமகனாகத் திருவவதாரம் செய்து பதினோராயிரம் வருஷங்கள் எழுந்தருளியிருந்து இப்பூமியைப் பெரியது சிறியதை நலியாமல் காத்து ரக்ஷித்தான் என்னும் வரலாறு அனைவரும் அறிந்ததே. இவ்வாறு எழுந்தருளியிருந்த காலத்தில் அப்பரமபுருஷன் தன்னுடைய உபதேஶங்களாலும், அநுஷ்டானத்தாலும் இவ்வுலகத்தவர்க்கு உணர்த்தின நீதிகள் பலவாகும். அவற்றை உணர்ந்த மக்களின் நிலையை,

'ப்ராஹ்மணர்கள் முதலான நான்கு வர்ணத்தாரும் ஆசை சிறிதுமின்றித் தம்

தமக்குரிய தர்மங்களை முறை சிறிதும் வழுவாது நன்கு செய்து வந்தனர்' என்றும்,

'அங்ஙனம் செய்யப் பெற்ற தம் தமக்குரிய கர்மங்களினால் எப்போதும் மனக்களிப்பு பெற்று இருந்தனர்' என்றும்,

'தம் தமக்குரிய தர்மங்களே தம் தமக்கு மேலான நன்மை என்று எண்ணி இருந்தனர்' என்றும் ஸ்ரீராமாயணம் வெகுஅழகாக வெளியிட்டுள்ளது.

மேற்கூறியவாறு 'சக்ரவர்த்தித் திருமகனான அம்மன்னர் பெருமான் முறையற்று இருந்த இந்த லோகத்தை முறையுற்றதாக்கி, நன்கு வாழுமாறு செய்தனன்' என்பது பற்றியே இன்றும் 'ராமராஜ்யம்' என்று நாம் அக்காலத்தைக் கொண்டாடிவருகிறோம்.

ஸ்ரீராமபிரான் ராஜ்யபரிபாலநம் செய்து வந்த காலத்தில் 'ராமராஜ்யம்' என்பது பொருளுற்றதாக இருந்து வந்தது. இக்காலத்திலோ நாம் மிகவும் வருந்தத்தக்க நிலையில் இருக்கிறோம். ராமாராஜ்யத்தில் இருந்தது போன்ற நிலைமை இக்காலத்தில் இல்லை. இக்காலத்தில் அவரவர்களுக்குரிய தர்மங்கள் அவரவர்களால் நன்கு செய்யப்பட்டுவருகின்றன என்றும் கொள்ளஇடமில்லை. தம் தமக்குரிய தர்மங்களை சரிவரச் செய்து மனக்களிப்பு பெற்று இருக்கும் மஹான்கள் கிடைப்பதும் அரிதாயிருக்கிறது. அவ்வாறு செய்யப்பெறும் தர்மங்களையே தங்களுக்கு மேலான நன்மையாக எண்ணியிருப்பார்தாம் உளரோ? என்னில் இல்லை என்று சொல்லும்படியான நிலையைத்தான் பெற்றிருக்கிறோம்.

இந்நிலையில் மக்கள் நல்வாழ்வு வாழ வழி யாதோ என்னும் கேள்வியெழுகிறது. இன்று இந்த உலகிலுள்ள தாழ்ந்த நிலையானது முற்றிலும் நீங்கி ஸ்ரீராமாவதார காலத்தைப் போன்று மிகவுயர்ந்த வாழ்வு நிலை மீண்டும் ஓங்கித் தழைக்க, ஸ்ரீராமபிரான் மீண்டும் திருவவதாரம் செய்தருளவேண்டும் என்று கூறுவர் சிலர் உளர். உண்மை இங்ஙனம் இருப்பினும் 'அவன் திருவவதாரம் இல்லாத இக்காலத்திலும் மேற்கூறியவாறு மிகமிகத்தாழ்ந்த நிலையில் உள்ள இக்காலத்தவர்களான நாமும் உய்வு பெற உபாயம் உண்டு. அவ்வுபாயமானது ஸ்ரீவால்மீகி ராமாயணத்தில் அறியக்கிடக்கிறது' என்னில் – இது வெறும் புகழுரை அன்று; உண்மை உரையேயாகும். இந்த உண்மையை உள்ளபடி அறிந்து அதன்படி நம் வாழ்க்கையை அமைத்துக்கொள்வது நமது கடமையாகும்.

இவ்வுலகில் 'இப்பொழுது ஸ்ரீராமாயணக் கருத்துக்களை மக்கள் மனதில் பரப்புவார் இல்லை' என்று யாரும் சொல்லிவிடமுடியாது. 'உண்மைக்கருத்துக்களை உபகரிப்பவர் – காணக்கிடைப்பதற்கு அரிதானவர் – யாரோ ஒருவர் இருவர் உண்டு' என்பதுதான் உண்மை. இத்தகைய மஹான்கள் ஸ்ரீராமாயணத்தின் மூலம் வால்மீகி காட்டியருளும் தர்மங்களைப் புரிந்து கொள்வதற்காக இவற்றுடன் ரிஷிகள், ஆசார்யர்கள் முதலியோருடைய கருத்துக்களையும் சேர்த்துப் பார்ப்பது என்னும் சிறந்த முறையைக் கைக்கொள்கின்றனர்.

ப்ரத்யக்ஷத்தாலும் (கண் முதலிய வெளி இந்திரியங்களாலும்), அநுமானத்தாலும் (கண்களுக்குப் புலப்படாத நெருப்பு முதலானவற்றை அறிய

ஹேதுவாயிருக்கும் புகை முதலானவற்ருலும்), ஒருகாலும் ஏனையோரால் அறிய இயலாத பொருளைக் கண்கூடாகக் காணுமவர் ரிஷி என்று புகழப்படுகிருர். அன்னுர் வாக்யங்களுடைய உண்மைக் கருத்தை உணர, அன்னுரைப் போன்று உள்ள ரிஷிகளுடைய வாக்யங்களைத் துணையாகக் கொள்ளுதல் என்பது ஒரு சிறந்த முறையாகும். வால்மீகி சிறந்த ரிஷியானவர். மநு முதலானுரும் அங்ஙனமே சிறந்த ரிஷிகளாவர். ஆதலின், வால்மீகி ராமாயணத்தின் கருத்துக்களை மநுமுதலானுருடைய ஸ்ம்ருதி வசநங்களைக் கொண்டு காணுதல் சிறந்த முறையாகும்.

இன்னமும் ‘எம்பெருமான் இவ்வுலகத்தவர் நன்மையைத் திருவுள்ளம்பற்றி தாஶரதியாய்த் திருவவதாரம் செய்தருளினபொழுது, அவனைக் கூறும் வேதமும் வால்மீகி ராமாயணமாய்த் திருவவதாரம் செய்தது’ என்றிருக்கையாலே அவ்வேதக் கருத்துக்களுக்கு இசையுமாறு ஸ்ரீராமாயணக் கருத்துக்களை கொள்ளுதல் நன்ரும்.

இன்னும், மயர்வறமதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்கள் திவ்யஸூக்திகளை (திருவாக்குகளை) ஆங்காங்கு ஒன்று சேர்த்துக்கண்டு, ஸ்ரீராமாயணக் கருத்துக்களைக் காணுதல் பெரியவாச்சான்பிள்ளை முதலானோர் கண்ட முறையாகும்.

இதைப்போன்று நம்முடைய பூர்வாசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திகளைக் கொண்டு ஶ்லோகங்களுக்குண்டான அர்த்தவிஶேஷங்களை அநுபவிப்பது என்பதும் மஹான்களான பெரியோர்கள் கைக்கொள்ளும் முறையாகும். ஆக, இந்த இருள் தருமா ஞாலத்தில் மீண்டும் ராமராஜ்யம் ஏற்பட வேண்டுமாஞல் ஸ்ரீராமபிரானுடைய உபதேஶங்களையும், அநுஷ்டானங்களையும் நாம் ஸ்ரீராமாயணத்தின் மூலம் அறுதியிட்டு அநுஷ்டானத்தில் கொள்ளவேண்டும் என்றும்,

ஸ்ரீராமாயணத்தின் மூலம் வால்மீகி காட்டியருளும் தர்மங்களைப் புரிந்துகொள்ள ரிஷிகள், ஆழ்வார்கள், ஆசார்யர்கள், இவர்கள் வழிவந்த மஹான்கள் ஆகியோர்களுடைய கருத்துக்களையும் சேர்த்துப்பார்ப்பது என்னும் முறையைக் கைக்கொள்வது சிறந்தது என்றும் தேறிற்று.

## ஶரணவரணம்

**(காரப்பங்காடு மஹாவித்வான் ஸ்ரீ.உ.வே.வேங்கடாசார்யஸ்வாமி)**

சேதநன் பகவானைச் சரணமாகப் பற்றும்போது, பெரியபிராட்டியாரை முன்னிடுதல் அவஶ்யமாகும். இது ஸ்ரீராமாயணத்தில் எப்படிக்காட்டப்படுகிறது என்பது பற்றி ஒரு சில விஷயங்களை விண்ணப்பித்துக்கொள்கிறேன்.

பெரியபிராட்டியார், பகவான் இருவருமே சேதநனை ரக்ஷிப்பவர்களாக அமைகிருர்கள். சேதநன் தன்னுடைய துன்பங்கள் தீர்ந்து இன்பம் பெற்று உய்வதற்கு பகவான் முக்ய காரணமாக அமைகிருன். சேதநன் துன்பங்கள் தீரப் பெறுவதை அநிஷ்டநிவ்ருத்தி என்றும், இன்பம் பெற்று வாழ்ந்துபோருவதை இஷ்டப்ராப்தி என்றும் சொல்வர். அநிஷ்டநிவ்ருத்தி, இஷ்டப்ராப்தி இரண்டுக்கும் பகவானே

காரணமாக இருக்கிறான். அநிஷ்டநிவ்ருத்தி தீர, இஷ்டப்ராப்தி தன்னடையே ஸித்திக்கும் என்பது ஸம்ப்ரதாயம். இப்படி அநிஷ்டநிவ்ருத்தி, இஷ்டப்ராப்தி இரண்டும் ஸித்திப்பதற்காக ஸம்ஸாரி ஜீவாத்மாவானவன் பகவானைச் சரணம் பற்றுங்கால், பெரியபிராட்டியார் புருஷகாரமாய் இருந்து உதவியைச் செய்கிறாள்.

புருஷகாரமாய் இருந்து உதவியைச் செய்வது என்பது என்ன? இந்த சேதநன் (ஸம்ஸாரி ஜீவாத்மா) பகவானைப்பற்றும்போது, இவன் அநாதிகாலமாக அறிந்தும் அறியாமலும் எண்ணிறந்த பாபங்களைச் செய்திருக்கிறான் என்பதாலும், ஶரணாகதனாய் வந்து நிற்கும்போது பேரறிவாளனான பகவானுக்கு இவன் செய்திருக்கும் பாபங்கள் அனைத்தும் நினைவுக்கு வருவதாலும், அந்தந்த பாபத்துக்குத் தகுந்த பயனை அளித்து நல்வழியில் நடத்திப்போருமவனாய்த் தான் இருப்பதாலும், பகவான் சீறிச்சிவந்து இந்த சேதநனைக் கண்கொண்டு பாராமல் இருப்பன். அந்தக்காலத்தில் பகவானுக்கும் இந்த சேதநனுக்கும் உள்ள ஸம்பந்தத்தை (தொடர்பை) உணர்த்தி, சேதநனுடைய நிலையையும் அறிவித்து, இவனிடத்தில் பகவானுடைய இரக்கத்தையும் அவனுடைய குற்றங்களை பொறுக்கும் தன்மையையும் கிளப்பி, பகவான் இவனைக் கண்கொண்டு பார்க்கச் செய்தும், திருவுள்ளம் உகந்து ஏற்று அங்கீகரிக்கும்படியும் பெரியபிராட்டியார் செய்து அருளுகிறாள். இதுவே பெரியபிராட்டியார் புருஷகாரமாக இருந்து செய்யும் உதவியாகும். ஶரணாகதி தர்மத்தைப் பற்றிய இந்த உண்மையை ஸ்ரீராமாயணத்தின் முடிந்த பொருளாக

'அவள் (பிராட்டி) புருஷகாரமாக அவனைப் பற்றுவதே பல வ்யாப்தமாவது. இது தான் காகவிபீஷணாதி$_3$கள் பக்கலிலே காணலாம். அவளை அநாத$_3$ரித்து இவனைப் பற்றின ஶூர்ப்பணகை அநர்த்தப்பட்டாளிறே, பெருமாளையொழியப் பிராட்டியைப் பற்றின ராவணனும் அநர்த்தப்பட்டான். இருவரையும் பற்றினாலிறே விபீ$_4$ஷணாழ்வானைப் போல வாழலாவது' என்று பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்கிறார். இது தன்னைச் சிறிது விவரித்துக்கூறுகிறேன்.

முதலில் காகத்தின் சரித்ரத்தைப் பார்ப்போம். திருச்சித்ரகூடத்தில் ஸ்ரீராமன் ஸீதாபிராட்டியார் மடியில் திருக்கண்வளரும் காலம். அப்பொழுது இந்த்ரனுடைய புத்ரனும், கெட்ட எண்ணம் கொண்டு காகத்தின் ரூபத்தையும் தன்மையையும் பெற்றிருப்பவனுமான காகாஸுரன், பிராட்டியைக் கிட்டி திருமேனியில் புண்ணை உண்டாக்கினான். பிராட்டி துன்பம் பொறுக்காமல் தன் மடியில் கண்வளர்ந்து கொண்டிருக்கும் பெருமாளை எழுப்ப, பெருமாள் உணர்ந்தெழுந்து காகாஸுரன் மீது ப்ரஹ்மாஸ்த்ரத்தை ஏவினார். அது காகாஸுரனைத் துரத்த, அவன் எல்லாவிடமும் சென்று அனைவரிடமும் ரக்ஷணத்தை ப்ரார்த்தித்தும் எவரும் அவனைக் காக்க முன்வரவில்லை. எங்கும் புகலற்றவனாய் கடைசியில் அவன் பெருமாள் திருமுன்பே வந்து விழுந்துகிடந்தான். காகாஸுரனுடைய நிலையைக் கண்ட பிராட்டி அவனை ரக்ஷித்தருளுமாறு பெருமாளை வேண்டிக்கொண்டாள். பெருமாளும் ப்ரஹ்மாஸ்த்ரம் பயனற்றுப் போகாமைக்காக காகாஸுரனுடைய ஒரு கண்ணை அதற்கு இலக்காக்கி

அவனுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்தருளினன். இந்த சரித்ரத்தை

வாயஸேந ததஸ்தேந ப$_3$லவத் க்லிஶ்யமாநயா।

ஸ மயா போ$_3$ாதி$_4$த: ஶ்ரீமாந் ஸுகஸுப்த: பரந்தப:॥ (ஶ்ரீரா.ஸு.38–25)

(பிறகு அந்தக் காகாஸுரனால் பலாத்காரமாகத் துன்புறுத்தப்பட்ட என்னால், ஸுகமாகக் கண்வளர்ந்தருளியவரும், அத்தாலே அழகாய் இருப்பவரும், எதிரிகளை தவிக்கச் செய்பவருமான ஶ்ரீராமன் எழுப்பப்பட்டார்.)

ஸ பித்ரா ச பரித்யக்த: ஸுரைஶ்ச ஸமஹர்ஷிபி$_4$:।

த்ரீந்லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ ஶரணம் க$_3$த:॥(ஶ்ரீரா.ஸு.38–34)

(அந்தக் காகாஸுரன் தந்தையினாலும் (தாயினாலும்), மஹர்ஷிகளுடன் கூடிய தேவர்களாலும் கைவிடப்பட்டவனாய், மூன்று உலகங்களையும் சுற்றித்திரிந்து அந்த ராமனையே ஶரணம் அடைந்தான்.)

ஸ தம் நிபதிதம் பூ$_4$மௌ ஶரண்ய: ஶரணாக$_3$தம்।

வத$_4$ார்ஹமபி காகுத்ஸ்த$_2$: க்ருபயா பர்யபாலயத்॥ (ஶ்ரீரா.ஸு.38–35)

(ஶரணமடைந்தவனும், பூமியில் விழுந்தவனுமான அவனை, கொல்லத் தகுந்தவனாய் இருந்த போதிலும் ஶரணமடையத் தகுந்தவனான ஶ்ரீராமன் தன் அருளாலே காப்பாற்றினான்.) என்னும் ஶ்ரீராமாயண வசநங்கள் கொண்டும்,

சித்திரக்கூடத்திருப்பச் சிறுகாக்கைமுலைதீண்ட
அத்திரமேகொண்டெறிய அனைத்துலகும் திரிந்தோடி
வித்தகனே! இராமாவோ! நின்னபயம்என்றுஅழைப்ப
அத்திரமே அதன் கண்ணை அறுத்ததும் ஓரடையாளம்

என்னும் பெரியாழ்வார் திருமொழிப்(3–10–6) பாசுரம் கொண்டும் அறியலாம்.

ஸீதாப்பிராட்டியார் திறத்தில் காகாஸுரனும், ராவணனும் பொறுக்கவொண்ணாத துன்பத்தை உண்டாக்கினர். ராவணன் பிராட்டியாரை எடுத்துச் சென்று சிறைவைத் தான். அவனும் அவனைச் சேர்ந்த ராக்ஷஸிகளும் பிராட்டிக்கு மிகவும் துன்பத்தை விளைவித்தனர் என்பது உண்மையே. இருப்பினும் பிராட்டியுடைய திருமேனியில் துன்பத்தை உண்டாக்கியவன் காகாஸுரனே. இத்தகைய கொடிய பாபத்தை ராவணன் செய்யவில்லை. இத்தால் ராவணனைவிட காகாஸுரனுக்கே பாபம் அதிகம் என்பது தெரிகிறது. காகாஸுரன் ப்ரஹ்மாஸ்த்ரத்தினால் துரத்தப்பட்டு எங்கும் புகலற்று பெருமாள் திருமுன்பே விழுந்து கிடந்ததைப் போன்று ராவணனும் பெருமாளுடன் போர் புரிந்த காலத்தில் முதலில் பெருமாளுடைய பாணங்களால் அடிபட்டுத் தன் கையில் உள்ள வில்லை விழவிட்டு, ரதத்தில் தனக்குரிய இடத்தையும் விட்டு செயலற்றுக் கிடந்தான் என்று வால்மீகி பகவான் அருளிச்செய்திருக்கிறார்.

இவ்வாறு செயலற்றுக்கிடத்தல் என்பது ராவணன், காகாஸுரன் இருவருக்கும் ஒத்து இருந்தும், ராவணனைவிட காகாஸுரன் மிக்க பாபத்தைச் செய்திருந்தும், ராவணன் இலங்கையுடன் அழிவுபெற்றான். காகாஸுரனோ கண்ணழிவு பெற்று உயிர் பிழைத்தான். காகாஸுரனுக்குப் பிராட்டி முன்னிலையும், அத்தால் அவனுக்குக்

கிடைத்த பிராட்டியுடைய இயற்கை இன்னருளும் இதற்குக்காரணம் என்று அருளிச்செய்திருக்கிறுர்கள் நமதாசார்யர்கள். இந்த இடத்திலே –

'இவள் ஸந்நிதியாலே காகம் தலைபெற்றது; அது இல்லாமையாலே ராவணன் முடிந்தான்' (முமுக்ஷுப்படி – 135) என்றும் பிள்ளைலோகாசார்யர் திருவாக்கும்

''... இவள் ஸந்நிதி$_4$யாலே அபராத$_4$த்தைத் தீரக்கழியச் செய்து ப்ரஹ்மாஸ்த்ரத் துக்கு இலக்காய் தலையறுப்புண்ணத் தேடின காகம் ... தலைப்பெற்றுப் போயிற்று; அப்படி இருக்கிற இவள் ஸந்நிதி$_4$யில்லாமையாலே போக்கற்றுச் செயல்மாண்டு நின்ற நிலை ஒத்திருக்கச்செய்தேயும், காகத்தோபாதி அபராத$_4$மும் இன்றிக்கேயிருக்க, ராம ஶரத்துக்கு இலக்காய் ராவணன் முடிந்து போனுன் என்கை...'' என்னும் மணவாளமாமுனிகள் திருவாக்கும் அநுபவிக்கத்தக்கவை. இதுகாறும் கூறியவற்றுல் 'மிக்கபாபம் பெற்றிருப்பவனும் பெரியபிராட்டியாரை முன்னிடும்போது பகவானுடைய இன்னருளுக்கு இலக்காகி, நன்மை பெற்று வாழ்வு பெறலாம்' என்னும் உண்மைக் கருத்து தெளிவாகிறது.

மேலும் ராவணனும், ஶூர்ப்பணகையும், விபீஷணனும் ஒரு குடியில் பிறந்தவர்களானுலும் ராவணன் பெருமாளை விலக்கி பிராட்டியை முறை தவறி விரும்பினுன். பெருமாளை அடைவதற்காகப் பிராட்டியை விலக்குவது என்பதோடு மட்டும் நில்லாமல் இடையூருகவும் கருதி அவளைவிழுங்கவும் முயன்ருள் ஶூர்ப்பணகை. இவ்விருவரும் நன்மையைச் சிறிதும் பெறவில்லை. விபீஷணுழ்வானே ராவணன் ஶூர்ப்பணகை இருவருடனும் பிறந்திருந்தும், இவர்களைப் போன்று முறை தவறி ஒருவரை மாத்திரம் விரும்பாமல், திவ்யதம்பதிகளை முறையுடன் பற்றி இன்றும் வாழ்ந்து போகின்ருன். திருவரங்கத்தில் இன்றும் எம்பெருமான் விபிஷணனை நோக்கிக்கொண்டிருக்கிருனன்ருே? இந்த இடத்திலே 'மன்னுடைய விபீடணற்கா மதிளிலங்கைத் திசைநோக்கிமலர்க்கண் வைத்த என்னுடைய திருவரங்கற்கு' (பெரியாழ்.திரு. 4–9–2) என்னும் பெரியாழ்வார் திருவாக்கு அநுபவிக்கத்தக்கது. 'தென்திசை இலங்கை நோக்கி' (திருமாலை–19) என்ற தொண்டரடிப்பொடியாழ்வார் திருவாக்கும், இதற்குண்டான 'இதுக்கு முன்பு திக்குகளைக் கடாக்ஷித்தது அவ்வோ தே$_3$ஶங்களின் வெறுமை தீருகைக்காக; இது தம் குறை தீருகைக்காக, அவை க்ருபா கார்யம்; இது தன் செல்லாமையாலேயாய்த்து, அன்போடு தென்திசை நோக்கிப் பள்ளிகொள்ளும் (பெருமாள் திரு. 1–10) என்னக்கடவதிறே. ஸ்ரீவிபீஷணுழ்வானுக்கு வன்னியமறுத்து (விரோதியைப்போக்கி) ராஜ்யத்தைக் கொடுத்து அவன் ஸம்ருத்தியைப் பார்த்துக் கொண்டு கண்வளர்ந்தருளுகிற படியாய்த்து, மாதா ப்ரஜைகளுக்கு முலைகொடுத்து அவற்றின் முக$_2$மலர்த்தி காண்கைக்குப் பாங்காகச் சாயுமாபோலே, 'செல்வவிபீடணற்கு வேருக நல்லானை' (பெரிய.திரு. 6–8–5) என்னக்கடவதிறே' என்னும் பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யாந ஸ்ரீஸூக்தியும் அநுபவிக்கத்தக்கனவாம்.

## மஹநீயர்களைப்போற்றுவோம்-5
## காரப்பங்காடு மஹாவித்வான் ஸ்ரீ.உ.வே.வேங்கடாசார்யஸ்வாமி

(காரப்பங்காடு ஸ்ரீ.உ.வே.முரளீதரன்ஸ்வாமி
எழுதிய நூலிலிருந்து தொகுக்கப்பெற்றது)

ஆத்ரேயாந்வய பூ$_4$ஷஞ்ச்ச ஜநகாத் லப்$_3$த்$_4$வா ந்ருஸிம்ஹாத் புர:
ஶாஸ்த்ராணி ப்ரதி$_2$தாத் ததை$_2$வ வரத$_3$ாசார்யாத் பரஸ்தாத$_3$பி।
கே$_3$ாவிந்த$_3$ார்ய பத$_3$ாஶ்ரிதம் நிருபமப்ரக்$_2$யாதவாக்$_3$வைப$_4$வம்
த$_3$ாந்த்யாத்$_3$யாத்மகு$_3$ணகரம் கு$_3$ருவரம் ஸ்ரீவேங்கடார்யம் ப$_4$ஜே॥

(1. ஆத்ரேய குலத்துக்கு அணிகலனாகத் திகழ்ந்தவரும் தம்முடைய திருத்தகப்பனாரும் ஆகிய ஸ்ரீ.உ.வே.சிங்கப்பெருமாள் ஸ்வாமியிடம் முதலிலும் ஸ்ரீ.உவே. தேஶிகவரதாசார்ய ஸ்வாமியிடம் அடுத்தபடியாகவும் ஶாஸ்த்ரார்த்தங்களை முறையாகக் கற்றறிந்தவரும் 2. ஸ்ரீ.உ.வே.திருமலை அநந்தாண்பிள்ளை கோவிந்தப்பங்கார் ஸ்வாமியை ஆஶ்ரயித்து பஞ்சஸம்ஸ்காரங்களைப் பெற்றவரும், 3. ஒப்பற்ற புகழுடன் கூடிய வாக்வைபவத்தைப் பெற்றவரும், 4. தமம் முதலான ஆத்ம குணங்களுக்கு இருப்பிடமானவருமான ஸ்ரீவேங்கடார்யர் என்னும் குருவை துதிக்கிறேன்.)

(பிள்ளைலோகம் ஸ்ரீ.உ.வே.பாஷ்யகாராசார்யஸ்வாமி இயற்றிய தனியன்.)

சீர்மிகுந்த ஆத்திரேயன் தெளிசிங்கப் பெருமாள் சேய்
கூர்மதியன் வரதார்யன் கொடுத்த அருங்கலைச் செல்வன்
பார்புகழும் கோவிந்தன் பதம்பணிவோன் வேங்கட நற்
பேர்பெற்றான் திருவடியே பெரும் பேறும் நம் தமக்கே.

(வர்த்தமான ஸ்ரீபெரும்பூதூர் எம்பார் ஜீயர்ஸ்வாமி பூர்வாஶ்ரமத்தில் இயற்றியது.)

**திருவவதாரம்:** காரப்பங்காடு ஸ்ரீ.உ.வே.சிங்கப்பெருமாள்ஸ்வாமிக்கு கோமளத்தம்மாள் என்றும் லக்ஷ்மியம்மாள் என்றும் இரண்டு திருக்குமாரத்திகள் இருந்தனர். லக்ஷ்மியம்மாளுக்கு ராமாநுஜய்யங்கார் என்றும் வேங்கடாசார்யர் என்றும் திருவேங்கடத்தையங்கார் என்றும் மூன்று திருக்குமாரர்கள். இவர்களுள் வேங்கடாசார்யரை ஸ்ரீ.உ.வே.சிங்கப்பெருமாள்ஸ்வாமி தம் புத்ரராக ஸ்வீகரித்தார். வேங்கடாசார்யர் தம் தாயார் கர்ப்பத்தில் இருக்கும்போதே அவர்தான் தம் குடும்பத்தின் ஏழாவது தலைமுறை வித்வானாக ப்ரகாஶிக்கக்கூடியவர் என்பதைத் தம் ஜ்ஞாந த்ருஷ்டியாலே அறிந்த சிங்கப்பெருமாள்ஸ்வாமி அப்போதே அவரைத் தாம் ஸ்வீகாரம் செய்துகொள்ளப்போவதாகவும் அவருக்கு வேங்கடாசார்யர் என்று பெயர் வைக்க வேண்டும் என்றும் தீர்மானித்துவிட்டார். மணவாளமாமுனிகளின் அபராவதாரமோ வென்று நினைக்கும்படி எழுந்தருளியிருந்த நம் காரப்பங்காடுஸ்வாமி 1906 ஆம் வருடத்தில் பங்குனி புனர்வஸுவன்று திருவவதரித்தார்.

**இளமைக்கல்வி:** ஸ்ரீ.உ.வே.சிங்கப்பெருமாள்ஸ்வாமி வேங்கடார்யருக்கு பால்யத்திலேயே உபநயநம் செய்வித்து ஶாஸ்த்ரம் வாசிக்க திருவையாறு ஸம்ஸ்க்ருத கல்லூரிக்கு அனுப்பிவைத்தார். வேங்கடாசார்யர் வேதாந்தத்துக்கென்றே இட்டுப்பிறந்தவர். திருவையாறு கல்லூரியில் வேங்கடாசார்யஸ்வாமி தர்க்கம் வாசிக்கும்போதே மற்ற மாணவர்க்கும் பாடம் சொல்லும் திறன் பெற்று விளங்கினர். அக்கல்லூரி ஆசிரியர்கள் பலரும் நம் ஸ்வாமியின் திறன்கண்டு அதிசயித்தனர். பகவத்விஷயம், ஸ்ரீபாஷ்யம், திருமந்த்ரார்த்தம், திருப்பாவை போன்ற திவ்யப்ரபந்தங்களின் வ்யாக்யாநங்கள், மைசூர் அநந்தாழ்வான் அருளிச்செய்த வேதாந்தவாதாவளி ஆகியவற்றை ஸ்ரீ.உ.வே.சிங்கப் பெருமாள்ஸ்வாமியிடத்திலேயே அதிகரித்தார் நம் காரப்பங்காடுஸ்வாமி. ஸ்ரீபாஷ்யத்துக்கு விரிவுரையான ஶ்ருதப்ரகாஶிகை, ஸ்ரீவசநபூஷண திவ்யஶாஸ்த்ர வ்யாக்யாநம், ஆசார்யஹ்ருதய வ்யாக்யாநம் முதலான க்ரந்தங்களை தேஶிகவரதாசார்ய ஸ்வாமியிடம் அதிகரித்தார் நம் ஸ்வாமி. ஆஸூரி பெரியராமாநுஜார்ய ஸ்வாமியிடம் ந்யாயபாஸ்கரம் அதிகரித்தார்.

**பார்த்தஸாரதி எம்பெருமானும் காரப்பங்காடு ஸ்வாமியும்**

திருவல்லிக்கேணியில் காரப்பங்காடு ஸ்வாமி ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமி ஸந்நிதியிலும், வானமாமலை மடத்திலும், யதுகிரி யதிராஜ ஜீயர் ஸ்வாமி மடத்திலும், திருமணி ஸ்வாமி திருமாளிகையிலும், ஐயாபிள்ளை சாரிடியிலும், சாமராஜ ஸ்கூலிலும் தொடர்ந்து பலதடவைகள் காலக்ஷேபம் ஸாதித்திருக்கிறார்.

காரப்பங்காடுஸ்வாமி ஸ்ரீவானமாமலைமடத்தில் மிகவிரிவாக பகவத்கீதை காலக்ஷேபம் ஸாதித்தார். தமக்கு ஏற்பட்டுள்ள அனைத்து நன்மைகளுக்கும் பார்த்தஸாரதி எம்பெருமானே மூலகாரணம் என்பது காரப்பங்காடு ஸ்வாமியின் திருவுள்ளம். எப்பொழுதும் அவர் ஸ்ரீபார்த்தஸாரதியைப் பற்றிய நினைவிலேயே வாழ்ந்துவந்தார். இவர் வாழ்கையில் நடைபெற்ற சில நிகழ்ச்சிகள் இவருக்கு அவனிடம் இருந்த ஈடுபாட்டையும், அவன்தன் அநுக்ரஹம் இவருக்கு அமைந்த விதத்தையும் நன்கு எடுத்துக்காட்டுகின்றன.

ஒருமுறை அவன் திருமுன்பே ஸ்ரீமத் பகவத்கீதை காலக்ஷேபம் நடந்துமுடிந்தபோது, சாற்றுமுறை தினத்தில் அவனை ஸ்ரீபார்த்தஸாரதித் திருக்கோலத்தில் ஸேவித்து அநுபவிக்கவேண்டும் என்று பாரித்தார் நம் காரப்பங்காடுஸ்வாமி. ஸ்வாமியுடைய திருவுள்ளக்கருத்தையறிந்த எம்பெருமானும், அன்று பார்த்தன்தன் தேர் முன் நின்ற தன்னுடைய ரூபத்தை தன் அடியார்கள் கண்டு மகிழும்படி காட்டியருள ஸங்கல்பித்தான். ஏழு குதிரைகள் பூட்டிய தேரில் அவன் ஸ்ரீபார்த்தஸாரதித் திருக்கோலம் பூண்டு தன் அடியார்களுக்கு ஸேவை ஸாதித்தது மிக ஆஶ்சர்யமாக அமைந்தது. இப்படி எம்பெருமான், ஸ்ரீபார்த்தஸாரதி திருக்கோலத்தில் எழுந்தருளித் தன் அடியார்களுக்கு ஸேவைஸாதிப்பதான ஒரு நிகழ்ச்சி அதற்கு முன்பும் நடந்ததில்லை; அதற்குப் பின்பும் இன்று வரை நடக்கவில்லை. அந்தக் காலத்தில் ஸ்ரீபார்த்தஸாரதி எம்பெருமானுடைய இந்த திருக்கோலத்தைப் புகைப்படம்

எடுத்து Greeting Card ஆக வெளியிட்டார்களாம். அப்புகைப்படத்தையே இங்குக் காண்கிறீர்கள்.

கொண்டு திருப்பாவை உபந்யாஸம் ஸாதிக்கும் பேறு ஸ்ரீகாரப்பங்காடுஸ்வாமி ஒருவருக்கே வாய்த்தது. பொதுவாக நாடெங்கிலும் அர்ச்சாமூர்த்தியாய் எழுந்தருளியுள்ள ஸ்ரீக்ருஷ்ணனுக்கு



திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி – கீதோபதேசம் திருக்கோலம்

வருடத்திற்கு ஒருமுறை அந்நகூட உத்ஸவம் நடைபெறுவது வழக்கம். இந்த உத்ஸவம் குறிப்பாக வடதேஶமெங்கும் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது. ஸ்ரீபார்த்தஸாரதி எம்பெருமான்கோவர்த்தந கிரிதாரியான ஸ்ரீக்ருஷ்ணனுக்கு ப்ரதிநிதியாய், திருவல்லிக்கேணியில் எழுந்தருளியிருப்பவன். எந்தக் காரணத்தினாலோ இவனுக்கு அந்நகூட உத்ஸவம் நடைபெறாமலேயே இருந்துவந்தது. அவன் வருடந்தோறும் தப்பாமல் இந்த உத்ஸவத்தைக் கண்டருளவேண்டும் என்று பாரித்தார் காரப்பங்காடு ஸ்வாமி. எம்பெருமானும் ஸங்கல்பிக்க, ஸ்வாமி முதன்முதலில் தாமே அருகில் இருந்து அவனுக்கு இந்த உத்ஸவத்தை மிகவும் சிறப்பாக நடத்தி வைத்தார். அதன் பிறகு, ஸ்வாமிக்கு

ஸாதாரணமாகத் திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தஸாரதிஸ்வாமி ஸந்நிதியில் திருவாய்மொழிமண்டபத்தில் தான் வித்வான்களுடைய உபந்யாஸங்கள் நடைபெறும். ஆனால் ஒரு ஸம்வத்ஸரம்

மிகவும் அந்தரங்கராய் விளங்கிவந்த ஒருவர் தொடர்ந்து இந்த உத்ஸவத்தை நடத்திவந்தார். அவர், தம்முடைய காலத்திற்குப் பின்பும் இந்த உத்ஸவம் தொடர்ந்து சிறப்பாக நடைபெறும்

பொருட்டு ஏற்பாடுகளையும் செய்து வைத்திருக்கிறார். இந்த உத்ஸவம் இன்றுவரையில் மிக நன்றாக நடந்து வருகின்றது.

ஈக்காட்டுதாங்கலுக்கு ஸ்ரீபார்த்தஸாரதி எம்பெருமான் வருடத்திற்கு ஒருமுறை எழுந்தருளுவது வழக்கம். ஒருமுறை அவன் எழுந்தருளும் போது வழியில் காரப்பங்காடுஸ்வாமி திருமாளிகைக்கு அவனை எழுந்தருளப்பண்ணவேண்டும் என்று அர்ச்சகர்கள் தீர்மானித்து ஸ்வாமியிடம் தெரிவித்தார்கள். ஸ்ரீபார்த்தஸாரதி எம்பெருமான் தம்முடைய க்ருஹத்துக்கு எழுந்தருளப்போகிறான் என்ற விஷயத்தைக் கேட்டதும் ஸ்வாமி மிகுந்த ஆச்சர்யமும், ஸந்தோஷமும் அடைந்தார். எம்பெருமானுடைய அநுக்ரஹம் தமக்கு இப்படியும் வாய்க்கும் என்று அவர் எதிர்பார்க்கவே இல்லை. அவர், தம்முடைய திருமாளிகைக்குப் பெருமாள் எழுந்தருள் வதை மிகவும் சிறப்பாகக் கொண்டாடினார். பெருமாள் எழுந்தருளியவுடன் கூடை கூடையாக உயர்ந்த புஷ்பங்களையும் பழங்களையும் ஸமர்ப்பித்து, மங்களாசாஸநம் செய்தருளினார்.

**காரப்பங்காட்டுப் பேரருளாளனும் நம் ஸ்வாமியும்**

ஸ்ரீ.உ.வே.சிங்கப்பெருமாள்ஸ்வாமி காலத்துக்குப்பிறகு ஒருமுறை காரப்பங்காடுஸ்வாமி தாம் ஒருவராகவே முயன்று பேரருளாளன் பெருந்தேவித்தாயார் ஸந்நிதி ஜீர்ணோத்தாரண, ஸம்ப்ரோக்ஷண கைங்கர்யங்களை நடத்தி வைத்தார். இந்த ஸமயத்தில் ஸ்ரீபார்த்தஸாரதிப் பெருமாளுடைய பஹுமாநமாகப் பேரருளாளனுக்கு ஒரு உயர்ந்த வஸ்த்ரத்தை ஸமர்ப்பிக்கவேண்டும் என்று பாரித்த ஸ்வாமி, தம்முடைய விருப்பத்தை தர்மகர்த்தாவிடம் விண்ணப்பித்தார். அவரும் ஸ்ரீபார்த்தஸாரதியினுடைய வஸ்த்ரக்கொட்டடியைத் திறந்துவிட்டு, 'ஸ்வாமி உகந்த வஸ்த்ரம் எதுவாயினும் அதை எடுத்துச்செல்லலாம்' என்று சொல்ல, அங்கிருந்து உயர்ந்ததொரு வஸ்த்ரத்தை எடுத்துக்கொண்டு வந்து அதை தேவப்பெருமாளுக்கு ஸமர்ப்பித்தார். ஸ்வாமியுடைய அபிலாஷைகள் எல்லாவற்றையும் திருவுள்ளம்பற்றிப் பூர்த்தி செய்துவைக்க ஸித்தமாய் இருந்தான் ஸ்ரீபார்த்தஸாரதி எம்பெருமான்.

காரப்பங்காடு பெருந்தேவித்தாயாரைத் தம்முடைய திருக்குமாரத்திகளுள் ஒருவராகவே கொண்டு இருந்தார் காரப்பங்காடுஸ்வாமி. தம்முடைய திருக்குமாரத்திகள் ஒவ்வொருவருக்கும் கல்யாணத்துக்குச் செலவழித்த தொகையைவிட மேலான தொகையை பெருந்தேவித்தாயாருக்கென்று எடுத்துவைத்து, அதைக்கொண்டு தாயார் ஸந்நிதி முதல்மண்டபத்தைக் கட்டினார் ஸ்வாமி. ஸ்வாமியுடைய தேவிகள் தம்முடைய வைரத்தோடுகளை பெருந்தேவித்தாயாருக்கென்றே ஸமர்ப்பித்துவிட்டார்.

**காரப்பங்காடு ஸ்வாமியின் பொறுமை**

ஒருகால கட்டத்தில் தினமும் காலை மயிலாப்பூரில் உள்ள தம்முடைய திருமாளிகையிலிருந்து திருவல்லிக்கேணிக்கு நடந்தே சென்று, அங்குள்ள திருமணி ஸ்வாமி திருமாளிகையில் திருமணிஸ்வாமி திருக்குமாரர்களுக்கு பகவத்விஷய காலக்ஷேபம் ஸாதித்துவந்தார் நம்ஸ்வாமி. பலமுறை ஸ்வாமி திருமணிஸ்வாமி திருமாளிகைக்கு எழுந்தருளியுடன் திடீரென்று ஸமாச்ரயணம் ஏற்பாடு செய்யப் பட்டிருப்பதால் காலக்ஷேபம் வைத்துக்கொள்ள அவகாசம் இல்லை என்று காலக்ஷேபம் நிறுத்தப்பட்டுவிடும். வெகுதூரம் நடந்துவந்தும் காலக்ஷேபம் நடத்தமுடியாமல் போன ஏமாற்றத்தையும், அத்தால் ஸ்வாமிக்கு ஏற்படும் ச்ரமத்தையும் பார்த்து அவரைச் சேர்ந்த சிலர் வருத்தம் தெரிவித்தால், ஆசார்யபுருஷர்கள் சாஸ்த்ர ஸம்ப்ரதாய விஷயங் கள் நன்றாக அறியவேண்டியவர்கள். இவர்களுக்கு நாம்தான் பொறுமையுடன் இருந்து காலக்ஷேபம் ஸாதிக்கவேண்டும் என்று ஸமாதாநம் அருளிச்செய்வர் நம்ஸ்வாமி.

(தொடரும்)

மண்ணில்பிறந்து மண்ணுகும் மானிடர்க்குக் கண்ணுக்கு விஷயமாகப் பெருமையாலே அந்த ஜலஶயநத்தைவிட்டு ஸ்த2லஶயநத்தை விரும்பி, ‘பாலில் கிடந்ததுவும் பண்டரங்கம் மேயதுவும்’ என்கிறபடியே யாவரும் வந்தடிவணங்க அரங்கநகர் துயிலுவதாகக் கோலி எழுந்தருளியிருக்கிறவளவில், சதுர்முக2 தப:ப2ல நிர்வஹணார்த்த2மாக ஶ்ரீரங்க3விமாநத்தோடே, ஸ்வாஸாத4ாரண தி3வ்யமங்க3ள விக்3ரஹவிஶிஷ்டனுய்க்கொண்டு ப்3ரஹ்மலோகத்திலே எழுந்தருளின பின்பு இக்ஷ்வாகுவினுடைய தபோவ்யாஜத்தாலே, அங்கணெடு மதிள்புடைசூழ் அயோத்தி என்னும் அணிநகரத்திலே எழுந்தருளியிருந்து இக்ஷ்வாகு ப்ரப்4ருதி த3ஶரத2 பர்யந்தமான ராஜாக்களாலும், தயரதர்க்குமகனை தம்மாலும் அர்ச்சிதராய், ராமாவதார சரமத்தில், ‘‘ஶ்ரீமத்3ரங்க3ம் மஹத்3த4ாம ஸத்த்வஜம் ஸபரிச்ச2த3ம்। ப்ரத3த்தம் ராக்ஷஸேந்த்3ராய ப்ரியாய ப்ரியகாரிணே॥’’ என்கிறபடியே செல்வவிபீடணற்கு வேருக நல்லாஞைகையாலே மின்னிலங்கு பூண் விபீடணநம்பிக்கு, கோயிலாழ்வாரோடே தம்மையுபகரித்தருள, அவரும் தம்முடைய படைவீடான லங்கையை நோக்கி எழுந்தருள்வித்துக்கொண்டு போகாநிற்க, கங்கையிற் புனிதமாய காவிரி நடுவில் ஶ்ரீசந்த்3ரபுஷ்கரிணீ தீரப்ரதே3ஶமான புளிநத்திலே எழுந்தருளுவித்த அநந்தரம், அவராலும் எழுந்தருளுவிக்கவொண்ணுதபடி அவ்விடத்திலே திருவுள்ளம் வேர்பற்றி, மன்னுடைய விபீடணனை அநுஸரி(க்3ரஹி?)த்து மதிளிலங்கையேறப் போகவிட்டு, அரவரசப்பெருஞ்சோதி அநந்தன் என்னும் அணிவிளங்குமுயர் வெள்ளையணையை மேவி பரத்வம் போலே ஆஶ்ரயிப்பார்க்கு அந்தரப்பட்டிருத்தல், வ்யூஹம் போலே கடல்கொண்டு கிடத்தல், விப4வம் போலே தாத்காலிகமாயிருத்தல், அந்தர்யாமித்வம் போலே அப்ரத்யக்ஷமாதல் செய்கையன்றிக்கே, ‘வடிவுடை வானோர் தலைவனே’, ‘கடலிடம் கொண்ட கடல்வண்ணு, காகுத்தா கட்கிலீ என்னும்படி பரத்வாதி3களில் உள்ள பரத்வஸௌலப்4யாதி3களை ப்ரகாஶிப்பித்துக்கொண்டு அன்போடு தென்திசை நோக்கி பக்கம்நோக்கியறியாதே தேவரை கடாக்ஷித்துக் கொண்டு பள்ளிகொண்டருள்கிற முகில்வண்ணரான பெரியபெருமாளை, அடியை அடைந்து அருள்சூடியுய்ந்து சொல்மாலைஆயிரமும் அருளிச்செய்தருளின தேவரீர் இப்போது கங்குலும் பகலும் பாடியருள்வதாகத் திருவுள்ளம்பற்றி, ப4ர்த்ருபே4க3ார்த்த2மாக குளித்தொப்பித்துச் செல்லும் ப4ார்யைப்போலே ‘என் திருமகள் சேர்’ என்கிறபடியே விஶ்வபதியான அழகியமணவாளர்க்குத் திரு என்னும் படி லக்ஷ்மீ ஸத்ருஶராகை யாலே அலங்க்ருத ஸர்வக3ாத்ரராய்ச் செல்லவேணும் என்று தத3ர்த்த2மாகத் திருமஞ்ஜநம் செய்ய எழுந்தருளியிருக்கிற இருப்பென்று விண்ணப்பம் செய்யலாயிரா நின்றது.

### எட்டாம் நாள் கவி

परावरेशाङ्घ्रिसरोजसेवा परातिरागादितरान् विहाय।

पुरेप्सितामद्य तदङ्घ्रिवृत्तिं चरन् शठारे! तनुषेऽभिषेकम् ।।

## நம்மாழ்வார் கட்டியங்கள்

பராவரேஶாங்க்$_4$ரி ஸரோஜஸேவா பராதிராக$_3$ாதி$_3$தராந் விஹாய।
புரேப்ஸிதாமத்$_3$ய தத$_3$ங்க்$_4$ரிவ்ருத்திம் சரந் ஶடாரே! தநுஷேऽபி$_4$ஷேகம்॥

நாயிந்தே! 'தேவிமாராவார் திருமகள் பூமி' என்கிறபடியே 'உடனமர்காதல் மகளிர் திருமகள் மண்மகள் ஆயர்மடமகள்' என்கிற தேவிமார் மூவரையும் உடையனாய் 'மற்றமரர் ஆட்செய்வார்' என்கிறபடியே ஏழுலகும் தனிக்கோல் செல்ல வீற்றிருந்தருள்கிற சேர்த்திக்கும் போற்றி என்றுட்செய்கிற அயர்வறுமமரர்களதிபதி யாய், 'மேவியஉலகம் மூன்றவையாட்சி' என்கிறபடியே அந்த நித்யஸூரிகளோபாதி ப்ரகாரதயா ஸேவ்யமான ஆகாரத்தாலே தனக்குத் தகுதியாயிருக்கிற லோகத்ரயத்துக் கும் ஏகநாயகனாய், 'வேண்டுவேண்டுருவம் நின்னுருவம்' என்கிறபடியே ஆஶ்ரிதாதீ$_4$ந மான ஸ்நாந, ஆஸந, ஶயனாதி$_3$களை உடையனான ஸர்வேஶ்வரனுடைய ஸௌஹார்த்த$_3$ விஶேஷத்தாலே ஸஹஜஸார்வஜ்ஞ்யாதி$_3$ ஸத்$_3$கு$_3$ணஸமேதராய் ''என்னால் தன்னை இன்தமிழ் பாடிய ஈசன்'' என்கிறபடியே திறத்துக்கே துப்புரவாம் திருமாலான அவன் தேவரைக்கொண்டு திருவாய்மொழி பாடுவித்த சீரை இறைப்பொழுதில் காலம் பருகி இருக்கச்செய்தேயும் அதில் ஆராமையாலே ''இன்கவிபாடும் பரமகவிகளால் தன் கவி தான் தன்னைப்பாடுவியாது'' என்கிறபடியே வ்யாஸ, பராஶர, வால்மீகி, ஶுக,ஸௌநகாதி$_3$களும், முதலாழ்வார்களுமாகிற பாலேய்தமிழரும், பத்தருமான பரமகவிகளாலே பாடுவியாதே தேவரை ஆம் முதல்வன் இவனென்று நாமுதல் வந்து புகுந்து தூமுதல் பத்தரான தொண்டர்க்கமுதுண்ணச் சொல் மாலைகளை வாய் முதலப்பனாய் தப்புதலறச் சொன்ன உதவிக்கைம்மாறு, என்னுயிரென்ன உற்றெண்ணில்

''இயம் ஸீதா மம ஸுதா ஸஹத$_4$ர்மசரீ தவ।
ப்ரதீச்ச$_2$ சைநாம் ப$_4$த்$_3$ரம் தே பாணிம் க்ருஹ்ணீஷ்வ பாணிநா॥

என்கிறபடியே வேந்தர்தலைவனான சனகராசன் ஏந்துபெருமை இராமனுக்கு காந்தள் முகிழ்விரல் சீதையைக் கடுஞ்சிலை சென்றிறுக்க உதவிக்கைம்மாறாகக் கைபிடித்தாப் போலே தாள்களை எனக்கே தலைத்தலைச்சிறப்பத்தந்த பேருதவிக்கைம்மாறாத்தோள்களை ஆரத்தழுவி என்னுயிரை அறவிலைசெய்தனன் என்கிறபடியே உபகார ஸ்ம்ருதி கொண்டும், மார்பும் தோளுமாகப் பணைக்கையாலே ஆரத்தழுவி அறவிலைசெய்த ஆத்மஸ்வரூபத்தினுடைய அத்யந்த பே$_4$ாக்$_3$யதையையும் அநந்யார்ஹஶேஷத்வத் தையும், அதனுடைய பராகாஷ்டை$_2$யான ததீ$_3$யபாரதந்த்ர்ய பரமபுருஷார்த்த$_2$த்தையும் அவனே ப்ரகாஶிக்கப்பெற்றுடையீர் ஆகையாலே வியன்மூவுலகுபெறினும் போய்த்தானேதானேயானாலும் சுழிபட்டோடும் சுடர்ச்சோதிவெள்ளத்து இன்புற்றிருந் தாலும், அவனடியாரான சிறுமாமனிசரடியே கூடுமிதுவல்லால் பாவியேனுக்குறுமோ என்று அதி$_4$கரித்ததான அந்த புருஷார்த்த$_2$த்தில் ஆத$_3$ராதிஶயத்தையும், வ்யதிரிக்தமான விஷயங்களில் வைத்ருஷ்ண்யத்தையும் விஶதமாக்கியருளின தேவர்

இப்போது திருவத்$_4$யயநவ்யாஜத்தாலே வரையார் மாடமன்னு குருகூரில் திருவீதி$_2$கள் தோறும் சிறப்புடனே புறப்பட்டுலாவியருளி மீண்டெழுந்தருளித் திருமஞ்ஜநம் செய்தருள்வதாக எழுந்தருளியிருக்கிறயிருப்பு இங்ஙனேயிரா நின்றது எங்ஙனே யென்னில்; இருமாநிலம்முன்னுண்டுமிழ்ந்த செங்கோலத்த பவளவாய்ச் செந்தாமரைக்கண் என்னம்மான் பொங்கேழ்புகழ்கள் வாயவாய்ப்புலன் கொள் வடிவென் மனத்ததாய் அங்கேய் மலர்கள் கையவாய் வழிபட்டோட அருளில் இங்கே திரிந்தேற்கு இழுக்குற்றென் என்று ஆபத்ஸக$_2$னுனவன் திருவடிகளில் அகி$_2$ல கரணங்களாலு முண்டான நிகி$_2$ல கைங்கர்யங்களுமே அந்த ப$_4$ாக$_3$வதர்களுக்கு உகப்பாகையாலே பரந்ததெய்வமும் பல்லுலகும் அன்று உடனே விழுங்கி கரந்துமிழ்ந்த திருக்குருகூரதனுள் பரன் திறத்திலே அந்தக் கைங்கர்யத்தைச் சிந்தையாலும், சொல்லாலும், செய்கையினுலும் செய்தருளத் திருவுள்ளம்பற்றி தத$_3$ர்த்த$_2$மாகத் திருமஞ்ஜநம் செய்ய எழுந்தருளியிருக்கிற இருப்பென்று விண்ணப்பம் செய்யலாயிராநின்றது.

**ஒன்பதாம்நாள் கவி**

न्यसनभजज पादावाप्ति वाङ्मात्रगान  प्रणिपतनकराणां मुक्तिरुक्ताऽपि तस्याम् ।

अभिरुचिरहितानां कृष्णवच्छक्तियोग्यं शठमथन! जनानां स्नासि सर्वाघशान्त्यै ।

ந்யஸந ப$_4$ஜந பாத$_3$ாவாப்திவாங் மாத்ரகாந
ப்ரணிபதகராணும்  முக்திருக்தாऽபி தஸ்யாம்।
அபி$_4$ருசிரஹிதாநாம் க்ருஷ்ணவச்ச$_2$க்தியோக்$_3$யம்
சட$_2$மதந! ஜநாநாம் ஸ்நாஸி ஸர்வாக$_4$ஶாந்த்யை॥

நாயிந்தே! ''கொண்டபெண்டிர் மக்களுற்றார் சுற்றத்தவர் பிறரும் கண்டதோடு பட்டதல்லால் காதல் மற்று யாதுமில்லை'' இத்யாதி$_3$களாலே நல்ல புதல்வர், மனையாள் நவையில் கிளை, இல்லம், மாடு இவையனைத்தும் அல்லலென்று ஔபாதி$_4$க ப$_3$ந்து$_4$க்களுடைய அப$_3$ந்து$_4$த்வாதி$_3$களையும், ''எண்டிசையும் கீழும் மேலும் முற்றவும் உண்டபிரான் தொண்டரோமாய் உய்யலல்லாலில்லை கண்டீர் துணை'' இத்யாதி$_3$களாலே ''சேலேய் கண்ணியரும் பெரும்செல்வமும் நன் மக்களும் மேலாத்தாய்தந்தையும் அவரே'' என்று ஸர்வேஸ்வரனுடைய நிருபாதி$_4$க ப$_3$ந்து$_4$த்வாதி$_3$களையும் உபதே$_3$ஶித்தருளி, இப்படி அஸேவ்யஸேவாதி$_3$களான அப்ராப்தவிஷயப்ராவண்யம் கழிகையாலே அநந்தஶாக$_2$மாக நிரந்தராபி$_4$வ்ருத்$_3$த$_4$மான அபி$_4$நிவேஶாதி$_3$ஶயத்தையுடையீராய் ''ஆகம்சேர் நரசிங்கமதாகி'' என்கிறபடியே விருத்$_3$த$_4$மான நரத்வ ஹரித்வங்களைப் பொருத்தின திருத்தத்தாலே அரி பொங்கிக்காட்டுமழகு என்று சீரிய சிங்கமதான வடிவைக்கண்டபோதே ப$_4$யாக்$_3$நி

கொழுந்திலே தும்பிப்பதஞ்செய்த வாளவுணனுடைய உடலே வாடின கோரைகீறினுப் போலே வளர்ந்த வாளுகிராலே அளேந்த கோளரியான அவுணனுள்ளம் பொருந்தி யுறைகிற விளங்கும் சுடர்ச்சோதி உயரத்தொருத்தா என்றேயதுவது என்று ஒருபடிப்படத்திருவுள்ளம்பற்றி நாளேலறியேன் எனக்குள்ளனவென்று நித்யகைங்கர்யத்தைக் கழித்து, வைத்தநாள்வரை எத்தனே என்கிற ப்ரஶ்நத்திற்கு உத்தரம் த$_3$த்தமாவதற்கு முன்னே ஶைதி$_2$ல்யம் பிறந்து மல்லிகை கமழ் தென்றலும் மாலேப்பூசலுமாய் மயங்குகையாலே மரணமானுல் வைகுந்தம் கொடுக்கும் பிரான் என்கிறபடியே சரண, சரணவரண ப$_2$லஸித்$_3$தி$_4$யைத் திருக்கண்ணபுரத்தரணியாளன் கருணேயாலே மரணுவதி$_4$யாக்கித் தந்தருளப்பெற்றுடையீரான தேவரிப்போது திருவத்$_4$யயநோத்ஸவ வ்யாஜத்தாலே புறப்பட்டுலாவியருளி மீண்டெழுந்தருளி மஞ்ஜநவேதி$_3$கா மத்$_4$யத்திலே ஜ்ஞாநமுத்$_3$ரா ஸஹிதராய்க்கொண்டு எழுந்தருளி யிருக்கிறயிருப்பு இங்ஙனே யிராநின்றது எங்ஙனேயென்னில்; ''காலே மாலே கமல மலரிட்டு மாலே நண்ணித் தொழுதெழுமின்'' என்று அர்ச்சநாத்$_3$யங்க$_3$யுக்தமான ப$_4$க்தியையும் அதிலஶக்தர்க்கு ''தனதாளடைந்தார்க்கெல்லாம் சரணமாகும்''என்று ஸ்வப்ரவ்ருத்திநிவ்ருத்தி ரூபையான ப்ரபத்தியையும், அதிலஶக்தர்க்கு ''திருக்கண்ணபுரம் சொல்ல நாளும் துயர் பாடுசாராவே'' என்று அர்ச்சாஸ்த$_2$லத்தினுடைய உச்சாரண மாத்ரத்தையும், ''பாடலான தமிழாயிரத்துள் இப்பத்தும் பாடியாடிப் பணிமின்'' என்று பூர்வோக்த ஸர்வோபாயங்களிலும் அந்வயஶூந்யரானவர்களுக்கு ந்ருத்தப்ரணுமயுக்தமான இப்பத்துப்பாட்டினுடைய கீர்த்தநத்தையும் து$_3$ர்ஜநபீடி$_3$தரான அர்ஜுநாதி$_3$களுக்கு தூ$_3$தனுய் கீ$_3$தாசார்யனேப்போலே அதி$_4$காராநுகு$_3$ணமாக நெறியெல்லாம் எடுத்துரைத்திருக்கச் செய்தேயும் அதில் ஆசையின்றிக்கே ஈசிபோமின் என்பாரளவில் நாசமான பாசத்தாலே நலிவுபடுகிற நீசரான அடியோங்களுடைய ப்$_3$ரபல பாபநிப$_3$ந்த$_4$நமான ஸகலதாபங்களேயும் போக்கி விமலராக்குகைக்காக எழுந்தருளியிருக்கிற இருப்பென்று விண்ணப்பம் செய்யலாயிராநின்றது.

**பத்தாம்நாள் கவி**

पर्यायेण समेधिता भगवता भक्तिः परायाऽपरं

ज्ञानं ते परमा च भक्तिरिति या तत्प्राप्तिरूपा दशा ।

तच्छङ्कां शठकोप! संशमयितुं सप्रत्ययं प्राणिनां

संस्नातः क्रियया दशां विशदयन् तां तामिवाभासि भोः ।।

பர்யாயேண ஸமேதி$_4$தா ப$_4$க$_3$வதா ப$_4$க்தி: பராயா: பரம்
ஜ்ஞாநம் தே பரமா ச ப$_4$க்திரிதி யா தத்ப்ராப்திரூபா த$_3$ஶா।
தச்ச$_2$ங்காம் ஶட$_2$கோப! ஸம்ஶமயிதும் ஸப்ரத்யயம் ப்ராணிநாம்
ஸம்ஸ்நாத: க்ரியயா த$_3$ஶாம் விஶத$_3$யந் தாம் தாமிவாப$_4$ாஸி பே$_4$ா:॥

ப்ரணவாகார விமாநத்தை ப்ரதக்ஷிணம் செய்து, திருவணுக்கன்திருவாசலுக்கு கிழக்குதிக்கில் சிறிதுநேரம் நின்று கொண்டு திருவின்மணாளனை பெரியபெருமாளிடத்திலே ஈடுபட்டவரான உடையவர், எம்பெருமானை மீண்டும் மீண்டும் அநுபவித்து, பின்னர் அவ்வாயிலிலிருந்து வெளியில் எழுந்தருளி, அபராதக்ஷாமண விண்ணப்பத்தை முன்னிட்டுக் கொண்டு அஞ்ஜலிஹஸ்தராய் பலிபீடத்தை அடைந்தவரான அவ்வெம்பெருமானாரைத் துதிக்கிறேன்.

ततो महामण्टपं तदेत्य श्रीरङ्गशायिनः ।
कैङ्कर्यवर्द्धकान् भक्तान् किङ्करांश्चानुमान्य च ।।४३ ।।
श्रीरङ्गशयमुद्वेलं परामृश्योत्तरोत्तरम् ।
कलिजिन्निर्मितं सम्यग्धान्यागारञ्च योगिनः ।।४४ ।।
श्रीगोपुरवरासीनमानम्य नृहरिं ततः ।
श्रीरङ्गराजमहिषीं सेव्यां सर्वात्मभिस्सदा ।।४५ ।।
श्रीशाश्रये च जीवानां प्राप्तां पुरुषकारताम् ।
जननीं सर्वलोकानां श्रियं देवीमुपेत्य च ।।४६ ।।
संसेव्य शिष्यैर्भक्तैश्च मङ्गलाशास्तिपूर्वकम् ।
तीर्थादिकं च स्वीकृत्य परिक्रम्य प्रदक्षिणम् ।।४७ ।।
सहस्रस्तम्भसंयुक्तं नमस्कृत्वा च मण्टपम् ।
स्वीयं मठं समासाद्य सच्छिष्यैः प्रेमपूर्वकम् ।।४८ ।।
व्याख्यानकूटे विमले विद्वज्जननिषेविते ।
पद्मासनस्थं पद्माक्ष पादाब्जन्यस्तमानसम् ।।४९ ।।
प्रसन्नवदनाम्भोजं प्रफुल्लाम्बुजलोचनम् ।
ऊर्ध्वपुण्ड्रैर्विराजन्तमुल्लसद्भिर्मनोहरैः ।।५० ।।
ब्रह्मसूत्रेण शुभ्रेण शोभितं ब्रह्मतेजसा ।
पद्माक्षतुलसीमालापरिष्कृतभुजान्तरम् ।।५१ ।।
त्रिदण्डमण्डितोरस्कं दिव्यज्ञानामृतोदधिम् ।
काषायवस्त्रसंशोभिकटीतटमनोहरम् ।।५२ ।।
श्रीमद्वैष्णवसिद्धान्त प्रतिष्ठापन देशिकम् ।
वेदान्तविद्यां विमलां व्याकुर्वन्तं सदुक्तिभिः ।।५३ ।।

शिष्येभ्योहितकामेभ्यः श्रीशशेषत्वबोधिनीम् ।
भक्तैर्भागवतैश्चापि सेव्यमानं यतीश्वरम् ।।५४ ।।
श्रीभाष्यकारं सेवेऽहं श्रीकान्तानन्दवर्धनम् ।

43. ததோ மஹாமண்ட$_3$பம் ததே$_3$த்ய ஸ்ரீரங்க$_3$ஶாயிந:।
கைங்கர்யவர்த்$_3$த$_4$காந் ப$_4$க்தாந் கிங்கராந்ஶ்சாநுமாந்ய ச॥
44. ஸ்ரீரங்க$_3$ஶயமுத்$_3$வேலம் பராம்ருஶ்யோத்தரோத்தரம்।
கலிஜிந்நிர்மிதம் ஸம்யக்$_3$த$_4$ாந்யாக$_3$ாரஞ்ச யோகி$_3$ந:॥
45. ஸ்ரீகோ$_3$புரவராஸீநமாநம்ய ந்ருஹரிம் தத:।
ஸ்ரீரங்க$_3$ராஜமஹிஷீம் ஸேவ்யாம் ஸர்வாத்மபி$_4$ஸ்ஸதா$_3$॥
46. ஸ்ரீஶாஶ்ரயே ச ஜீவாநாம் ப்ராப்தாம் புருஷகாரதாம்।
ஜநநீம் ஸர்வலோகாநாம் ஶ்ரியம் தே$_3$வீமுபேத்ய ச॥
47. ஸம்ஸேவ்ய ஶிஷ்யைர்ப$_4$க்தைஶ்ச மங்க$_3$ளாஶாஸ்தி பூர்வகம்।
தீர்த்த$_2$ாதி$_3$கம் ச ஸ்வீக்ருத்ய பரிக்ரம்ய ப்ரத$_3$க்ஷிணம்॥
48. ஸஹஸ்ரஸ்தம்ப$_4$ஸம்யுக்தம் நமஸ்க்ருத்வா ச மண்டபம்।
ஸ்வீயம் மட$_2$ம் ஸமாஸாத்$_3$ய ஸச்சி$_2$ஷ்யை: ப்ரேமபூர்வகம்॥
49. வ்யாக்$_2$யாநகூடே விமலே வித்$_3$வஜ்ஜநநிஷேவிதே।
பத்$_3$மாஸநஸ்த$_2$ம் பத்$_3$மாக்ஷ பாத$_3$ாப்$_3$ஜந்யஸ்த$_2$மாநஸம்॥
50. ப்ரஸந்நவத$_3$நாம்பே$_4$ாஜம் ப்ரபு$_2$ல்லாம்பு$_3$ஜலோசநம்।
ஊர்த்$_4$வபுண்ட்$_3$ரைர்விராஜந்தமுல்லஸத்பி$_4$ர் மநோஹரை:।
51. ப்$_3$ரஹ்மஸூத்ரேண ஶுப்$_4$ரேண ஶோபி$_4$தம் ப்$_3$ரஹ்மதேஜஸா।
பத்$_3$மாக்ஷதுலஸீமாலாபரிஷ்க்ருதபு$_3$ஜாந்தரம்॥
52. த்ரித$_3$ண்ட$_3$மண்டி$_3$தோரஸ்கம் தி$_3$வ்யஜ்ஞாநாம்ருதோத$_3$தி$_4$ம்।
காஷாயவஸ்த்ரஸம்ஶோபி கடீதடமநோஹரம்॥
53. ஸ்ரீமத்$_3$வைஷ்ணவ ஸித்$_3$த$_4$ாந்த ப்ரதிஷ்ட$_2$ாபந தே$_3$ஶிகம்।
வேத$_3$ாந்தவித்$_3$யாம் விமலாம் வ்யாகுர்வந்தம் ஸது$_3$க்திபி$_4$:॥
54. ஶிஷ்யேப்$_4$யோ ஹிதகாமேப்$_4$ய: ஸ்ரீஶஶேஷத்வபோ$_3$தி$_4$நீம்।
ப$_4$க்தைர் ப$_4$ாக$_3$வதைஶ்சாபி ஸேவ்யமாநம் யதீஶ்வரம்॥
55 ஸ்ரீப$_4$ாஷ்யகாரம் ஸேவேऽஹம் ஸ்ரீகாந்தாநந்த$_3$வர்த$_4$நம்।

பின்பு பெரியதிருமண்டபத்தை அடைந்து கைங்கர்யம் செய்பவர்களையும், கைங்கர்யத்திற்குத் துணைபுரிபவர்களையும் ஸத்கரித்து, ஸ்ரீரங்கஶாயியான எம்பெருமானை மேன்மேலும் த்யாநித்து, திருமங்கையாழ்வாரால் நிர்மாணிக்கப்பட்ட திருக்கொட்டாரத்தைப்பார்வையிட்டு, மேட்டழகிய

சிங்கரை வணங்கி, அனைவராலும் எப்போதும் வணங்கத்தக்கவளாய், சேதநர்கள் எம்பெருமானை ஆஶ்ரயிக்குமளவில் புருஷகாரமாகிற தன்மையை யடைந்தவளாய், அனைத்துலகினர்க்கும் தாயான பெரியபிராட்டியாரை நன்கு வணங்கி, ஶிஷ்யர்களுடனும் பக்தர்களுடனும் மங்களாஶாஸநம் செய்து, தீர்த்தம் முதலானவற்றைப் பெற்றுக்கொண்டு ப்ரதக்ஷிணம் செய்து ஆயிரங்கால் மண்டபத்தையும் வணங்கி தம்முடைய மடத்தை அடைந்து, நல்ல ஶிஷ்யர்களுடன் வித்வஜ்ஜநங்கள் கூடியிருக்கிற குற்றமற்றதான வ்யாக்யாந கூடத்தில் பத்மாஸநத்தில் எழுந்தருளியிருப்பவரும், தாமரைக் கண்ணனை எம்பெருமானுடைய திருவடித்தாமரைகளில் ஈடுபட்ட நெஞ்சையுடையவரும், குளிர்ந்த திருமுகத்தாமரையையுடையவரும், மலர்ந்த தாமரைபோன்ற திருக்கண்களை யுடையவரும், மனத்தையீர்க்கும் ஊர்த்வபுண்ட்ரத்தால் அழகாக விளங்குபவரும், வெண்மையான யஜ்ஞோபவீதத்தாலும் ப்ரஹ்ம தேஜஸ்ஸாலும் ப்ரகாஶிப்பவரும், தாமரை மணிமாலை, துளஸீமாலை இவைகளால் விளங்குகின்ற திருத்தோள்களையுடையவரும், த்ரிதண்டத்தால் அலங்கரிக்கப்பெற்ற திருமார்பையுடையவரும், திவ்யஜ்ஞாநாம்ருதக்கடல் போன்றவரும் காஷாய வஸ்த்ரத்தால் ஸுஶோபிதமான கடிதடத்தை யுடையவரும், ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தை நிலைநிறுத்திய ஆசார்யரும், நன்மையை விரும்பும் ஶிஷ்யர்களுக்கு 'எம்பெருமானுக்கு ஜீவாத்மாக்கள் அனைவரும் அடிமைப் பட்டவர்கள்' என்பதைத் தெரிவிக்கும் குற்றமற்ற வேதாந்தவித்யையை தம்முடைய நல்வார்த்தைகளால் விவரிப்பவரும், திருமகள்கொழுநனின் திருவுள்ளத்தை உகப்பிப்பவரும், பக்தர்களாலும் பாகவதர்களாலும் ஸேவிக்கப்படா நின்றவரும் யதிகளின் தலைவருமான ஸ்ரீபாஷ்யகாரரை வணங்குகிறேன்.

ततः श्रीपादतीर्थैः स्वैश्शिष्याणां च महात्मनाम् ।।
५६. सतां सफलयन्तं तं संश्रये यतिशेखरम् ।

*தத: ஸ்ரீபாத$_3$தீர்த்தை$_2$: ஸ்வைஶ்ஶிஷ்யாணாம் ச மஹாத்மநாம்।।*
*56. ஸதாம் ஸப$_2$லயந்தம் தம் ஸம்ஶ்ரயே யதிஶேக$_2$ரம்।*

பிறகு, ஸ்ரீபாததீர்த்தத்தால் தம்முடைய ஶிஷ்யர்கள், பெரியோர்கள், நல்லோர்கள் ஆகியோரை ஸபலமடையச் செய்கிற அந்த யதிராஜரை அடைகிறேன்.

ततो माध्याह्निकं कृत्यमनुष्ठाय यथाविधि ।।

५७. स्वीयं कुलधनं श्रीशमाराध्य करुणाकरम् ।
श्रीमद्रङ्गाधिराजस्य पूजां माध्याह्निकीं शुभाम् ।।

४८. संजातां भक्तितः कृत्वा भक्तैर्यतिवरैस्सह ।
हार्द्धपूरुष भोग्यं चेत्यनुयागं विधाय च ।।

५९. प्रसादपात्रं कु र्वाणं भक्तवर्गं यथोचितम् ।
प्रपद्ये भक्तवर्गाणां पारिजातं यतीश्वरम् ।।

*ததோ மாத்$_4$யாஹ்நிகம் க்ருத்யமநுஷ்டா$_2$ய யதா$_2$விதி$_4$।*

*57. ஸ்வீயம் குலத$_4$நம் ஸ்ரீஶமாராத்$_4$ய கருணாகரம்।*
*ஸ்ரீமத்$_3$ரங்க$_3$ாதி$_4$ராஜஸ்ய பூஜாம் மாத்$_4$யாஹ்நிகீம் ஶுபா$_4$ம்।।*

*58. ஸஞ்ஜாதாம் ப$_4$க்தித: க்ருத்வா ப$_4$க்தைர்யதிவரைஸ்ஸஹ।*
*ஹார்த்$_3$த$_4$ பூருஷபோ$_4$க்$_3$யம் சேத்யநுயாக$_3$ம் விதா$_4$ய ச।।*

*59. ப்ரஸாத$_3$பாத்ரம் குர்வாணம் ப$_4$க்தவர்க்க$_3$ம் யதோ$_2$சிதம்।*
*ப்ரபத்$_3$யே ப$_4$க்தவர்க்கா$_3$ணம் பாரிஜாதம் யதீஶ்வரம்।।*

*பின்னர், விதிப்படி மதியத்தில் செய்யவேண்டிய அநுஷ்டாநத்தைச் செய்துமுடித்து, தம்முடைய குலதநமாய் திருவின்மணாளனை கருணாகரனுக்கு திருவாராதநம் செய்து, மதியத்தில் பெரியபெருமாளுக்குச் செய்யவேண்டிய சிறந்த திருவாராதநமான பெரியஅவசரத்தை பக்தியுடன் பக்தர்களுடனும், ஜீயர்களுடனுமிருந்து செய்வித்து, ஹ்ருதயத்திலுள்ள எம்பெருமானுக்கு போக்யமானது என்று அநுயாகத்தைச் செய்து (எம்பெருமான் கண்டருளின ப்ரஸாதத்தை ஸ்வீகரித்து), தக்கபடி அடியார்கள் குழாங்களை ப்ரஸாதபாத்ரமாகச் செய்து தொண்டகட்குப் பாரிஜாதம் போன்றிருப்பவரான யதிராஜரை அடைகிறேன்.*

६०. ततश्चैकान्तमाश्रित्य सन्निविष्टं कृताञ्जलिम् ।
श्रीभूपतेश्च चरणौ चिन्तयन्तं भजामि तम् ।।

*60. ததஶ்சைகாந்தமாஶ்ரித்ய ஸந்நிவிஷ்டம் க்ருதாஞ்ஜலிம்।*
*ஸ்ரீபூ$_4$பதேஶ்ச சரணௌ சிந்தயந்தம் ப$_4$ஜாமி தம்।।*

*பின்னர் தனியானதோரிடத்திற்கெழுந்தருளி, கூப்பிய கைகளையுடையராய், திருமகள் மற்றும் மண்மகள் நாயகனான எம்பெருமானுடைய*

திருவடியிணையைச் சிந்தித்துக்கொண்டிருப்பவரான அந்த எம்பெருமானாரை பஜிக்கிறேன்.

६१. ततश्शठारियोगीन्द्रसूक्त्यर्थानुभवैर्मुहुः ।

भक्तानां भगवद्भक्तिं वर्द्धयन्तं नमामि तम् ।।

61. ததஶ்ஶட₂ாரியோகீ₃ந்த்₃ரஸூக்த்யர்த்த₂ாநுப₄வைர்முஹு:।
ப₄க்தாநாம் ப₄க₃வத்₃ப₄க்திம் வர்த்₃த₄யந்தம் நமாமி தம்।।

பின்பு, ஶடகோபமுனிவரான நம்மாழ்வாரின் திருவாய்மொழியர்த்தாநுபவத்தால் (பகவத்விஷய காலக்ஷேபத்தால்) அடியார்களுக்கு எம்பெருமானிடத்தில் பக்தியை வளர்ப்பவரான அந்த எம்பெருமானாரை வணங்குகிறேன்.

६२. ततस्सायन्तनं कर्म कृत्वा श्रीरङ्गशायिनम् ।

ध्यात्वा प्रपद्य देवेशमाराध्य स्वीयमच्युतम् ।।

६३. वेदान्तवाक्यतत्त्वार्थैर्विमलज्ञानसंपदः ।

बोधयन्तं निजान् भक्तान् पुण्यश्लोकं नमामि तम् ।।

62. ததஸ்ஸாயந்தநம் கர்ம க்ருத்வா ஸ்ரீரங்க₃ஶாயிநம்।
த்₄யாத்வா ப்ரபத்₃ய தே₃வேஶமாராத்₄ய ஸ்வீயமச்யுதம்।।

63. வேத₃ாந்தவாக்யதத்த்வார்த்தை₂ர் விமலஜ்ஞாநஸம்பத₃:।
போ₄தா₄யந்தம் நிஜாந் ப₄க்தாந் புண்யஶ்லோகம் நமாமி தம்।।

பிறகு, மாலைவேளையில் செய்யவேண்டிய அநுஷ்டாநத்தைச் செய்து, திருவரங்கத்தில் பள்ளிகொண்டுள்ள எம்பெருமானை த்யாநித்து, தம்முடைய ஆராத்யதெய்வமாய், அடியார்களை நழுவவிடாதவனை தேவப்பெருமாளைக் கிட்டித் திருவாராதநம் செய்து, உபநிஷத்வாக்யங்களின் உண்மைப் பொருளாலே குற்றமற்ற ஜ்ஞாநத்தைச் செல்வமாக உடையவர்களான தம்முடைய அடியார்களுக்கு போதிப்பவரும், புண்யமான கீர்த்தியையுடையவருமான அந்த எம்பெருமானாரை வணங்குகிறேன்.

६४. ततः श्रीशेषपर्यङ्के शयनं रङ्गशायिनः ।

सर्वोपचारसहितं योगनिद्रात्मकं हरेः ।।

६५. श्रुत्वा श्रीमति पर्यङ्के सौम्ये कृष्णाजिनात्मके ।

संवाह्यमानचरणं सच्छिष्यैश्च गुरूत्तमैः ।

६६. पत्युः श्रियः प्रसादेन भगवद्योगमास्थितम् ।
भगवत्प्राप्तिघटकं स्वाश्रितानां महात्मनाम् ।।

६७. श्रीभाष्यकारं यमिनं यतिराजं दयाम्बुधिम् ।
प्रपन्नजनकूटस्थं प्रपद्ये भक्तवत्सलम् ।।

*64.* *தத: ஸ்ரீஶேஷபர்யங்கே ஶயநம் ரங்க$_3$ஶாயிந:।*
*ஸர்வோபசாரஸஹிதம் யோக$_3$நித்$_3$ராத்மகம் ஹரே:।।*

*65.* *ஶ்ருத்வா ஸ்ரீமதி பர்யங்கே ஸௌம்யே க்ருஷ்ணாஜிநாத்மகே।*
*ஸம்வாஹ்யமாநசரணம் ஸச்சி$_2$ஷ்யைஶ்ச கு$_3$ருத்தமை:।।*

*66.* *பத்யு: ஶ்ரிய: ப்ரஸாதே$_3$ந ப$_4$க$_3$வத்$_3$யோக$_3$மாஸ்தி$_2$தம்।*
*ப$_4$க$_3$வத்ப்ராப்திக$_4$டகம் ஸ்வாஶ்ரிதாநாம் மஹாத்மநாம்।।*

*67.* *ஸ்ரீப$_4$ாஷ்யகாரம் யமிநம் யதிராஜம் த$_3$யாம்பு$_3$தி$_4$ம்।*
*ப்ரபந்நஜடகூடஸ்த$_2$ம் ப்ரபத்$_3$யே ப$_4$க்தவத்ஸலம்।।*

*பின்பு திருவநந்தாழ்வானுகிற படுக்கையில் எல்லா உபசாரங்களுடன் திருவரங்கத்தெம்பெருமான் கண்வளர்ந்தருளினுன் என்று கேட்டு, அழகிய மெத்தென்ற மான்தோலாலாகிய படுக்கையில் ஆசார்யோத்தமர்களாகிற நல்ல ஶிஷ்யர்களால் திருவடிவருடப்பெற்றவராய், ஶ்ரிய:பதியான எம்பெருமானுடைய திருவருளாலே பகவத் த்யாநத்தை அடைந்தவராய், தன்னையடைந்த பெரியோர்கள் எம்பெருமானையடைவதற்கு கடகக்ருத்யம் செய்பவராய், ஸ்ரீபாஷ்யத்தையருளிச்செய்தவராய், யதிகளின் தலைவராய், கருணைக்கடலாய், ப்ரபந்நஜநங்களின் தலைவராய், அடியார்களிடம் அன்பு பூண்டவராயுள்ள எம்பெருமானுரைத் தஞ்சமாக அடைகிறேன்.*

६८. शेषांशेनावतीर्णाय श्रीरामानुजयोगिने ।
गुरूणां गुरवे भूयान्नित्यश्रीर्नित्यमङ्गलम् ।।

*68.* *ஶேஷாம்ஶேநாவதீர்ணாய ஸ்ரீராமாநுஜயோகி$_3$நே।*
*கு$_3$ருணாம் கு$_3$ரவே பூ$_4$யாந்நித்யஸ்ரீர்நித்யமங்க$_3$ளம்।।*

*ஆதிஶேஷாம்ஶமாகத் திருவவதரித்தவராய், ஆசார்யர்களுக்குமாசார்யரான ஸ்ரீராமாநுஜமுனிவருக்கு எப்பொழுதும் மங்களமானது உண்டாகக்கடவது.*

६९. श्रीमतीं यतिराजस्य दिनचर्यामिमां पठन् ।
प्राप्नुयात्परमां भक्तिं भाष्यकारपदाब्जयोः ।।

*69. ஸ்ரீமதிம் யதிராஜஸ்ய தி$_3$நசர்யாமிமாம் பட$_2$ந்।*
*ப்ராப்நுயாத்பரமாம் ப$_4$க்திம் ப$_3$ாஷ்யகார பத$_3$ாப்$_3$ஜயோ:॥*

*யாவரொருவர் எம்பெருமானரின் இந்த, சிறந்ததான திநசர்யையைப் படிக்கிருரோ, அவர் ஸ்ரீபாஷ்யகாரருடைய திருவடித்தாமரைகளில் மேலான பக்தியை அடைவர்.*

७०. श्रीमद्रङ्गे महति नगरे नित्यवासी महात्मा ।
त्रय्यन्तार्थस्थितिमुपदिशन् भूतले पुण्यकीर्तिः ।
श्रीमान् रङ्गेश्वरचरणयोर्मङ्गलानि प्रयुञ्जन् ।
शेषांशेन प्रथितविभवो भाति रामानुजार्यः ।।

## इति श्रीयतिपतिदिनचर्या संपूर्णा

*70. ஸ்ரீமத்$_3$ரங்கே$_3$ மஹதி நக$_3$ரே நித்யவாஸீ மஹாத்மா।*
*த்ரய்யந்தார்த்த$_2$ஸ்தி$_2$திமுபதி$_3$ஶந் பூ$_4$தலே புண்யகீர்த்தி:॥*
*ஸ்ரீமாந் ரங்கே$_3$ஶ்வரசரணயோர் மங்க$_3$ளாநி ப்ரயுஞ்ஜந்*
*ஶேஷாம்ஶேந ப்ரதி$_2$தவிப$_4$வோ ப$_4$ாதி ராமாநுஜார்ய:॥*

***ஸ்ரீயதிபதிதி$_3$நசர்யா முற்றிற்று.***

*திருவரங்கமாநகரிலே நித்யமாக வஸிப்பவராய், புண்யமான கீர்த்தியையுடையவராய், ஆதிஶேஷாம்ஶத்தால் ப்ரஸித்தமான வைபவத்தை உடையவராய், மஹாத்மாவான உடையவர், நிலவுலகில் வேதாந்தார்த்தங்களை உபதேஶித்துக் கொண்டும் பெரியபெருமாளுடைய திருவடிகளுக்கு மங்களங்களைச் செய்துகொண்டும் விளங்குகிருர்.*

## கேள்வி – பதில்

தொடர்ச்சி டிஸம்பர் 2009

அதனாலேயே ஜீயர்நாயனாரின் தனியனில் பூர்வாஶ்ரமத்திலிருந்த உறவு கூறப்படுகிறது என்று நாம் உணரவேண்டும். பரமாசார்யரான ஆளவந்தார் எம்பெருமானிடம் 'தம்முடைய பிதாமஹரான (பாட்டனாரான) ஸ்ரீமந்நாதமுனிகளின் உறவையிட்டுத் தம்மைக் கடாக்ஷிக்க வேண்டும்' என்றதையும் நான் நினைவில் கொள்ளவேண்டும்.

அக்ருத்ரிமத்வச்சரணாரவிந்த$_3$ ப்ரேமப்ரகர்ஷாவதி$_4$மாத்மவந்தம் ।

பிதாமஹம் நாத$_2$முநிம் விலோக்ய ப்ரஸீத$_3$மத்$_3$வ்ருத்தமசிந்தயித்வா॥

[எம்பெருமானே! என்னுடைய நடத்தையை நினைக்காமல், உன்னுடைய திருவடித்தாமரைகளில் இயற்கையாயிருக்கும் மேலான அன்பிற்கு எல்லைநிலமாயிருப்பவரும், ஆத்ம ஸ்வரூபத்தை உணர்ந்தவரும், என்னுடைய பாட்டனாருமாகிய நாதமுனிகளைக் கடாக்ஷித்து அடியேனை மன்னித்தருளவேண்டும்.] என்றன்றோ ஆளவந்தார் ஸ்தோத்ரரத்நத்தை நிறைவுபடுத்தினார். இதிலிருந்தும் ஸ்ரீவைஷ்ணவர்களின் தேஹஸம்பந்தம் உத்தேஶ்யமே என்பது நன்கு விளங்குகிறது.

''வந்தே கோ$_3$விந்த தாதௌ'' (ப$_4$க$_3$வத்$_3$கு$_3$ணத$_3$ர்ப்பண மங்க$_3$ளஶ்லோகம்) [அடியேனது ஆசார்யர்களான கோவிந்தரையும்(எம்பாரையும்), திருத்தகப்பனாரையும் (கூரத்தாழ்வானையும்) வணங்குகிறேன்.] என்றார் ஸ்ரீபராஶரபட்டர். இவ்விடத்தில் பட்டர் கூரத்தாழ்வானோடு தமக்குண்டான தேஹஸம்பந்தத்தைத் தெரிவித்துள்ளதனை நாம் மறத்தல் கூடாது. இதிலிருந்து பந்துக்களான ஸ்ரீவைஷ்ணவர்கள் அத்யந்தம் ஆதரணீயர் என்பது தெளிவு.

சரமோபாயநிர்ணயம் என்ற க்ரந்தத்தைத் தொடங்கும்போது பெரியவாச்சான் பிள்ளையோடு தமக்குண்டான உறவைக் குறிப்பிட்டுள்ளார் நாயனாராச்சான்பிள்ளை.

அஸ்மஜ்ஜநககாருண்ய ஸுத$_4$ாஸந்து$_4$க்ஷிதாத்மவாந்।

கரோமி சரமோபாயநிர்ணயம் மத்பிதா யத$_2$ா॥

[அடியேனுடைய தந்தையாரான பெரியவாச்சான்பிள்ளையினுடைய கருணையமுதத்தினால் உயிர்ப்பிக்கப்பட்ட ஆத்மாவையுடைய அடியேன், எந்தையார் அருளிய முறையிலே சரமோபாயநிர்ணயத்தைச் செய்கிறேன்.]

இப்படி ஆளவந்தார், பட்டர், நாயனாராச்சான்பிள்ளை முதலான ஆசார்யர்கள் தங்களுடைய உறவினர்களின் உறவை உயர்வாகக் கருதியதுகொண்டு ஸ்ரீவைஷ்ணவர்களான உறவினர்களின் ஏற்றத்தை நாம் நன்குணரலாம்.

திருப்பாவையில் – திருவாய்ப்பாடியிலுள்ள கோபிமார்களுக்கு திருப்பள்ளியெழுச்சி பாடிய நாய்ச்சியார் 'நற்செல்வன் தங்காய் – எழுந்திராய்' என்று சொல்லி ஒருத்தியை எழுப்புகிறாள். மூவாயிரப்படி வ்யாக்யானத்தில் பெரியவாச்சான்பிள்ளை ''க்ருஷ்ணனைப் பிரியாதே இளையபெருமாளைப் போலேயிருப்பானொருவன் தங்கையாகையாலே ஶ்லாக்$_4$யையாயிருப்பாளொருத்தியை எழுப்புகிறார்கள்'' என்றருளிச்செய்துள்ளார்.

நற்செல்வன் என்பவன் எப்போதும் க்ருஷ்ணனுக்கு கைங்கர்யம் செய்பவன். அவனுக்கு தங்கையாகப் பிறந்தபடியாலே பெருமை உண்டாயிற்று இக்கோபிகைக்கு. 'பிள்ளாய்', 'பேய்ப்பெண்ணே', 'கோதுகலமுடைய பாவை' என்று அந்தந்த கோபிமார்களின் தன்மைகளையிட்டு அவர்களை அழைத்த ஆண்டாள், இங்கு உறவையிட்டு அழைப்பதை நோக்குங்கால், கைங்கர்யபரர்களின் உறவு சிறப்பையளிக்குமென்று தேறுகிறதன்றோ. இவ்வாறிருக்க உறவினர்களனைவரையும் கைவிடவேண்டுமென்ற பேச்சுக்கிடமேது?

*உத்ஸவகாலங்களில் வீதிப்புறப்பாடுகண்டு மீண்டும் கோயிலுக்கு எழுந்தருள்வதுமான நடையழகுகள் கண்ணைக்கவர்வனவாக உள்ளன. இப்படிப் பலபடியாகப் பேசுவதென்? தேவரீரது யௌவநச்செருக்கு உள்ளிட்ட விஷங்களெல்லாம் அடியோங்களுடைய நெஞ்சுகளைக் குளரச்செய்கின்றன.*

*73. ஆயத்கிரீடமலிகோல்லஸதூ3ர்த்4வபுண்ட்3ரம்*
*ஆகர்ணலோசநமநங்குஶகர்ணபாஶம்।*
*உத்பு2ல்லவக்ஷஸமுத3ாயுத4ப3ாஹுமர்ஹந்*
*நீவிஞ்ச ரங்க3பதிமப்3ஜபத3ம் ப4ஜாம:।।*

**விளக்கவுரை:** *திருமுடிதொடங்கி திருவடி அளவாக அநுபவிக்கிறார் இதில். நம்பெருமாள் ''முடிச்சோதியாய் உனது முகச்சோதி மலர்ந்ததுவோ'' என்னலாம்படி நீண்ட கிரீடத்தை அணிந்துகொண்டிருக்கிறார். நெற்றியிலே அழகுற்று விளங்கும் ஊர்த்வபுண்ட்ரத்தை அணிந்து கொண்டிருக்கிறார். கரியவாகிப்புடைபரந்து காதளவும் நீண்ட திருக்கண்களை உடையவராய் உள்ளார். கண்களுக்காவது வளர்வதற்கு இடையூறாக மூக்கு உள்ளது. எந்தவிதமான தட்டுத்தடங்கலுமின்றி வளர்ந்துள்ள நீண்ட காதுகளையுடையவ ராய் உள்ளார். விசாலமான திருமார்பையும், சங்கு, சக்கரம் முதலிய திவ்யாயுதங்களை ஏந்தி நிற்கும் திருக்கைகளையும் உடையவராகவுள்ளார். அரைக்கேற்ற வகையில் பொருத்தமாக தரித்திருக்கும் வஸ்த்ரத்தை உடையவராயும், தாமரைபோன்ற திருவடிகளை உடையவராயும் உள்ளார். அத்தகைய அழகிய மணவாளனை ஸேவிக்கிறோம்.*

*74. அப்3ஜந்யஸ்தபத3ாப்3ஜமஞ்சிதகடீஸம்வாதி3 கௌஶேயகம்*
*கிஞ்சித் தாண்ட3வக3ந்தி4ஸம்ஹநநகம் நிர்வ்யாஜ மந்த3ஸ்மிதம்।*
*சூட3ாசும்பி3 முக2ாம்பு3ஜம் நிஜபு4ஜாவிஶ்ராந்த தி3வ்யாயுத4ம்*
*ஸ்ரீரங்கே3 ஶரத3ஶ்ஶதம் தத இத: பஶ்யேம லக்ஷ்மீஸக2ம்।।*

**விளக்கவுரை:** *இந்தச்லோகமும் பெருமாளது அவயவ அமைப்பைப் பேசுகிறது. திவ்யமங்கள விக்ரஹத்தில் திருவடிகளுக்கு ஆதாரமாயுள்ள பீடம் ஆஸநபத்மம் எனப்படும். அதில் அழுந்திய திருவடித்தாமரைகளை உடையவரும், அழகிய இடுப்பிற்குப்பாங்கான அழகிய திருப்பரியட்டத்தை*

(வஸ்த்ரத்தை) உடையவரும், அடியார்களைக் கண்ட ஆநந்தத்தாலே சற்றே நடனமாடுபவர் போல விளங்கும் திருமேனியை உடையவரும், செயற்கையாக அல்லாது இயற்கையாகவே உள்ள புன்முறுவலை உடையவரும், கிரீடத்தோடு அணைந்த திருமுகமண்டலத்தை உடையவரும், விரோதிகளை அழித்தலாகிய செயலைச் செய்து முடித்துவிட்டபடியாலே செயலற்று இளைப்பாறி நிற்கின்ற திவ்யாயுதங்களைக் கொண்ட திருக்கைகளை உடையவருமான நம்பெருமாளை ஸ்ரீரங்கத்தில் இன்னம் ஒரு நூற்றாண்டளவும் அங்குமிங்கும் ஸேவிக்கக்கடவோமாக. பக்தி மிகுதியாலே பட்டர் பார்க்குமிடமெல்லாம் உருவெளித்தோற்றமாக நம்பெருமாளைக் காண்கிறார் என்பது கருத்து.

75.அக்$_3$ரே தார்க்ஷ்யேண பஶ்சாத$_3$ஹிபதிஶயநேநாத்மநா பார்ஶ்வயோஶ்ச
ஸ்ரீபூ$_4$மிப்$_4$யாமத்ருப்த்யா நயநசுலகநை: ஸேவ்யமாநாம்ருதௌக$_4$ம்।
வக்த்ரேணாவிஸ்ஸ்மிதேந ஸ்பு$_2$ரத$_3$ப$_4$யக$_3$த$_3$ா ஶங்க$_2$சக்ரைர்பு$_4$ஜாக்$_3$ரை:
விஶ்வஸ்மை திஷ்ட$_2$மாநம் ஶரணமஶரணா: ரங்க$_3$ராஜம் ப$_4$ஜாம:॥

**விளக்கவுரை:** உத்ஸவமூர்த்தியாகிய நம்பெருமாளுக்கு முன்னாலே கருடன் வீற்றிருக்க, பின் புறத்தில் மூலவராகிய பெரியபெருமாள் பாம்பணைமெத்தையிலே பள்ளிகொண்டிருக்க, இரண்டு பக்கத்திலும் திருமகள், நிலமகள் இவர்களால் போதுமென்று எண்ணமின்றி பெருமாளது அழகாகிய அமுதவெள்ளத்தைக் கண்ணாரக்கண்டு பருகிக்கொண்டிருப்பவராயும், புன்முறுவல்பூத்த திருமுகமண்டலத்தை உடையவராயும், ஒருகை அபயமுத்திரையாகவும், மற்றைய மூன்று கைகளால் சங்கு, சக்கரம், கதை இவற்றை தரித்திருப்பவராயும், அடியார்க்கு அருள்பாலிப்பதற்காகவே இங்கே படுகாடுகிடக்கிறேன் என்று எல்லார்க்கும் தம் திருவுள்ளக் கருத்தை வெளிப்படுத்துபவராயும் உள்ள நம்பெருமாளை புகலொன்றில்லாத நாம் சரணமடைகிறோம்.

76. ஆர்த்தாபாஶ்ரயமர்த்தி$_2$கல்பகமஸஹ்யாக$_3$ஸ்கரக்ஷ்மாதலம்
ஸத்$_3$யஸ்ஸம்ஶ்ரிதகாமதே$_4$நுமபி$_4$யத்ஸர்வஸ்வமஸ்மத்$_3$த$_4$நம்।
ஸ்ரீரங்கே$_3$ஶ்வரமாஶ்ரயேம கமலாசக்ஷுர்மஹீஜீவிதம்
ஸ்ரீரங்கே$_3$ ஸ ஸூக$_2$ாகரோது ஸூசிரம் த$_3$ாஸ்யம் ச த$_4$த்தாம் மயி॥

அநந்யார்ஹஶேஷத்வம் குலையாமைக்கு, ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவரும் எம்பெருமானுக்கு ஶரீரமாயிருப்பதே காரணமென்று கொண்டால், 'யஸ்யாத்மா ஶரீரம், யஸ்ய ப்ருதி$_2$வி ஶரீரம்' (ப்$_3$ருஹ) (எவனுக்கு ஜீவாத்மா ஶரீரமோ, எவனுக்கு பூ$_4$மி ஶரீரமோ) என்று சேதநர்களோடு, அசேதநங்களோடு வேற்றுமையில்லாமல் எல்லாம் எம்பெருமானுக்கு ஶரீரமாகவன்றோ யிருப்பது, அப்படியானால் ஜீவாத்மாக்கள் அனைவருக்கும் அடிமைப் பட்டிருக்கவேண்டிவருமே எனில்; அனைவருமே எம்பெருமானுக்கு ஶரீரமாயிருந்தபோதிலும், அவனுக்கு நாம் ஶரீரமாயடிமைப்பட்டிருப்பவர், ஆத்மாவான ஸர்வேஶ்வரன் நமக்கு ஸ்வாமி' என்கிற ஜ்ஞாநமில்லாமல் அஹங்காரமமகாரங்களாகிற குற்றமுள்ளவர்களாய் இயற்கையிலேயே எல்லா உறவுமாயிருக்கும் ஸர்வேஶ்வரனையும் 'இல்லை' என்று சொல்லுமவர் களாயிருப்பதோடல்லாமல் எம்பெருமானையும்

க்ஷிபாம்யஜஸ்ரமஶுப$_4$ாந் ஆஸுரீஷ்வேவ யோநிஷு (கீ$_3$தை 16–19) (அமங்களமாயிருக்கும் அவர்களை நான் அஸுரப்பிறவிகளிலேயே தள்ளுகிறேன்.),

மத்$_3$ப$_4$க்தம் ஶ்வபசம்வாபி நிந்த$_3$ாம் குர்வந்தி யே நரா:।
பத்$_3$மகோடிஶதேநாபி ந க்ஷமாமி வஸுந்த$_4$ரே॥ ()

(பூ$_4$மி தே$_3$வியே! நாய் மாம்ஸம் தின்பவனுயிருந்தபோதிலும் என் ப$_4$க்தனை நிந்தி$_3$ப்பவர்களை எத்தனைகல்பகோடிகாலமானாலும் நான் மன்னிக்கமாட்டேன்.) என்று கடல்கொதித்ததுபோலே கோபம் கொள்ளுகிறவனுகச் செய்வர்களா கையாலே, இந்தக் குற்றங்கள் ஒன்றுமில்லாமல் முன்கூறிய 'ஜ்ஞாநீத்வாத்மைவ' (கீதை 7–18) என்னும் ப்ரமாணத்தின்படியும் 'பத்தராவியை' (பெரிய. திரு 7–10–1) என்னும் அருளிச்செயலின்படியும், அனைவர்க்கும் ஆத$_4$ாரமாயிருக்கும் எம்பெருமானே தனக்கு த$_4$ாரகர்களாக எண்ணியிருக்கும்படி அவனுடைய அருளுக்கு இலக்காயிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அடிமைப்பட்டிருக்கு மிருப்பை, ஶரீரமாயிருக்கும் சிலவற்றுக்கு ஜ்ஞாநமில்லாமலிருப்பதைக் கொண்டு இல்லைசெய்யமுடியாது. கணவனோடு மனைவிக்கு நேரேதொடர்பு இருந்தபோதிலும், மனைவி வீட்டுக்குவிலக்காயிருக்கும்போது கணவனோடு மக்களோடு வேற்றுமையில்லாமல், அனைவராலும் தொடத்தகாதவளாய், குளித்தபின்பு தொடக்கூடியவளாயிருப்பது போலே, அஹங்காரம், மமகாரம் ஆகிய குற்றங்களோடு கூடிய ஶரீரம் விலக்கத்தக்கது என்றும், அவை நீங்கின போது அந்த ஶரீரமே கைக்கொள்ளத்தக்கதென்றும் கொள்ளவேண்டும். ஆக, எம்பெருமானுடைய அருளுக்கு இலக்காயிருக்கும் ஶரீரம் கைக்கொள்ளத்

தக்கது என்றும், அவனுடைய கோபத்துக்கு இலக்காயிருக்கும் ஶரீரம் கைவிடத்தக்கது என்றும் தேறுகிறது.

இந்த நம: என்னும் பத₃த்தில் 1.தன் ஸ்வாதந்த்ர்யத்தைக் கழிக்கை, 2.ஜீவனுடைய பாரதந்த்ர்யம், 3.ப₄াக₃வதஶேஷத்வம், 4.எம்பெருமானுடைய உபாயத்வம் என்கிற நாலர்த்த₂ங்கள் சொல்லப்பட்டபோதிலும் எம்பெருமானே உபாயம் என்பதை இதற்கு முக்₂யார்த்த₂ம் என்று எப்படிக் கொள்ளலாம் எனில்; மஹாப₄ாரதத்தில் மார்க்கண்டே₃யர்

'ஸர்வேஷாமேவ லோகாநாம் பிதா மாதா ச மாத₄வ:।

க₃ச்சத்₄வமேநம் ஶரணம் ஶரண்யம் புருஷர்ஷப₄ா:॥

(எல்லாவுலகிற்கும் திருவின்நாயகனான எம்பெருமானே தாய் தந்தையாயிருப்பவன். பாண்ட₃வர்களே! ஶரணமடையத்தகுந்த அவனை நீங்கள் ஶரணமாகப் பற்றுங்கள்.) என்று பாண்ட₃வர்களை ஶரணமடையும்படி உபதே₃ஶித்தார். அப்போது த்₃ரௌபத்₃யா ஸஹிதாஸ் ஸர்வே நமஶ்சக்ருர் ஜநார்த்த₃ந:।

(த்₃ரௌபதியோடு கூடிய பாண்ட₃வர்கள் அனைவரும் எம்பெருமானை நமஸ்கரித்தார்கள்) என்று அவருடைய உபதே₃ஶத்தை நிறைவேற்றும்போது, பாண்ட₃வர்கள் நமஸ்காரத்தைச் செய்தார்கள் என்று கூறுகையாலே நமஸ்காரமும், ஶரணமடைதலும் ஒன்று என்று ஸ்த₂ாநப்ரமாணத்தாலே தேறுகிறது.

ஆக, முன்சொன்ன வழியில் தாத்பர்யார்த்த₂மாகவும், இப்போது கூறியபடி ஸ்த₂ாநப்ரமாணத்தாலே நேரேயும் நமஶ்ஶப்₃த₃ம் உபாயத்தைச் சொல்லுவதாகத் தேறுகையாலே அச்சொல் எம்பெருமானுடைய உபாயத் தன்மையையே முக்₂யமாகச் சொல்லுகிறது. ஆக, ப்ரணவத்தால் ஜீவாத்மாவுடைய ஸ்வரூபமும், நமஶ்ஶப்₃த₃த்தால் அவனுடைய ஸ்வரூபத்துக்கு தகுந்த உபாயம் எம்பெருமானே என்பதும் சொல்லப்பட்டதாயிற்று.

## 'நாராயண' ஶப்₃த₃த்தின் பொருள்

அடுத்தபடியாக, 'நாராயணாய' என்னும் மூன்றாவது பத₃த்தால் உபாயத்துக்குப் ப₂லமான கைங்கர்யத்தைச் சொல்லத்தொடங்கி, அந்தக் கைங்கர்யத்தை ஏற்றுக்கொள்ளுகிறவனை 'நாராயண' என்னும் பத₃த்தால் சொல்லுகிறது. 'நாராயண'பதம் ப்ரணவத்திலுள்ள அகாரத்தின் விவரணமாக அமைந்திருக்கிறது. அகாரத்தில் விவரிக்கவேண்டியவை ரக்ஷிக்கப்படுகிறவர்களாகிற ரக்ஷ்யர்களும், ரக்ஷிக்கும் முறையாகிற ரக்ஷணப்ரகாரமுமேயாகும்.

நரஸமூஹத்தைச் சொல்லும் 'நார' ஶப்$_3$த$_3$த்தாலே ரக்ஷிக்கப்படுகிறவர்களைச் சொல்லுகிறது. 'நாராயண' என்னும் ஸமஸ்தபத$_3$த்தாலே ரக்ஷிக்கும் முறையை விளக்குகிறது. அதில் ரக்ஷிக்கப்படும் பொருள்களை விவரணம் செய்யும் 'நார' பத$_3$ம் 'நர:' என்றும், 'நார:'என்றும், 'நாரா:' என்றும் மூன்றுபடிப்பட்டது. நர: என்று அழியாத பொருளைச்சொல்லுகிறது. நார: என்று அவற்றின் ஸமூஹத்தைச் சொல்லுகிறது. நாரா: என்று அந்த ஸமூஹங்கள் பல என்று காட்டுகிறது. அழியாத பொருளாவது நித்யமான பொருளேயாகும். அப்பொருள் ஸ்வரூபேண நித்யமானது என்றும், ப்ரவாஹரூபேண நித்யமாயிருப்பது என்றும் இரண்டு வகைப்படும். ஸ்வரூபேண நித்யமாயிருக்கையாவது – உள்ளதானவொரு பொருளுக்கு உற்பத்தியென்பதோ (உண்டாவதென்பதோ), விநாஶம் (அழிவு)என்பதோ அடியோடு கிடையாது என்பதேயாகும். ப்ரவாஹரூபேண நித்யமாயிருக்கையாவது – ஒரு பொருளுக்கு உற்பத்தியும், அழிவும் இருந்தபோதிலும், முற்காலத்திலுண்டான பெயர், உருவம், அடையாளம் முதலானவை வேறுபடாமலிருக்கை.

''ஸூர்யாசந்த்$_3$ரமஸௌ த$_4$ாதா யத$_2$ாபூர்வமகல்பயத் (தை.நா.)
(ப்$_3$ரஹ்மா ஸூர்யனையும், சந்த்$_3$ரனையும் முன்கல்பத்தில் உள்ளது போலவே படைத்தார்) என்று ஶ்ருதியிலும்,

''யத$_2$ர்த்துஷ்வ்ருது லிங்க$_3$ாநி நாநாரூபாணி பர்யயே।
த்$_3$ருஶ்யந்தே தாநி தாந்யேவ தத$_2$ா ப$_4$ாவா யுக$_3$ாதி$_3$ஷு॥

என்று ஸ்ம்ருதியிலும் சொல்லப்பட்டபடியே அந்தந்த ருதுக்களில், கடந்த சென்ற ருதுக்களில் உண்டாகும் பூக்கள் பழங்கள் முதலானவற்றையும், குளிர்ச்சி வெப்பம் முதலான தன்மைகளையும், அவ்வவற்றின் பெயரையும் உடையதாய்க்கொண்டு அந்தந்த அமைப்புகளுடனே வந்துதோன்றுவது போலே படைக்கப்படும் போதும் முன்பு ஸம்ஹரிக்கப்பட்டபோது இருந்த அமைப்பையும் பெயர் முதலானவற்றையும் உடையவையாய்ப் பிறப்பிக்கை யாலேயாகும்.

'நர' ஶப்$_3$த$_3$த்தில் 'ந' என்னும் எழுத்து ''ரிங்–க்ஷயே'' என்கிற த$_4$ாதுவிலே தோன்றியதாகையாலே அழியும் பொருள்களைச் சொல்லுகிறது. நகாரம் அதைத் தள்ளுகிறதாகையாலே 'நர:' என்னும் சொல் நித்யமாயிருக்கும் (என்றுமிருக்கும்) பொருளைச் சொல்லுகிறது. இப்படி அழியும் பொருளைப் 'ர' என்னும் எழுத்தால் சொல்லி, நகாரத்தாலே அதைத் தள்ளுவதற்குக் காரணம் நீண்டநாளிருந்து வேறுநிலையையடையும் 'மஹாந், அஹங்காரம் முதலான பொருள்களையும் ஒருவகையால் நித்யமான பொருள்களில் சேர்ப்பதற்காகவே

யாகும். ''நார:'' என்னும் பத$_3$த்தில் 'ஸமூஹம்' என்னும் பொருளிலே 'அண்' ப்ரத்யயம் வந்திருக்கையாலே நித்யமான பொருள்களின் ஸமூஹத்தைச் சொல்லுகிறது. 'நாரா:' என்கிற பன்மை அத்தகைய ஸமூஹங்கள் பல இருப்பதைச் சொல்லுகிறது. ஆக, 'நாரா:' என்னும் சொல்லாலே நித்யமாயிருக்கும் பொருள்களின் ஸமூஹம் சொல்லப்பட்டதாயிற்று.

அந்த நித்யப்பொருள்களின் ஸமூஹங்களாவன –1.ஜ்ஞாநம், ஶக்தி, ப$_3$லம் முதலான (ப$_4$க$_3$வானுடைய) ஆத்மகு$_3$ணங்கள், 2. அந்த கு$_3$ணங்களை வெளிப்படுத்தும் தி$_3$வ்யமங்க$_3$ளத்திருமேனிகள், 3. அந்தத் திருமேனிகளிலுள்ள கு$_3$ணங்களான அழகு, மென்மை முதலான கு$_3$ணங்கள், 4. அந்த அழகு முதலான திருமேனி கு$_3$ணங்களைப் போலே 'முடிச்சோதியாய் உனது முகச்சோதி மலர்ந்ததுவோ' (திருவாய் 3–1–1) என்கிறபடியே திருமேனியே பூத்ததுபோலே சாத்திக்கொண்டிருக்கும் கிரீடம், மகுடம், தோள்வளை, ஹாரம் முதலான தி$_3$வ்யாப$_4$ரணங்கள்.5.இவை ஆப$_4$ரணங்களாயும் அமைந்தனவோ என்று சொல்லத்தக்க ஶங்க$_2$ம், சக்ரம் முதலான தி$_3$வ்யாயுத$_4$ங்கள், 6.இவற்றையெல்லாம் காட்டிலெரித்த நிலவொளி போலே அநுப$_4$விப்பாரில்லாமல் போகாதபடி அருகேயிருந்து அநுப$_4$விக்கிற ஸ்ரீபூ$_4$மிதே$_3$விகள் முதலான தே$_3$விமார்கள், 7.பெருமாளும், பிராட்டிமாருமான சேர்த்தியிலே அடிமைசெய்கிற அநந்தன், கருட$_3$ன், விஷ்வக்ஸேநன் முதலான நித்யஸூரிகளின் ஸமூஹம், 8.அவர்களைப் போலே ஸம்ஸார ஸம்ப$_3$ந்த$_4$மற்றவர்களாய் எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்யும் முக்தாத்மாக்கள், 9.நித்யமுக்தர்கள் எம்பெருமானுக்கு அடிமை செய்வதற்கு உதவும் குடை, சாமரம், திருவாலவட்டம் முதலானவை, 10. அந்த அடிமையை வளரச்செய்வதாய் பரமேஷ்டீ$_2$, புமாந், விஶ்வ:,நிவ்ருத்த:, ஸர்வ: எனப்படும் பஞ்சோபநிஷத்துக்களாலான பரமபத$_3$ம், 11. ஸத்த்வம், ரஜஸ், தமஸ் என்னும் மூன்று கு$_3$ணங்கள் கொண்ட மூலப்ரக்ருதி, 12.ஸம்ஸாரத்தில் கட்டுப்பட்டிருக்கும் ஜீவர்களின் கூட்டம், 13. இரவு, பகல், மாஸம், பக்ஷம் முதலான பிரிவுகளோடு கூடிய காலம் எனும் தத்த்வம், 14.ப்ரவாஹரூபமாக நித்யமாகவிருக்கும் மஹாந், அஹங்காரம் முதலானவை, 15.அவற்றின் கார்யமான அண்ட$_3$ங்கள், 16. அண்ட$_3$த்தின் உள்ளிருக்கும் தே$_3$வர், மனிதர், திர்யக், ஸ்த$_2$ாவரம் என்னும் நாலுவகை யோநிகளில் அமைந்த பத்$_3$த$_4$ஜீவர்கள். அப்ராக்ருதபஞ்சபூதங்களாலானதாகையாலே பரமபதமும் ஸமூஹமாகவேயிருக்கும். முக்கு$_3$ணங்களோடு கூடியதாகையாலே மூலப்ரக்ருதியும் ஸமூஹமாகவேயிருக்கும். இரவு பகல் முதலான பிரிவுகள் பல இருக்கையாலே காலமும்

ஸமூஹமாகவேயிருக்கும்.

ஆக நாரஶப்$_3$த$_3$த்தால் சொல்லப்படும் அர்த்த$_2$ங்களாய் எம்பெருமானுல் வ்யாபிக்கப்படும் சேதநாசேதநப்பொருள்கள் இதுவரை சொல்லப்பட்டன. இனி எம்பெருமான் வ்யாபித்திருப்பதையும், எப்படி வ்யாபித்திருக்கிறுன் என்பதையும் சொல்லுகிறது. 'அயந' ஶப்$_3$த$_3$ம் இருப்பிடத்தைச் சொல்லுவதாய் 'நாராணும் அயநம் ய: ஸ:' என்னும் தத்புருஷஸமாஸத்தால் நர ஸமூஹங்களுக்கு இருப்பிடம் என்று பொருள்படுகிறது. 'நாரா: அயநம் யஸ்ய ஸ:' என்று ப$_3$ஹுவ்ரீஹிஸமாஸத்தால் நரஸமூஹங்களை இருப்பிடமாகக்கொண்டவன் என்று பொருள்படுகிறது. நாரங்களுக்கு இருப்பிடம் என்பதாலே அந்தர்வ்யாப்தியும், நாரங்களை இருப்பிடமாகக் கொண்டவன் என்றதாலே பஹிர்வ்யாப்தியும் சொல்லப்படுகிறது. உபநிஷத்திலும்

அந்தர்ப$_3$ஹிஶ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ்தி$_2$த:॥ (தை.நா.)

(எல்லாப்பொருள்களின் உள்ளும் புறமும் வ்யாபித்திருக்கிறுன் நாராயணன்) என்று இந்த அர்த்த$_2$ங்கள் சொல்லப்பட்டன. எல்லாப்பொருள்களுக்கும் தான் இருப்பிடமாயிருக்கையாவது – தன்னைத் தவிர மற்ற எல்லாப்பொருள்களையும் 'மேரோரிவாணு:' () (மேருமலை அதிலுள்ள ஓர் அணுவை த$_4$ரிப்பதுபோல் எம்பெருமான் மற்ற பொருள்களை த$_4$ரிக்கிறுன்)

''யஸ்யாயுதாயுதாம்ஶாம்ஶே விஶ்வஶக்திரியம் ஸ்தி$_2$தா।

தம்ருதே பரமாத்மாநம் தாத க: கேந ஶாஸ்யதே॥ (வி.பு)

(தந்தையே! எவனுடைய பல்லாயிரத்தில் ஒரு பகுதியாலே உலகமெல்லாம் த$_4$ரிக்கப்படுகிறதோ, பரமாத்மாவான அந்த விஷ்ணுவைத் தவிர வேருெருவனுல் ஒருபொருள் நியமிக்கப்படுவது உண்டோ) என்கிறபடியே தன்னுடைய ஸ்வரூபத்தின் ஒருபகுதியாலே அனைத்தையும் த$_4$ரிக்கையாகும். அவற்றைத் தான் இருப்பிடமாக உடையவனுயிருக்கையாவது – தன்னைத் தவிர்ந்த எல்லாப்பொருள்களையும் சேதநம், அசேதநம் என்னும் வேற்றுமை யில்லாமல் தனித்தனியே அவற்றினுள் புகுந்து, ஆகாயம், உடம்பு முதலான பொருள்களிலே வ்யாபித்திருப்பதுபோலே தன் ஸ்வரூபத்தின் ஒவ்வொரு பகுதியாலே வ்யாபிக்காமல் தார்க்கிகர்கள் ஒன்றுன ஜாதி ஒவ்வொரு பொருளிலும் பூர்ணமாக வ்யாபித்திருக்கிறது என்று சொல்லுவது போலே ஒவ்வொரு பொருளிலும் தன் ஸ்வரூபம் முழுவதாலும் வ்யாபித்து நிற்கை. இப்படி உள்ளும் புறமும் வ்யாபித்திருக்கிறுன் என்பதை நினைத்தன்றே வேதம் 'அணோரணீயாந் மஹதோ மஹீயாந்' () பரமாத்மாவானவன் அணுப்பொருளைக்

காட்டிலும் ஸூக்ஷ்மமானவன், பெரிதான விபு$_4$ப்பொருளைக் காட்டிலும் பெரியவன்) என்றது.

நாராயணன், தன்னைத் தவிர்ந்த மற்ற பொருள்களுக்கு இருப்பிடமாயிருப்பவன் என்னும் பொருளில் நார ஶப்$_3$த$_3$த்திற்கு முதன் முதலில் சொல்லப்பட்ட பொருளான ப$_4$க$_3$வத்$_3$கு$_3$ணங்களையும் அவை ஸ்வரூபத்தில் தங்கியிருக்கையாலே சேர்த்துக்கொள்ளவேண்டும். தன்னைத் தவிர்ந்த மற்ற பொருள்களை இருப்பிடமாக உடையவன் என்னும் பொருளில் கு$_3$ணங்களை வ்யாபிப்பது ஒட்டாதாகையாலே, கு$_3$ணங்களைத் தவிர்ந்த மற்ற பொருள்கள் தான் எம்பெருமானால் வ்யாபிக்கப்படுகின்றன என்று கொள்ளவேண்டும். கு$_3$ணங்களை வ்யாபிப்பது ஏன் ஒட்டாது எனில்; தன் கு$_3$ணங்களிலே எம்பெருமான் வ்யாபிக்கும் கு$_3$ணங்களோடு கூடியவனாகவே வ்யாபிக்க வேண்டும்; பரம்பொருள் கு$_3$ணமற்றதாயிராமையாலே அப்படி வ்யாபிக்கும் போது வ்யாபிக்கப்படும் கு$_3$ணங்களே வ்யாபிக்கும் கு$_3$ணங்களாகவும், வ்யாபிக்கும் கு$_3$ணங்களே வ்யாபிக்கப்படும் கு$_3$ணங்களாகவும் ஆகும். இதனால் ஆத்மாஶ்ரயம் (அந்யோந்யாஶ்ரயம்) என்னும் குற்றமுண்டாகும். அத்துடன் தன் கு$_3$ணங்கள் சிலவற்றில் மற்ற கு$_3$ணங்களோடு கூடிய கு$_3$ணி வ்யாபிக்கிறான் என்று கொண்டால், மற்ற கு$_3$ணங்களுக்கு இருப்பிடமான கு$_3$ணி அந்த கு$_3$ணங்களை வ்யாபிக்கிறான் என்று கொள்ளவேண்டும். அதற்கும் இதே முறையில் சில கு$_3$ணங்களோடு கூடிய கு$_3$ணி மற்ற கு$_3$ணங்களை வ்யாபிக்கிறான் என்று கொண்டால் இதே குற்றம் ஏற்படும். ஆகையாலே இதில் அநவஸ்தை$_2$ என்னும் குற்றம் ஏற்படும். ஆக, எம்பெருமான் எல்லாக் கல்யாணகு$_3$ணங்களையும் உடையவன் என்றும், நித்யவிபூ$_4$தி, லீலாவிபூ$_4$தி ஆகிய இரண்டுக்கும் நாயகன் என்றும், தன்னைத்தவிர்ந்த மற்ற அனைத்துக்கும் மேம்பட்டவன் என்றும், அவ்வனைத்தையும் ஶரீரமாகக் கொண்டவன் என்றும் சொல்லப்பட்டதாயிற்று.

நராஜ்ஜாதாநி தத்த்வாநி நாராணீதி ததோ விது$_3$:।
தாந்யேவ சாயநம் தஸ்ய தேந நாராயண: ஸ்ம்ருத:॥

(அழியாதவனாகையாலே நரன் எனப்படும் பரமாத்மாவிடமிருந்து பிறந்த சேதநாசேதநங்களாகிற தத்த்வங்கள், அக்காரணத்தாலேயே நாரங்கள் எனப்படுகின்றன. அவற்றை வ்யாபித்திருக்கையாலே அவை அவனுக்கு இருப்பிடமாகின்றன. அதனால் அவன் நாராயணன் எனப்படுகிறான்.) என்று ''நரன் எனப்படுமவன் நித்யனான ஸர்வேஶ்வரன். அவனிடமிருந்து பிறந்த பொருள்கள் நாரங்கள் ஆகின்றன. தன்னிடமிருந்து உண்டான அந்த

நாரங்களையே தனக்கு இருப்பிடமாக உடையவன் அவன்'' என்கையாலே அவன் மற்ற அனைத்துக்கும் காரணன் என்று சொன்னதாயிற்று. இனி,

''நார ஶப்$_3$தே$_3$ந ஜீவாநாம் ஸமூஹ: ப்ரோச்யதே பு$_3$தை$_4$:।
க$_3$திராலம்ப$_3$நம் தஸ்ய தேந நாராயணஸ் ஸ்ம்ருத:।।

(நாரம் எனும் சொல்லாலே ஜீவர்களின் ஸமூஹம் அறிவாளிகளால் சொல்லப்படுகிறது. அந்த ஸமூஹத்துக்கு க$_3$தி எனப்படும் ப்ராப்யமாயிருக்கும் பரமாத்மா அக்காரணத்தால் நாராயணன் எனப்படுகிறான்.) என்கிற படியே நார ஶப்$_3$த$_3$ம் என்றுமிருக்கும் ஜீவஸமூஹத்தைச் சொல்லுகிறது. 'இண் க$_3$தௌ' என்னும் த$_4$ாதுவிலிருந்து தோன்றிய அயந ஶப்$_3$த$_3$ம் அடையப்படும் ப்ராப்யத்தைச் சொல்லுகிறது. ஆக, நாராயணன் என்று ஜீவஸமூஹத்துக்கு அடையப்படும் ப்ராப்யமாயிருப்பவன் என்று சொன்னதாயிற்று. உறவினர்களை அடைவதும் ப்ராப்யமாகையாலே

'மாதா பிதா ப்$_4$ராதா நிவாஸஸ் ஶரணம் ஸுஹ்ருத்$_3$ க$_3$திர் நாராயண: (ஸுப$_3$ா) (தாய், தந்தை, உடன்பிறந்தோன், இருப்பிடம், உபாயம், நண்பன், உபேயம் ஆகியவையும் நாராயணனே) என்றும், ''எம்பிரான் எந்தை என்னுடைச் சுற்றம் எனக்கரசு என்னுடை வாணாள்'' (பெரிய.திரு.1–1–6) என்றும் சொல்லுகிற படியே எல்லாவித$_4$மான உறவாகவுமிருப்பவன் ஸர்வேஶ்வரனே என்றும் சொன்னதாக ஆயிற்று. 'இண் க$_3$தௌ' என்னும் த$_4$ாதுவிலிருந்து தோன்றிய தாகையாலே அயந ஶப்$_3$த$_3$ம் அடைவிக்கும் ப்ராபகத்தையும் சொல்லுகிறது. 'விஷ்ணுபோதம் விநா நாந்யத் கிஞ்சித$_3$ஸ்தி பராயணம்'' () (விஷ்ணுவாகிற ஓடத்தைக் காட்டிலும் மோக்ஷத்தை அடைவிக்கும் பொருள் வேறொன்றும் இல்லை.) என்கிற ப்ரமாணமும் இந்த அர்த்த$_2$த்தைச் சொல்லுகிறது. ஆக, நாராயணன் எல்லா ஜீவர்களுக்கும் ப்ராப்யமாகவும், ப்ராபகமாகவும் ஆகின்றவன் என்று சொன்னதாயிற்று. லக்ஷ்மீதே$_3$வியாகிற பெரியபிராட்டியார் நார ஶப்$_3$த$_3$த்தில் சேர்ந்தவளாகையாலே, இப்பத$_3$த்தில் பிராட்டி ஸம்ப$_3$ந்த$_4$மும் அநுஸந்தி$_4$க்கத்தக்கது. ஆக, இந்த 'நாராயண' ஶப்$_3$த$_3$த்தாலே கைங்கர்யத்தை ஏற்றுக்கொள்ளுமவர்கள் பெருமாளும், பிராட்டியுமாகிற ஒரு மிது$_2$நம் என்று சொல்லப்பட்டது.

### 'ஆய' ஶப்$_3$த$_3$ார்த்த$_2$ம்

ப்ரணவத்திலுள்ள மகாரத்திற்கு விவரணமாக ஆய என்னும் நான்காம் வேற்றுமையாலே எம்பெருமான் திருவடிகளில் பண்ணும் கைங்கர்யத்தை வேண்டுகிறது. நான்காம் வேற்றுமை மகாரத்திற்கு எப்படி விவரணமாக ஆகும் எனில்,

ப்ரணவத்தில் மகாரத்தால் சொல்லப்படும் ஜீவனை ப₄க₃வச்சே₂ஷத்வத்துக்கு இருப்பிடமாகவன்றோ சொல்லிற்று. ''அகிஞ்சித்கரஸ்ய ஶேஷத்வாநுபபத்தி:'' (கைங்கர்யம் செய்யாதவனுக்கு ஶேஷத்வம் ஒட்டாது) என்கிறபடியே இங்கு ஶேஷத்வம் உண்டாவது கைங்கர்யத்தாலேயாகையாலே கைங்கர்யத்தைச் சொல்லும் இந்த நான்காம் வேற்றுமை மகாரத்திற்கு விவரணமாகிறது. கைங்கர்யம் இல்லாதபோது ஶேஷத்வம் இல்லை. ஶேஷத்வமில்லாதபோது ஜீவஸ்வரூபம் இருந்தும் இல்லாததுபோல் ஆகிவிடும். ஆக, திருவஷ்டாக்ஷரத்திலுள்ள இந்த மூன்று பத₃த்தாலும் ஈஶ்வரனுடைய ஸ்வரூபமும், ஜீவாத்மாவினுடைய ஸ்வரூபமும், கைவிடத்தக்கதான விரோதி₄ஸ்வரூபமும் சொன்னதாயிற்று.

''ஸர்வேஶ்வரன் அனைவருக்கும் கைங்கர்யம் கொள்ளும் ஶேஷியாயிருப்பான். ஜீவஸ்வரூபம் அவனுக்கே அடிமைப்பட்டதாயிருக்கும். தன்னை ஸ்வதந்த்ரனாக எண்ணுவது, மற்றவர்களுக்கு அடிமைப்பட்டதாக எண்ணுவது ஜீவாத்ம ஸ்வரூபத்திற்கு விரோதி₄யாகும்'' என்று ப்ரணவம் சொல்லுகிறது. நமஶ்ஶப்₃த₃த்தில் ஸர்வேஶ்வரன் குறையற்ற உபாயத் தன்மையை உடையவன் என்றும், ஜீவன் அவனையே உபாயமாகக் கொண்டவன் என்றும், ''ஜீவன் தன்னைக் காத்துக்கொள்வதற்குத் தான் முயல்வது ஸ்வரூபத்துக்கு விரோதி₄'' என்றும் சொல்லப்படுகிறது. ஸர்வேஶ்வரனுக்குக் கைங்கர்யம் செய்வது மேலான ப்ராப்யம் என்றும், ஜீவன் ஈஶ்வரகைங்கர்யத்தால் உண்டாகும் ஆநந்த₃ம் தவிர வேறு ஆநந்த₃ம் இல்லாதவன் என்றும், மற்ற ப்ராப்யங்களோடு தொடர்பு கொள்வது ஸ்வரூபத்துக்குத் தகாது என்பதும் நாராயணாய என்னும் மூன்றாவது பத₃த்தாலே சொல்லப்படுகிறது.

ஆக இந்தத் திருமந்த்ரத்தால் ஜீவன் ப்ரக்ருதியைக் காட்டிலும் மேலானவன் என்றும், அத்தகைய அவன் பரமாத்மாவுக்கு அடிமைப்பட்டவன் என்றும், அவனுக்குள்ள ஶேஷத்வம் வேறு எவருக்கும் ஆகாது என்பதும், இந்த ஶேஷத்வத்தை ஏற்றுக்கொள்பவன் எம்பெருமானே என்பதையும், எம்பெருமானுக்கே அடிமையான ஜீவனுக்கு அஹங்காரமமகாரங்கள் கூடாது என்பதையும், அஹங்காரமமகாரமற்ற ஜீவஸ்வரூபம் எம்பெருமானுக்கு மிகவும் பரதந்த்ரமானது என்பதையும், அந்தப் பாரதந்த்ர்யத்தின் எல்லைநிலம் அவனடியார்களுக்கும் ஆட்பட்டிருப்பதே என்பதையும், அத்தகைய பரதந்த்ரனுக்குப் பொருத்தமான உபாயம் எம்பெருமானே என்பதையும், அந்த உபாயமான எம்பெருமானிடமிருந்து ஸித்₃தி₄ப்பது கைங்கர்யம் என்பதையும்

அந்தக் கைங்கர்யத்தை ஏற்றுக்கொள்வது எம்பெருமானே என்பதையும் கூறுகிறது.

வேறொருவர் ரக்ஷகர் என்னும் எண்ணம் ஜீவனுக்கு உண்டானால் அகாரத்தின் பொருள் அவன் நெஞ்சில் படவில்லை என்று தேறும். தானே ஸ்வதந்த்ரன் என்னும் எண்ணம் உண்டானால் நான்காம் வேற்றுமையின் அர்த்த$_2$ம் அவன் நெஞ்சில் படவில்லை என்று தேறும். கைங்கர்யத்தைக் கொள்பவன் வேறொருவன் உளன் என்று எண்ணினால் உகாரத்தின் பொருள் நெஞ்சில் படவில்லை என்று தேறும். தே$_3$ஹமே ஆத்மா என்னும் எண்ணம் உண்டானால் மகாரத்தின் பொருள் நெஞ்சில் படவில்லை என்று தேறும். மற்ற ஸாத$_4$நங்களில் ஈடுபாடும், ஸ்ரீவைஷ்ணவர்கள் நம்மைப் போன்றவர்களே என்னும் எண்ணமும் உண்டானால் நமஶ் ஶப்$_3$த$_3$த்தின் அர்த்த$_2$ம் நெஞ்சில்பட வில்லை என்று தேறும். ஸர்வேஶ்வரனுக்குச் செல்வமாயிருக்கும் மற்ற சேதநர்களோடே விருப்பு வெறுப்புக்கள் உண்டானால் நாரஶப்$_3$த$_3$த்தின் பொருள் நெஞ்சில்படவில்லை என்று தேறும். உறவினர் அல்லாதாரிடத்தில் உறவினர் என்னும் எண்ணம் உண்டானால் அயந ஶப்$_3$த$_3$ார்த்த$_2$ம் நெஞ்சில்படவில்லை என்று தேறும். மற்ற பயன்களில் விருப்பம் உண்டானால் நான்காம் வேற்றுமையின் அர்த்த$_2$ம் நெஞ்சில் படவில்லை என்று தேறும்.

**பதவுரை:** (அம்பு$_3$ஜத$_3$லலலிதலோசநம்) அம்பு$_3$ஜ — தாமரைப்பூவினுடைய, த$_3$ல— இதழ்போல், லலித—ஸுந்தரமான, லோசநம்—திருக்கண்களையுடைய, ப$_3$ாலம்—இளம்பிள்ளையான ஸ்ரீக்ருஷ்ணனை, ஆப்$_4$யாம்—இந்த, த்$_3$வாப்$_4$யாம் விலோசநாப்$_4$யாம் அபி—இரண்டு நயனங்களினாலும், பரிரப்$_3$து$_4$ம்—தழுவிக்கொள்ளுகைக்கு, மம—எனக்கு, தைவஸாமக்$_3$ரீ—பகவதநுக்ரஹமாகிய காரணமானது, தூ$_3$ரே—நெடுந்தூரத்திலிருக்கிறது. (43)

**தாத்பர்யம்:** அவன் மனத்திலிருந்தானாகில் என் கண்ணுக்குத் தோற்றவில்லை யென்னில் சொல்லுகிறார்

தாமரையிதழ்போன்ற கண்ணழகையுடையனான க்ருஷ்ணனை; மாம்ஸமயமாய் வெளியிற்காண்கிற இந்த இரண்டு கண்களாலும் நிரந்தரமாகப் பார்த்தநுபவிக்கைக்கு அவனிடத்தில் ஸௌலப்யமும், என்னிடத்தில் பக்தியும் குறைவறவிருந்தபோதிலும், எனக்கு இன்னும் அத்ருஷ்டம் கைக்கூடிற்றில்லை யென்கிறார்.

44. अश्रान्तस्मितमरुणारुणाधरोष्ठं हर्षार्द्र द्विगुण मनोज्ञवेणुगीतम् ।
विभ्राम्यद्विपुल विलोचनार्धमुग्धं वीक्षिष्ये तव वदनाम्बुजं कदा नु ।।

அஶ்ராந்தஸ்மிதமருணாருணாத$_4$ரோஷ்டம்
ஹர்ஷார்த்$_3$ரத்$_3$விகு$_3$ண மநோஜ்ஞவேணுகீ$_3$தம்।
விப்$_4$ராம்யத்$_3$விபுல விலோசநார்த்த$_4$முக்$_3$த$_4$ம்
வீக்ஷிஷ்யே தவ வத$_3$நாம்பு$_3$ஜம் கத$_3$ா நு॥

**பதவுரை:** (அஶ்ராந்த ஸ்மிதம்)அஶ்ராந்த—ஓய்வில்லாத (எப்போதுமுண்டான), ஸ்மிதம்—புன்னகையையுடையதும், (அருணாருணாத$_4$ரோஷ்டம்) அருணஅருண—மிகச்சிவந்திருக்கிற,அத$_4$ரஓஷ்ட$_2$ம்—கீழுதட்டையுடையதும், (ஹர்ஷார்த்$_3$ர த்$_3$விகு$_3$ணமநோஜ்ஞ வேணுகீ$_3$தம்) ஹர்ஷ—ஸந்தோஷத்தினால், ஆர்த்$_3$ர—ஸரஸமாகபண்ணபட்டும், த்$_3$விகு$_3$ண—முன்னிலும் இரட்டிப்பாக, மநோஜ்ஞ — நெஞ்சையுளுக்குமதுமான, வேணுகீ$_3$தம்— வேணுகாநத்தையுடையதும், (விப்$_4$ராம்யத்$_3$விபுலவிலோசநார்த்த$_4$முக்$_3$த$_4$ம்) விப்$_4$ராம்யத்—நாநாவிதமாகச் சுழலமிடுவதும், விபுல—பரப்புடையதுமான, விலோசநார்த$_4$—(பாதிமூடித்திறந்த) பாதிக்கண்ணினால், முக்$_3$த$_4$ம்—போக்யதை மிஞ்சினதுமான, தவ—உன்னுடைய, வத$_3$ந அம்பு$_3$ஜம்—திருமுகமலரை, கத$_3$ா நு—எப்பொழுது, வீக்ஷிஷ்யே — பார்க்கப்போகிறேன்.

**தாத்பர்யம்:** அவனைப்பார்க்கும்படியான அத்ருஷ்டம் உமக்கு எப்போதுண்டாகு

மென்று அருகிலுள்ளார் கேட்க, அது என்னாலறியப் போகாதென்று இவர்களைப் பாராதே அவனையே நோக்கிப் பதிலுரைக்கிறார்.

ஒரு காரணமின்றியே எப்போதுமுள்ள அவ்யாஜமான முறுவலையும், ஸ்வாபாவிகமாகவே பழுப்பேறின அதரத்தையும், ஸந்தோஷத்துடன் ஊதும் போது முன்னிலுமிரட்டித்த ரஸத்தைப் பெருக்காநின்ற வேணுகாநத்தையும், பரந்து சுற்றிச் சுழலமிடாநின்றுகொண்டு சிமிழ்த்து அழகியதாயிருக்கிற கண்களையுமுடைய உன் முகத்தை நானெப்போது காணப்போகிறேனோ வென்கிறார்.

45. लीलायताभ्यां रसशीतलाभ्यां नीलारुणाभ्यां नयनाम्बुजाभ्याम्।
आलोकयेदद्भुतविभ्रमाभ्यां काले कदा कारुणिक: किशोर: ।।

லீலாயதாப்$_4$யாம் ரஸஶீதலாப்$_4$யாம் நீலாருணாப்$_4$யாம் நயநாம்பு$_3$ஜாப்$_4$யாம்।
ஆலோகயேத$_3$த்$_3$பு$_4$தவிப்$_4$ரமாப்$_4$யாம் காலே கத$_3$ா காருணிக: கிஶோர:॥

**பதவுரை:** (லீலாயதாப்$_4$யாம்) லீலா—விலாஸத்தினால், ஆயதாப்$_4$யாம் — நீண்டவைகளும், (ரஸஶீதலாப்$_4$யாம்) ரஸ—கருணாரஸத்தினால், ஶீதலாப்$_4$யாம்— குளிர்ந்தவைகளும், (நீலாருணாப்$_4$யாம்) நீல—கறுத்தும், அருணாப்$_4$யாம்— சிவந்துமிருக்கிறவைகளும், (அத்$_3$பு$_4$தவிப்$_4$ரமாப்$_4$யாம்) அத்$_3$பு$_4$த—விசித்ரமான, விப்$_4$ரமாப்$_4$யாம்—விலாஸத்தையுடையவைகளுமான, நயந அம்பு$_3$ஜாப்$_4$யாம்— திருக்கண் மலர்களினால், காருணிக:—இரக்கமுள்ளவனான, கிஶோர:—ஸ்ரீக்ருஷ்ணன், கத$_3$ா காலே —எந்தக்காலத்தில், ஆலோகயேத்—கடாக்ஷிப்பானோ.

**தாத்பர்யம்:** தெரியாதென்று சொல்லுவானேன், அவன் கடாக்ஷித்தபோதுண்டாகாதோ வென்னச் சொல்லுகிறார்.

பரமகாருணிகனான அந்த பாலமுகுந்தன், ஶ்ருங்காரவிலாஸத்தினால் நீண்டும், அந்நீட்சியடைய நிறைந்திருக்கிற கருணாரஸத்தினால் குளிர்ந்தும், வடிவழகினால் நீலமாய் புருஷோத்தமத்வ லக்ஷணத்தினால் சிவந்திருப்பதும், அத்யாஶ்சர்யகரமான ஸஞ்சாரங்களையுடையதுமான கண்களினால் எந்த ஸமயத்தில் கடாக்ஷிப்பானோ, அதுவும் தெரியாதென்கிறார்.

46. बहुलचिकुरभारं बद्धपिञ्छावतंसं चपलचपलनेत्रं चारुबिम्बाधरोष्ठम् ।
मधुरमृदुलहासं मन्थरोदारलीलं मृगयति नयनं मे मुग्धवेषं मुरारे: ।।

ப$_3$ஹுலசிகுரப$_4$ாரம் ப$_3$த்$_3$த$_4$பிஞ்ச$_2$ாவதம்ஸம்
சபலசபலநேத்ரம் சாருபி$_3$ம்ப$_3$ாத$_4$ரோஷ்டம்।

மது₄ரம்ருது₃லஹாஸம் மந்த₂ரோத₃ாரலீலம்
ம்ருக₃யதி நயநம் மே முக்₃த₄வேஷம் முராரே:॥

**பதவுரை:** (ப₃ஹுலசிகுரப₄ாரம்) ப₃ஹுல—நெருங்கியிருக்கிற, சிகுரப₄ாரம்—திருக்குழற்கற்றையையுடையதும், (ப₃த்₃த₄ பிஞ்சாவதம்ஸம்) ப₃த்₃த₄—முடிக்கப்பட்ட, பிஞ்ச₂—மயில்தோகையாகிற, அவதம்ஸம்—ஶிரோபூஷணத்தையுடையதும், (சபலசபலநேத்ரம்) சபலசபல— அத்யந்தம் சஞ்சலமான, நேத்ரம்—திருக்கண்களையுடையதும், (சாருபி₃ம்ப₃ாத₄ரோஷ்டம்)சாரு— அழகியதுமான, பி₃ம்ப₃—கோவைப்பழம் போன்ற, அத₄ரோஷ்ட₂ம்—கீழுதட்டையுடையதும், (மது₄ரம்ருது₃லஹாஸம்) மது₄ர— மனத்துக்கினியதுமான, ம்ருது₃ல—கண்ணுக்கினியதுமான, ஹாஸம்—சிரிப்பையுடையதும், (மந்த₂ரோத₃ாரலீலம்) மந்த₂ர—பரிபூர்ணமாயும், உத₃ார—கம்பீரமுமாயிருக்கிற, லீலம்—விளையாட்டையுடையதுமான, முராரே:—ஸ்ரீக்ருஷ்ணனுடைய, (முக்₃த₄வேஷம்) முக்₃த₄—மோஹநகரமான, வேஷம்—ஸ்வரூபத்தை, மே — என்னுடைய, நயநம் — கண்ணானது, ம்ருக₃யதி—தேடுகிறது.

**தாத்பர்யம்:** இதுமுதல் நாலுஶ்லோகங்களினால் தாமநுபவிக்கவாசைப்பட்ட அவனுடைய கோலங்களைப் பேசுகிறார்.

கண்ணன் ஶிரஸில், உலகத்திலிருளனைத்தும் ஓரிடத்தில் சேர்ந்தாற்போல் இருண்டு அடர்ந்திருக்கிற குழலழகும், அதன்மேல் கட்டின கொடிபோல் விளங்காநின்ற மயிலிறகும், அதுக்குச்சிறிதுகீழே, ''நம்மழகைக்காட்டி யாரை வஶீகரிப்போம்'' என்று சுற்றிச்சுற்றிச் சுழலமிடாநின்ற கண்களும், கொடியிலே பழுத்துச் செவ்வியழியாததொரு கோவைப்பழம்போன்ற வாயும், அத்தோடிணங்கி மதுரமாகத்தோற்றுகிற சிறுமுறுவலும், பரிபூர்ணமான ஶ்ருங்கார விலாஸங்களுமாகிய இவ்வழகிய வேஷத்தைக்காண என் கண்ணானது சுற்றும் ஆராயாநின்றதென்கிறார். (46)

47. बहुलजलदच्छायाचोरं विलासभरालसं मदशिखिशिखालीलोत्तंसं मनोज्ञमुखाम्बुजम् ।
किमपि कमलापाङ्गोदग्र प्रसन्नजगज्जितं मधुरिमपरीपाकोद्रेकं वयं मृगयामहे ।।

ப₃ஹுளஜலத₃ச்ச₂ாயாசோரம் விலாஸப₄ாலஸம்
மத₃ஶிகி₂ஶிக₂ாலீலோத்தம்ஸம் மநோஜ்ஞமுக₂ாம்பு₃ஜம்।
கிமபி கமலாபாங்கோ₃த₃க்₃ர ப்ரஸந்நஜக₃ஜ்ஜிதம்
மது₄ரிமபரீபாகோத்₃ரேகம் வயம் ம்ருக₃யாமஹே॥ (47)

**பதவுரை:** (ப₃ஹுளஜலத₂ச்ச₂ாயாசோரம்) ப₃ஹுள—நெருக்குண்டிருக்கிற, ஜலத₃—மேகத்தினுடைய, ச₂ாயா—காந்தியை, சோரம்—அபஹரிக்கிறவனும்,

(விலாஸப$_4$ராலஸம்) விலாஸ—ஸந்தோஷவ்யாபாரத்தினுடைய, ப$_4$ர—அதிஶயத்தினுல், அலஸம்—நிஶ்சேஷ்டமானவனும், (மத$_3$ஶிகி$_2$ஶிக$_2$ாலீலோத்தம்ஸம்) மத$_3$—கர்வமடைந்த, ஶிகி$_2$—மயிலினுடைய, ஶிக$_2$ா—இறகுகளாகிற, லீலா—லீலார்த்தமான, உத்தம்ஸம்—ஶிரோபூஷணத்தையுடையவனும், (மநோஜ்ஞமுகாம்பு$_3$ஜம்) மநோஜ்ஞ—மநோஹரமான, முக$_2$அம்பு$_3$ஜம்—தாமரைப்பூப்போன்ற முகத்தையுடையவனும், (கமலாபாங்கோ$_3$த$_3$க்$_3$ர ப்ரஸந்நஜக$_3$ஜ்ஜிதம்) கமலா—ஸ்ரீதேவியினுடைய, அபாங்க$_3$—கடைக்கண்பார்வையினுல், உதக்$_3$ர—உயர்ந்தவனும், ப்ரஸந்தஜக$_3$த்—தன்னைச் சரணமாக அடைந்த ஜநங்களினுல், ஜிதம்—ஜயிக்கப்பட்டவனும், (மது$_4$ரிமபரீபாகோத்$_3$ரேகம்) மது$_4$ரிம— போக்யதையினுடைய, பரீபாக—முதிர்ந்த அவஸ்த்தை$_2$யினுல், உத்$_3$ரேகம்—மேன்மைபெற்றவனுமான, கம்அபி—வாசாமகோசர மஹிமையையுடைய, ஸ்ரீக்ருஷ்ணனை, வயம் — நாங்கள், ம்ருக$_3$யாமஹே—காணத் தேடுகிறோம், ''ப்ரஸந்ந'' என்று பாடமாகில், ப்ரஸந்ந—பக்தியினுலும் அத்யவஸாயத்தினுலும் தெளிந்த சிந்தையரான என்று பொருளாம்.(47)

**தாத்பர்யம்:** ப்ராணிகளுடைய ஸகலதாபங்களுமாறும்படியாக நீரை நிறையப்பாநம் பண்ணி மேலேகிளம்பின மேகத்தினுடைய எழில்பூண்டவனும், அவ்வெழிலோடொத்தபரிபூர்ணமான ஶ்ருங்காரவிலாஸங்களையுடையவனும், அவ்வெழிலுக்குப் பரபாகமாகத் தலையில்சூடின நாநாவர்ணமான மயிலிறகையுடையவனும், கண்டவர்கள் கண்ணும் மனமும் களிக்கும்படியான முகமுடையவனும், ருக்மணீதேவியின் கடாக்ஷத்துக்குப் பாத்ரபூதனும், ஆஶ்ரிதபரதந்த்ரனும், போக்யதைகளெல்லாம் பரிபக்வமாய் வடிவுகொண்டுவந்தாற்போல் விளங்குமவனுமான ஸ்ரீக்ருஷ்ணன் எங்கேயிருக்கிருனோவென்று நானெங்கும் ஆராயாநின்றேனென்கிருர்.

४८.परामृश्यं दूरे परिषदि मुनीनां व्रजवधू दृशां दृश्यं शश्वत् त्रिभुवनमनोहारिवदनम् ।
अनामृश्यं वाचामनिदमुदयानामपि कदा दरीदृश्ये देवं दरदलितनीलोत्पलनिभम् ।।

பராம்ருஶ்யம் தூ$_3$ரேபரிஷதி$_3$ முநீநாம் வ்ரஜவதூ$_4$
த்$_3$ருஶாம் த்$_3$ருஶ்யம் ஶஶ்வத் த்ரிபு$_4$வநமநோஹாரிவத$_3$நம்।
அநாம்ருஶ்யம் வாசாம் அநித$_3$முத$_3$யாநாமபி கத$_3$ா
த$_3$ரீத்$_3$ருஶ்யே தே$_3$வம் த$_3$ரத$_3$லித நீலோத்பலநிப$_4$ம்॥

**பதவுரை:** அநித$_3$முத$_3$யாநாம்—ஒருதேஶகாலபுருஷர்களைத் தனக்குப் பிறப்பிடமாக உடைத்தாகாததான (நித்யமான), வாசாம்அபி—வேதங்களும், அநாம்ருஶ்யம்—இவ்விதமென்று நிரூபிக்கவொண்ணுதவனும்,ஶஶ்வத்—அடிக்கடி, வ்ரஜவதூ$_4$த்$_3$ருஶாம் —இடைப்பெண்களுடைய கண்களுக்கு,

# பெரியாழ்வார் திருமொழி
# இரண்டாம்பத்து முதல் திருமொழி
# மெச்சூது ப்ரவேஶம்

*மெச்சூதுப்ரவேஶம்– ஆழ்வார்களிலே சிலர் தாங்களும் யுவதிகளாய், பிராட்டிமாரவஸ்த்தை$_2$யையும்ப$_4$ாவித்து அவனையும் பஞ்சவிம்ஶதிவார்ஷிகனான யுவாகுமாரனாக ப$_4$ாவித்தால் பிறக்கக்கடவ ஸர்வாங்க$_3$ஸம்ஶ்லேஷத்தை, தம்மை மாதாவாக ப$_4$ாவித்து அவனுடைய நீர்மையை ஸ்வரூபமாக்கி, அத்தாலே அவனைத் தமக்குப் புத்ரனாக்கி, அவனுடைய மேன்மையை கு$_3$ணப$_4$ாவமாக்கி, அவனுடைய அவதாரத்தில் மெய்ப்பாடு தோன்ற நின்ற ஶைஶவாவஸ்த்தை$_2$யை யஶோதை$_3$ப்பிராட்டி முதலானார் அநுப$_4$வித்த ப்ரகாரங்களை வ்யாஜமாக்கி வண்ணமாடம் தொடங்கி அநுபவித்துக் கொண்டுபோந்து, ''அச்சோ'' என்றும், ''புறம்புல்குவான்'' என்றும் இரண்டு*

**அவ.–** கீழிரண்டு திருமொழியிலும் – ''அச்சோ'' என்றும், ''புறம்புல்குவான்'' என்றும் அவன், ஶைஶவாநுகு$_3$ணமாக ஓடிவந்து மேல்விழுந்து முன்னும் பின்னுமணைக்கும் ரஸத்தை, தானநுப$_4$விக்கவாசைப்பட்டு அவனைக்குறித்து ப்ரார்த்தி$_2$த்து அவன் அப்படி செய்ய யஶோதை$_3$ப்பிராட்டி அநுப$_4$வித்தாப்போலே, அந்த சேஷ்டிதங்களினுடைய ரஸத்தை அநுப$_4$விக்கவாசைப்பட்டு, தாமும் அப்படி ப்ரார்த்தி$_2$த்து தத்காலம்போலே அநுப$_4$வித்து இனியரானார்; சிறுப்பிள்ளைகள் அப்பூச்சிகாட்டி விளையாடுமத்தையும் அவதாரத்தின் மெய்ப்பாடுதோற்ற அவன் ஆசரித்தத்தை, தத்காலத்திலுள்ளாரநுப$_4$வித்து ஹ்ருஷ்டராய்ப் பேசினாப்போலே பிற்காலமாயிருக்கச்செய்தேயும் தத்காலம்போலே தாமும் அநுப$_4$வித்துப் பேசி ஹ்ருஷ்டராகிறாரித்திருமொழியில்.

**மெச்சூதுசங்கமிடத்தான் நல்வேயூதி**
**பொய்ச்சூதில்தோற்ற பொறையுடைமன்னர்க்காய்ப்**
**பத்தூர்பெறாதன்று பாரதம்கைசெய்த**
**அத்தூதனப்பூச்சிகாட்டுகின்றா னம்மனேயப்பூச்சி காட்டுகின்றான்.**

**வ்யா.– முதற்பாட்டு.** (மெச்சூது சங்கமிடத்தான்) ''ஆஶ்ரிதபரதந்த்ரன்'' ''பாண்ட$_3$வபக்ஷபாதி'' என்று எல்லாரும் மெச்சும்படியாக ஊதுகிற ஸ்ரீபாஞ்சஜந்யத்தை

***அரு.– மெச்சூது ப்ரவேஶம். கீழிரண்டு திருமொழியிலும் முன்னேயணைக்கை, பின்னேயணைக்கையாகிற அவாந்தரார்த்த$_2$ பே$_4$த$_3$முண்டானாலும் அணைக்கையாகிற ரஸம் ஒன்றாகையாலே அவற்றை ஒரு பேடிகையாக்கிக்கொண்டு, வர்த்திஷ்யமாணஸங்க$_3$த்யர்த்த$_2$ம் வ்ருத்தகீர்த்தநம் செய்தருளுகிறார் (கீழித்யாதி$_3$). (தத்காலத்திலுள்ளார்) என்று ஸாமாந்யமாக***

*திருமொழியாலும் ஸர்வாங்க$_3$ஸம்ஶ்லேஷத்தைப் பெற்ருராய் நின்ருர்கீழ். இதில் அவன் திருவாய்ப்பாடியிலுள்ளாரோடே அப்பூச்சி காட்டி விளையாடி ரஸிப்பித்த நிஷ்ப்ரயோஜநவ்யாபாரத்தைத் தமக்கும் அவன் காட்டக்கண்டு அநுப$_4$வித்தாரென்னுதல்; அன்றிக்கே ''பண்டவன் செய்த கிரீடை'' () என்கிறபடியே அக்காலத்திலே தாமும் ஒக்கநின்று கண்டாப்போலே அநுஸந்தி$_4$த்தாரென்னுதல்.*

**ஸ்வா.– முதற்பாட்டு.** *(மெச்சூதித்யாதி$_3$) ''ஆஶ்ரிதபரதந்த்ரன்'' ''பாண்ட$_3$வபக்ஷபாதி'' என்று இரண்டு திறத்திலுள்ளாரும் விஶ்வஸிக்கும்படியாக முன்னேதெளிவித்து ஊதுகிற ஸ்ரீபாஞ்சஜந்யத்துக்கு இடத்திருக்கையை நிரூபகமாக்கினவன். திருக்கைக்கு ஸ்ரீபாஞ்சஜந்யம் நிரூபகமாகையன்றிக்கே, திருக்கை நிரூபகமாகையால் விஶேஷண நிரூபகம் கு$_3$ணபரமாகையாலே மாறியருளிச்செய்யவுமாமிறே. (நல்வேயூதி) ப்$_3$ராஹ்மணர்க்கு ஶிக$_2$ாயஜ்ஞோபவீதாதி$_3$களும் ஸந்த்$_4$யாவந்த$_3$நாதி$_3$களும் விஶேஷண நிருபகமாமாபோலே, கே$_3$ாபகுலத்துக்கும் குழலும், குழலூதுகையும் நிரூபகமாயிறேயிருப்பது. ஸ்வரூபநிரூபகத்திலும் விஶேஷணநிரூபகம் ப்ரத$_4$ாநமாகையாலே ''நல்வேய்'' என்கிருர்.*

*(பொய்ச்சூதிலித்யாதி$_3$) சூதுபோருகை லீலாரஸமாத்ரமன்றிக்கே, அதுவே வ்யாஜமாகக்கொண்டு து$_3$ர்யோதநாதி$_3$கள் பராநர்த்த$_2$சிந்தநை செய்கை*

---

இடத்திருக்கையிலேயுடையவன். ''மெச்ச'' என்கிறவிது, ''மெச்சு'' என்று கடைக்குறைத்தலாய்க் கிடக்கிறது. மெச்ச ஊதுகிறவென்றபடி. மெச்சுதல் – கொண்டாட்டம். ஸ்ரீபாஞ்சஜந்ய த்$_4$வநிதான் ப்ரதிகூலர் மண்ணுண்ணும்படியும், அநுகூலர்வாழும்படியுமாயிறேயிருப்பது. ''யஸ்ய நாதே$_2$ந தை$_3$த்யாநரம் ப$_3$லஹாநிரஜாயத, தே$_3$வாநாம் வவ்ருதே தேஜ: ப்ரஸாத$_3$ஶ்ஶைவ யோகி$_3$நாம்'' () என்கிற படியே. (நல்வேயூதி) இதிறே அவதாரத்துக்கநுகு$_3$ணமான நிரூபகம். அநுகூலர் வாழும்படி. நல்லகுழலை ஊதுமவன். குழலுக்கு நன்மையாவது ''நன்னரம்புடைய தும்புருவோடு நாரதனும் தந்தம் வீணைமறந்து''(பெரி.தி.3–6–5), ''மரங்கள் நின்று மதுதாரைகள்பாயும்''

---

***வருளிச்செய்கையாலே – யஶோதை$_3$ முதலான நந்த$_3$வ்ரஜத்திலுள்ளாரெல்லாருமென்றபடி.***

***அரு.– முதற்பாட்டு. (மெச்சூதித்யாதி$_3$) பாஞ்சஜந்யத்$_4$வநியைக் கேட்டவாறே கொண்டாடும்படி எங்ஙனேயென்ன வருளுகிருர் (ஸ்ரீபாஞ்சஜந்யேத்யாதி$_3$). இதுக்கு ப்ரமாணம் (யஸ்யேத்யாதி$_3$). (என்கிறபடியே) என்றதுக்கு, (வாழும்படியுமாயிறே இருப்பது) என்றத்தோடந்வயம். க்ருஷ்ணனுக்கு ''ஶங்க$_2$சக்ரக$_3$தாபாணே'' () என்கிறபடியே ஶங்க$_2$த்தையே நிரூபகமாகச் சொல்லவமைந்திருக்க, ''நல்வேயூதி'' என்று, வேணுவையிட்டு நிரூபிக்கலாமோவென்ன வருளுகிருர் (இதிறேயித்யாதி$_3$). சேதநரை ஈடுபடுத்துகைக்கு***

*யாலே ''பொய்ச்சூது'' என்கிறார். து₃ர்யோத₄நாதி₃கள் இவர்கள்ஸர்வஸ்வமும் அபஹரித்துக் கொண்டிருக்கச்செய்தேயும் இவர்கள் க்ஷமை ஒன்றும் அபஹரித்துக் கொள்ளமாட்டாதிருந்தது. த₄ர்மபுத்ராதி₃களுக்கு இத்தனையு முடைமையாய்க் கிடக்கையாலே''பொறையுடைமன்னர்'' என்று இவர்களுக்கு நிரூபகமாய்க்கிடக்கிறது. இதொழிந்த ஸர்வஸ்வமும் க்ருத்ரிமத்தாலே அபஹரித்துக்கொள்ளுமதொழிய, இந்தப்பொறையை இவர்கள் ப்ரார்த்தி₂த்துக் கொடுத்தாலும் இந்த ஶரீரத்தோடு கைக்கொள்ள மாட்டார்களிறே அவர்கள்.*

*இந்தப் பொறைதான் இந்த த₄ர்மபுத்ராதி₃களுக்கு உடைமையாயிற்றதும் இவர்கள் அத்₃வேஷத்தோடே போகையாலேயிறே. த்₃ருதராஷ்ட்ரன் இவர்கள் பக்கல் பொறையைப் பரிக்ஷிப்பானாக ''த₄ர்மபுத்ராதி₃கள் போகிறவளவில்*

---

(பெரி.தி.3–6–10) இத்யாதி₃ப்படியே தன்னுடைய த்₄வநியாலே சேதநாசேதந விப₄ாக₃மற ஈடுபடுத்தவற்றாகை. ஸ்ரீபாஞ்சஜந்யமும், திருக்குழலுமிரண் டும் இவ்வவதாரத்தில் கைதொடானயிறேயிருப்பது. பசுமேய்த்துத் திரியுங்காலத்திலும், ''ஆநிரையினம் மீளக்குறித்தசங்கம்'' (பெரி.திரு.3–4–3) என்றும், ''கேயத்தீங்குழலூ திற்றும் நிரைமேய்த்ததும்'' (திருவாய் 6–4–2) என்றும் சொல்லக்கடவதிறே.

(பொய்ச்சூதில் தோற்ற) க்ருத்ரிமமான சூதிலே பராஜிதராய் ஸர்வஸ்வத்தையும் இழந்த. செவ்வையில் இவர்களை ஜயிக்கப்போகாதிறே; க்ருத்ரிமத்தாலேயிறே இவர்களை ஜயித்தது. (பொறையுடை மன்னர்க்காய்) அவர்கள் செய்தது க்ருத்ரிமமென்று அறிந்திருக்கச்செய்தேயும், க்ரோத₄விக்ருதியின்றிக்கே க்ஷமையையுடையராயிருந்த ராஜாக்களுக்காய். து₃ர்யோத₄நாதி₃கள், இவர்கள் ஸர்வஸ்வத்தையும் அபஹரிக்குமித் தனையல்லது, இவர்கள் க்ஷமையை அபஹரிக்கமாட்டார்களிறே. ஆகையாலே ''பொறையுடைமன்னர்'' என்று – பொறையை இவர்களுக்கு நிரூபகமாகச் சொல்லுகிறது. (மன்னர்க்காய்) ''யஸ்ய மந்த்ரீச கோ₃ப்தா ச ஸுஹ்ருத்சைவஜநார்த்த₃ந:'' என்கிறபடியே அவர்களுக்கு ஸர்வவித₄மான துணையும் தானேயாய்க்கொண்டு பரதந்த்ரனாய்.

---

***ப்ரமாணம் (நன்னரம்புடையவித்யாதி₃). (நன்னரம்பு) நல்ல நரம்புகளையுடைத்தானவீணை யென்றபடி. அசேதநங்களை ஈடுபடுத்துகைக்கு ப்ரமாணம் (மரங்களித்யாதி₃). (கைதொடானாய்) – கைவிடாதேயென்றபடி. உக்தார்த்த₂த்தில் ப்ரமாணம் (பசுமேய்த்தித்யாதி₃).***

***''பத்தூர் பெறுதவன்று பாரதம் கைசெய்தவத்தூதன்'' என்ற பத₃த்தைக் கடாக்ஷித்து அதுக்கநுகு₃ணமாகத் ''தோற்ற'' என்றதுக்கர்த்த₂மருளுகிறார் (க்ரித்ரிமமான வித்யாதி₃). அட்டத்தில் தோற்ற மாத்ரமேயாகில் க்ருஷ்ணன் தூதுபோக வேண்டாவிறே. சூதிலே தோற்றால் இவர்களுக்குப் ''பொறையுடை'' என்று சொல்லப்ரஸக்தியே தென்ன வருளுகிறார் (அவர்களித்யாதி₃). ''ஆய்'' என்றதினர்த்த₂த்தை ஸப்ரமாண முபபாதி₃க்கிறார் (யஸ்யேத்யாதி₃).***

*விக்ருதராய்ப் போனார்களோ? '' என்று கேட்க, ''ஹர்ஷத்தால் வந்தவிக்ருதி யொழிய, அவர்கள் பக்கல் க்ரோத$_4$விக்ருதிகண்டிலோம்'' என்ன; ''என்பிள்ளைகளிலும் ஒருவராகிலும் ஶேஷிக்கும்படியாக அழன்று வாய்விட்டுப் போய்த்திலனே மஹாபாபி'' என்றானிறே. புறக்கண் கெட்டாப் போலே உட்கண்ணும் மறைந்தபடியாலே. து$_3$ர்யோத$_4$நாதி$_3$களுக்கு ராஜ்ய ப்ராப்தியில் தாயவிப$_4$ாக$_3$த்தால் உடைமையான தே$_3$ஶமும், இவர்கள் பக்கல் அபஹரித்த தே$_3$ஶமும் அவர்கள் கொடுத்தாலும் இவர்கள் க்ருத்ரிமத் தோல்வி ந்யாயத்தாலே அநுவர்த்தித்தாலும் கொள்ளார்களிறே. இதுவென், அவரோடு விப$_4$ாகி$_3$த்து வர்த்திக்கை அரிதென்று போனார்களானாலோவென்னில்; அது க$_3$ந்த$_4$ர்வ பரிப$_4$வத்திலே காணலாமிறே. ஆகையாலே உடைமை கண்டவிடத்தே எல்லாரும் சேர்வர்களிறே. உடைமையாவது பொறையிறே. அத்தாலேயிறே ஈஶ்வரன் தானும் சேர்ந்தது.*

*(பத்தூர்பெறுது) இவர்களுக்காக ஸ்ரீதூதுஎழுந்தருளி ''எல்லார்க்கும் உள்ளார்க்குள்ள ப்ராப்திகள் அம்ஶித்து நீங்களும் உங்களுக்கு அம்ஶமானதும் கொண்டு ஜீவிக்கப்பார்க்கில் தீ$_3$ர்க்க ஜீவிகளாகலாம்'' என்றருளிச்செய்தவளவில், அவர்கள் இசையாதபடியாலே ''சிறிது குறைத்தாலும் கொடுத்துப் பொருந்தப் பாருங்கோள்; நான் அவர்களைப் பொருத்துகிறேன்'' என்னளவிலும் அவர்கள் இசையாமையாலே ''ஆளுக்கு இரண்டூராக ஐவர்க்கும் பத்தூர் கொடுங்கோள்'' என்ன; அவர்கள் அதுக்கும் இசையாமல் ''வீரபே$_4$ாக்$_3$யையன்றோ வஸுந்த$_4$ரை, ராஜாக்களுக்கு யுத்$_3$த$_4$மன்றோ கர்த்தவ்யம்'' என்ன; ''ஆனால் அந்தத$_4$ர்மத்தைச்*

---

(பத்தூரித்யாதி$_3$) இவர்களுக்காக ஸ்ரீதூதெழுந்தருளி ''பாண்ட$_3$வர்களும் நீங்களும் விரோதி$_4$த்திராதே உள்ளார்க்குள்ள அம்ஶங்களை விப$_4$ஜித்துக்கொடுத்து, கூடிக்கலந்திருக்கில் தீ$_3$ர்க்கஜீவிகளாகலாம் என்ன; அவர்கள், ''நாங்கள் அது செய்யோம்'' என்ன; ''ஆனால் சிறிது குறையவாகிலும் கொடுங்கோள், அவர்களை நான் பொருத்துகிறேன்'' என்ன; அதுக்கும் அவர்கள் இசையாமையாலே, ''ஆனால், அவர்களைவர்க்கும் தலைக்கிரண்டூராகப் பத்தூர்தன்னைக் கொடுங்கோள்'' என்ன; ''இவையொன்றும் நாங்கள் செய்வதில்லை, வீரபே$_4$ாக்$_3$யையன்றோ வஸுந்த$_4$ரை, யுத்$_3$த$_4$த்தைப்பண்ணி ஜயித்தவர்கள் ஜீவிக்குமித்தனை'' என்ன; ஆனால், ''அது தன்னைச் செய்யுங்கோள்'' என்று போந்து, இத்தலையையும் யுத்$_3$த$_4$த்திலே பொருத்தி, அன்று ப$_4$ாரதயுத்$_3$த$_4$த்திலே கையுமணியும்வகுத்து, ஸாரதி$_2$யாய்நின்று நடத்தின ஆஶ்ரிதபக்ஷபாதியான அந்தத்தூதனானவன். (அப்பூச்சி) பயங்கரமாயுள்ளது. அதாவது

---

***''பத்தூர்பெறுது'' என்றதுக்கு உபோத்$_3$க$_4$ாதம் (இவர்களுக்காகவித்யாதி$_3$)***

*செய்யுங்கோள்'' என்றிசைந்து போந்து இவர்களையும் இசைவித்து. (பாரதம் கைசெய்த) மஹாப$_4$ாரதயுத்$_3$த$_4$த்திலே கையும் அணியும் வகுத்து ஸாரதி$_2$யாய் நின்ற அத்தூதனென்னுதல். பத்தூர் பெருதவத்தூதனென்னுதல்; தூதனுய் ஸமனுயிருக்கச்செய்தேயும் ''தன்னுடைய ஆஶ்ரித பக்ஷபாதித்வம் அவர்கள் நெஞ்சிலும் படவேணும்'' என்று ''மமப்ராணு ஹி பாண்ட$_3$வா:'' (ப$_4$ார.உத்$_3$) என்று மேல்விளையும் கார்யம் ஏற்கவே அறிவித்த அத்தூதனென்னுதல். (அப்பூச்சி காட்டுகின்றுன்) அந்த ஆஶ்ரிதபக்ஷபாதம் தோற்றவப்பூச்சி காட்டுகின்றுனென்கிறுர்.*

*இவ்விடத்தே உஞ்சப்பிள்ளை பாடாநிற்கத் திருவோலக்கத்திலே ''அத்தூதன்'' என்று – பெருமாளைக் காட்டுவது. ''அப்பூச்சி'' என்று கண்ணை இறுத்துக்கொண்டு வருவதாய் அபி$_4$நயிக்க, உடையவர்பின்னே ஸேவித்தெழுந்தருளியிருந்த எம்பார் திருக்கைகளை திருத்தோளோடே சேர்த்துக்காட்ட, அவரும் அப்படியே அபி$_4$நயித்துக்கொண்டுவர ''இதுக்கடியென்'' என்று விசாரித்து உடையவர் புரிந்து பார்த்து ''ஸ்ரீகே$_3$ாவிந்த$_3$ப் பெருமாள் இருந்ீரோ'' என்றருளிச் செய்தாரென்றருளிச்செய்வர். ''அம்மனே அப்பூச்சி காட்டுகின்றுன்'' என்று கை நெரித்திறே அவர் மீண்டு அபி$_4$நயித்தது.*

---

– லோகத்தில் ப$_3$ாலரானவர்கள் எதிர்த்தலைக்கு ப$_4$யங்கரமாகக் காட்டுவது சில சேஷ்டிதங்கள்.

இவ்விடத்தில் விஶேஷமுண்டு. அதேதென்னில், நீர்மையைக் கண்டு ''நம்மிலேயொருவன்'' என்றிருக்குமவர்கள் ப$_4$யப்படும்படி ஈஶ்வரத்வ சிஹ்நங்களைக் காட்டுகை. இவ்விடத்தை, உஞ்சப்பிள்ளை ஆடாநிற்க, திருவோலக்கத்திலே, ''அத்தூதன்'' என்று பெருமாளைக் காட்டுவது, ''அப்பூச்சி'' என்று கண்ணை இறுத்துக் கொண்டு வருவதாய் அபி$_4$நயிக்க; உடையவர் பின்னே ஸேவித்தெழுந்தருளியிருந்த எம்பார் – திருக்கைகளைக் திருத்தோள்களோடு சேர்த்துக் காட்ட, அவரும், அப்படியே அபி$_4$நயித்துக்கொண்டுவர, 'இதுக்கடியென்'' என்று விசாரித்துப்புரிந்து பார்த்தருளி ''ஸ்ரீகே$_3$ாவிந்த$_3$ப்பெருமாள்!இருந்தீரோ'' என்று அருளிச்செய்தாரென்று ப்ரஸித்$_3$த$_4$மிறே. ''அப்பூச்சி' என்கிறது இரண்டு திருக்கையிலாழ்வார்களையும். ''அம்மனே'' என்கிறது – கண்டுப$_4$யப்பட்டுச் சொல்லுகிற வார்த்தை. (1)

---

***இப்பாட்டு ''மெச்சூது சங்கமிடத்தான்'' என்கையால், வலக்கையாழியும் ஸ்ம்ருதமாகையாலே அத்தை அப்பூச்சி பத$_3$த்துக்குத் தாத்பர்யமென்று எம்பார் அருளிச் செய்தாரென்று நம்மாசார்யர்களுடைய ஸம்வாத$_3$த்தையருளிச்செய்கிறுர் (இவ்விடத்திலே யித்யாதி$_3$). ''இருந்தீரோ'' என்றதுக்கு – அபி$_4$நயம் காட்டிக்கொண்டு நீர் இருந்தீரோ வென்று கருத்து.(1)***

''அப்பூச்சி'' என்றது இரண்டு திருக்கையில் ஆழ்வார்களையும், நீர்மையாலே வஸ்து நிர்தே$_3$ஶமானுல் மேன்மையை அப்பூச்சி என்னலாமிறே. (மாம் வ்ரஜ) என்கிற மேன்மை போலன்றிறே. (1)

**அவ.– இரண்டாம்பாட்டு.** ''அதி$_4$காராநுகு$_3$ணமாக வார்த்தை சொல்லாதவன் அப்பூச்சி காட்டுகின்றுன்'' என்கிறுர்.

**ஸ்வா.–** (மலையித்யாதி$_3$) ''மஹத்தானபர்வதங்கள் சலித்தாலும் நம்முடைய தோளுக்குச்சலநமுண்டோ'' என்றிருக்கிற ராஜாக்களும் யுத்$_3$தே$_4$ாந்முக$_2$ரான ''பெரியதேராளிகளும், (மற்றும்பலர்) அதொழிய பரிக$_3$ணிக்கவொண்ணுத ''ஆனை, குதிரை, காலாள்'' என்று சொல்லப்பட்ட பரிகரத்திலுள்ளவர்களும். (குலைய) நடுங்க. அவர் இவர் என்ருப்போலே சில வ்யக்தி நிரூபணம் பண்ணலாமதொழிய நடுக்கம்எல்லார்க்கு மொத்துத் தோற்றுகையாலே ஒரு சொல்லாலே ''குலைய'' என்கிறுர். இந்த நடுக்கத்துக்கு

---

**மலைபுரைதோள்மன்னவரும் மாரதரும்மற்றும்**
**பலர்குலையநூற்றுவரும் பட்டழியப் பார்த்தன்**
**சிலைவளையத் திண்டேர்மேல்முன்னின்ற செங்கண்**
**அலைவலைவந்தப்பூச்சி காட்டுகின்ருனம்மனே அப்பூச்சி காட்டுகின்ருன். (2)**

**வ்யா.– இரண்டாம்பாட்டு.** (மலையித்யாதி$_3$) மலைபோலே ஒருவரால் சலிப்பிக்க வொண்ணுதபடி திண்ணிதான தோள்களையுடைய ராஜாக்களும். இத்தால் –அதி ப$_3$லபராக்ரமராகையாலே ஒன்றுக்கும் அஞ்சாதவர்களென்கை. (மாரதரும்) பீ$_4$ஷ்மத்$_3$ரோணுதி$_3$களான மஹாரத$_2$ரும். பீ$_4$ஷ்மர், த்$_3$ரோணுசார்யர், கர்ணன் என்கிற இவர்கள் ஓரொருவரே அதிஶூரராகையாலே ஓரெதிரிகளுக்கும் அஞ்சாதவர்களிறே. (மற்றும்பலர்) தனித்தனியே எண்ணி முடியாமையாலே மற்றும் இவர்களோடொக்க விகல்பிக்கலாம்படி இருப்பாரநேகரென்கிறுர். பதிஞேரக்ஷோஹிணியானுல் அதில் எத்தனைசூரருண்டாயிருக்கும்; ஆகையாலே ஸமுச்சயித்துச் சொல்லுமித்தனையிறே.

---

*அரு.– இரண்டாம்பாட்டு. (மலையித்யாதி$_3$) மலைக்கும் தோளுக்குமுண்டான ஸாத்$_3$ருஶ்யத்தை உபபாதி$_3$த்துக்கொண்டு ஶப்$_3$த$_3$ார்த்த$_2$ம் (மலையித்யாதி$_3$). ''த்$_3$ரவிணம் தரஸ்ஸஹோ ப$_3$லவீர்யாணி ஸ்த்தேம சுஷ்ம ச ஶக்தி: பராக்ரம: பாண:'' என்று ப$_3$லபராக்ரம ஶப்$_3$த$_3$ங்கள் பர்யாயமாகப்படி$_2$தங்களாகிலும், இங்கு ''ப$_3$லம்'' என்று காயப$_3$லத்தையும், ''பராக்ரமம்'' என்று உத்ஸாஹாதி$_3$ ரூபமான மநோப$_3$லத்தையும் சொல்லுகிறது. ''மாரதர்'' என்றது – ''ஆத்மாநம் ஸாரதி$_2$ஞ்சாஶ்வாந் ரக்ஷந்யுத்$_3$த$_4$யேதயோ நர: ஸமஹாரதஸம்ஜ்ஞஸ் ஸ்யாத்'' என்கிற மஹாரத$_2$ரென்றபடி. (ஓரெதிரிகள்) என்றது – அத்$_3$விதீயரான சத்ருக்களென்றபடி. (எத்தனை சூரருண்டாயிருக்கும்) என்றது – அநேகம் பேருண்டாயிருக்குமென்றபடி.*

*ஹேது முன்பே மிகை விருதூதுவது, வீரக்கழலிடுவதானதிறே.*

*(நூற்றுவரித்யாதி$_3$) ''பலர்குலைய'' என்றதிலே இவர்களும் அந்தர்க்க$_3$தரிறே. ஆயிருக்கச்செய்தே இவர்களைப் பிரித்து''பட்டழிய'' என்றது, அஹங்காராக்$_3$நி ப்ராசுர்யத்தாலே. மஹாவ்ருக்ஷங்களானவை பசுமைகுலைய வற்றிவரண்டு கோடரக$_3$தமான அக்$_3$நியாலே வெந்து விழுமாபோலேயிறே நூற்றுவரும் பட்டழிந்தபடி.*

*(பார்த்தனித்யாதி$_3$) இதுபோலேயோ அவன் சிலைவளையப்பட்ட பாடு. ''விஸ்ருஜ்ய ஸஶரம் சாபம்'' (கீ$_3$தை 1–47) என்றவனை ''கரிஷ்யே வசநம் தவ'' (கீ$_3$தை 18–73)என்னப்பண்ணின அருமை; அதாவது – பெரிய வ்யவஸாயத்தோடே யுத்$_3$தோ$_4$ந்முக$_2$னாய்த் தேரிலே ஏறினவன், யுத்$_3$தோ$_4$ந்முக$_2$ரான ப$_3$ந்து$_4$க்களை*

---

**(குலைய) ''க்ருஷ்ணன் ஸாரத்$_2$யம் பண்ணுவதாக ஏறினான்'' என்று கேட்டபோதே ''நாம் இனி ஜீவிக்கை என்றொரு பொருளுண்டோ'' என்று பீ$_4$தராய் நடுங்கும்படியாக. கீழே, அவர் இவர் என்றாப்போலே விஶேஷம் தோற்றச் சொல்லி, '''குலைய'' என்கையாலே இந்நடுக்கத்தில் வந்தால் ஒருவர்க்கும் ஒருவிஶேஷமுமில்லையென்கை.**

**(நூற்றுவரும்பட்டழிய) கீழே – ''மன்னவரும்'' என்றது – ராஜாக்களைச்சொல்லி யிருக்கச்செய்தே, இவர்களைப் பிரித்தெடுக்கையாலே – கோ$_3$ப$_3$லீவர்த்தந்யாயத்தாலே அங்கு இவர்களை ஒழிந்தவர்களைச் சொல்லிற்றாகக்கடவது. பாண்ட$_3$வர்களோடே யுத்$_3$த$_4$ம் பண்ணி ஜயித்து பூ$_4$மிப்பரப்படங்களும் தாங்களே ஆளுவதாகக் கோலியிருந்த து$_3$ர்யோத$_4$நாதி$_3$கள் நூற்றுவரும் பட்டழிய. ''மயை வைதே நிஹதா: பூர்வமேவ'' (கீ$_3$தை 11–33) என்கிறபடியே க்ருஷ்ணன் அழியச்செய்வதாக ஸங்கல்பித்தபோதே நின்று வற்றின மரம் {வேரற்ற மரம்–பா} போலே பட்டு, பின்னை உருவழிந்துபோம்படியாக.**

**(பார்த்தன்சிலைவளைய) அர்ஜுநன்கையில் காண்டீ$_3$வம் வளைய. அதாவது – அதிரத$_2$ மஹாரத$_2$ரான பீ$_4$ஷ்மாதி$_3$களை மதியாதே, அர்ஜுநன் எதிர்த்துநின்று வில்வலித்து யுத்$_3$த$_4$ம்பண்ண வல்லனாய்த்து இவனுடைய ஸஹாயப$_3$லத்தாலென்கை.**

---

***(கோ$_3$ப$_3$லீவர்த்தந்யாயத்தாலே) இத்யாதி$_3$க்குத் தாத்பர்யம் ''கா$_3$மாநய'' என்றும், ''ப$_3$லீவர்த்தமாநய'' என்றும் சொன்னால் ''கோ$_3$'' என்கிற ஸாமாந்ய ஶப்$_3$த$_3$ம் – ப$_3$லீவர்த்தத்தை யொழியக் காட்டினாப்போலே, இங்கும் ''மன்னவர்'' என்கிற ஸாமாந்ய ஶப்$_3$த$_3$ம் நூற்றுவரை யொழியக்காட்டுகிற தென்றபடி. ப$_3$லீவர்த்தம் – வ்ருக்ஷப$_4$ம். கீழ்ச் சொன்னவர்களோடோரு சேர்த்தியாகச் சொல்லாமல், ''நூற்றுவர்'' என்று தனியே சொல்லுகைக்கு நியாமகமருளிச் செய்கிறார் (பாண்ட$_3$வர்களித்யாதி$_3$). ''திண்டேர்மேல் முன்னின்ற'' என்றிருக்கையாலே யுத்$_3$தா$_4$த் பூர்வம் து$_3$ர்யோத$_4$நாதி$_3$கள் பட்டழியக்கூடுமோவென்ன (மயைவேத்யாதி$_3$). (வற்றின மரம்போலே) என்றது – நீர் வற்றின மரம்போலே என்றபடி.***

***இவன் தேர்மேல் நில்லாவிடில் காண்டீவம் வளையாதோ வென்னவருளுகிறார் (அதாவது அதிரதேத்யாதி$_3$). (வலித்து) இழுத்து; நாணை ஏறிட்டென்றபடி. திண்மைக்கர்த்த$_2$ம்***

*ரக்ஷிக்கை த$_4$ர்மமென்றும், வைதமானத்தை அத$_4$ர்மமென்றும் ஸ்நேஹ காருண்யவத$_4$பீ$_4$திகளாலே ''கிந்நோ ராஜ்யேந கோ$_3$விந்த$_3$ கிம்போ$_4$கை$_3$ர் ஜீவிதேந வா'' என்று இவன் நிற்கையாலும், அவள் ''விரித்தகுழல்முடியேன்'' என்று, தனக்கு ஶரணாக$_3$தி திருநாமப்ரபா$_4$வமாத்ரத்தாலே ப$_2$லித்தக$_3$ர்வத்தாலே ''நாம் நினைத்ததெல்லாம் ப$_2$லிக்கும்'' என்று ப்ரதிஜ்ஞை பண்ணி நின்றாள்; ''இனி இவனைத் தெளிவித்துச் சிலையைவளைத்து மயிரை முடிப்பிக்கவேணும்'' என்று திருவுள்ளம்பற்றியருளி, இவனுக்குச் சில அர்த்த$_2$விஶேஷங்களை உபதே$_3$ஶிக்கக்கோலி ''த$_4$ர்மத்தை அத$_4$ர்மமென்ற ப்$_4$ரமம் மீளாமையாலே, அத$_4$ர்மத்தை த$_4$ர்மமென்றால் அத்தை த$_4$ர்மமென்று கைக்கொள்ளுமாகில், இவன் அத$_4$ர்மமென்று நீக்கினத$_4$ர்மத்தை இவனிசைந்த த$_4$ர்மத்துக்கு யோக்$_3$யதாபாதகமாக்குவிப்போம்'' என்று பார்த்தவளவிலும் அது கூட்ட இவன் இசையாமையாலும், அதொழிய இது த$_4$ர்மமாகாமாட்டாமையாலும் வெறுத்தருளி ''இனி அதிகு$_3$ஹ்யரஹஸ்யமொழியச் சொல்லலாவதில்லை'' என்று திருவுள்ளம்பற்றியருளி ''த$_4$ர்மங்களெல்லாவற்றையும் ஒன்றொழியாமல் விடு'' என்கையாலே ''அலைவலை'' என்கிறார்.*

*இவன் கைவிட்ட த$_4$ர்மம் கூடாதபோது தான் இதுத$_4$ர்மமென்ன இசைந்தானோவென்னில்; இசைந்தான். இசைந்த ப்ரகாரந்தானென்னென்னில்; இது த$_4$ர்மம்; து$_3$ஷ்கரத்வாதி$_3$ தோ$_3$ஷத$_3$ர்ஶநத்தாலும், கீழே பாரதந்த்ர்யத்தைக் கேட்கையாலே அந்த பாரந்த்ர்யஸ்வரூபத்துக்கு விரோத$_4$மாய்த் தோற்றுகை யாலும் ''என்னால் செய்யப்போகாது; மற்றொரு க$_3$தி அறிகிலேன்'' என்று இவன் ஶோகி$_2$த்துபின்பு இவன் ஶோக$_2$நிவ்ருத்யர்த்த$_2$மாக த்யஜிக்கச் சொல்லும் போதும், இது அஶக்தியோக$_3$த்யாகமாம் போதும் அவனுடைய ப்$_4$ரமத்தாலே த$_4$ர்மஶப்$_3$த$_3$வாச்யமாமித்தனை.*

*இவற்றினுடைய து$_3$ஷ்கரத்வாதி$_3$ தோ$_3$ஷத$_3$ர்ஶநம் பண்ணினவன் ப்$_4$ரமித்தானோவென்னில்? இதுக்கு யோக்$_3$யதாபாதக த$_4$ர்மத்தைக் கூட்டப் பெறாமையாலும் ப்$_4$ரமித்தான்.*

---

(திண்டேர்மேல் முன்னின்ற) மஹாரத$_2$ரான பீ$_4$ஷ்மாதி$_3$கள்விட்ட ஆக்$_3$நேயாஸ்த்ராதி$_3$களாலே த$_3$க்$_3$த$_3$மாய் விழாமல் தன் திருவடிகளின் ஸம்ப$_3$ந்த$_4$த்தாலே திண்மையை யுடைத்தாய் நின்றதேரின்மேலே, ''உரஸா தா$_4$ரயாமாஸ பார்த்த$_2$ம் ஸஞ்சாத்ய மாத$_4$வ:'' என்கிறபடியே அர்ஜுநனால் பொறுக்கவொண்ணாத அஸ்த்ரஶஸ்த்ரங்கள் வந்தாலும் தன்மேலே ஏற்றுக்கொள்ளும்படி ஸாரதியாய் முன்னின்ற.

---

***(மஹாரதே$_2$த்யாதி$_3$). ''வீழாமல்–நின்ற'' என்றந்வயம். ''முன்னின்ற'' என்றதுக்கு ப்ரயோஜநம் (உரஸேத்யாதி$_3$).***

இவ்விதழோடு நிறைவுபெறுகிறது. மநுஸ்ம்ருதி விளக்கம், கேள்வி–பதில் பகுதி, முற்றுப்பெருத தொடர்க்கட்டுரைகள் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர்ஸ்வாமியின் ஸ்ரீரங்கராஜ ஸ்தவ உரை ஆகியன தொடர்ந்து வெளிவரும். இதுதவிர தமிழ்எழுத்தில் ஸ்ரீக்ருஷ்ணகர்ணாம்ருதம் பதவுரை, தாத்பர்யத்தோடு வெளிவருகிறது. பற்பல கட்டுரைகள் இதுவரை வெளிவந்துள்ளன. அவையாவன –

| | | | |
|---|---|---|---|
| 01. | ஸ்ரீரங்கேஶபுரோஹிதர் | மே | 2008 |
| 02. | ஶடகோபன்சீர்மை | ஜுன் | 2008 |
| 03. | திருக்கோட்டியூர்நம்பி வைபவம் | ஜுன் | 2008 |
| 04. | நம்மாழ்வாரின் உவமைகள் | ,, | |
| 05. | நம்பெருமாளும் | | |
| | நம்மணவாளமாமுனிகளும் | ஜுலை | 2008 |
| 06. | வேதங்களில் வராஹப்பெருமாள் வைபவம் | ,, | |
| 07. | திருவரங்கச்சோலை | ஆகஸ்ட் | 2008 |
| 08. | ஆண்டாளும் ஆதிவராஹனும் | ,, | |
| 09. | விஷமும் அம்ருதமும் | ஆகஸ்ட் | 2008 |
| 10. | அறுசுவை | செப் | 2008 |
| 11. | பாகவத உச்சிஷ்டம் | ,, | |
| 12. | தீங்கரும்பு | ,, | |
| 13. | மால் | செப் | 2008 |
| 14. | கோயிலண்ணனும் எறும்பிலப்பாவும் | அக் | 2008 |
| 15. | ஆழ்வார்கள் அருளிய தமிழ் அமுதம் | ,, | |
| 16. | கூரத்தாழ்வான் கண்ட ராமாநுஜர் | ,, | |
| | மால் | ,, | |
| | வாங்கிவிட்டீர்களா திருநெடுந்தாண்டகம்.? | அக் | 2008 |
| 17. | ஸ்ரீஶைலேஶரும் | | |
| | ஸ்ரீஶைலேஶதயாபாத்ரரும் | நவம் | 2008 |
| 18. | ஜீயர் திருவடிகளே ஶரணம் | நவம் | 2008 |
| 19. | மறந்தும் புறந்தொழாமாந்தர் | ,, | |
| | மால் | நவம் | 2008 |
| 20. | பரகாலகவியின் பத்தாம்பத்து அநுபவம் | டிஸம் | 2008 |
| 21. | நம்பிள்ளையின் திருநாவீறு | டிஸம் | 2008 |
| 22. | உலகார்யன் காட்டும் உய்வுபாயம் | ஜனவரி | 2009 |
| 23. | துன்னுபுகழ் மாமறையோன் | ,, | |
| 24. | ஆகில், அந்தப்பாபம் அடிக்கழஞ்சு பெறும்! | ,, | |
| | மால் | ஜனவரி | 2009 |
| 25. | ப்ரபத்தியின் பெருமை | ,, | |
| 26. | குணபரீவாஹம் | பிப்ரவரி | 2009 |
| 27. | மரக்கால் | ,, | |

| | | | |
|---|---|---|---|
| 28. | எம்பார் வைபவம் | பிப்ரவரி | 2009 |
| 29. | புருஷகார வைபவம் | மார்ச் | 2009 |
| 30. | அந்திமஸ்ம்ருதி வேண்டா | ,, | |
| 31. | திருக்கச்சிநம்பி வைபவம் | ,, | |
| 32. | மொழியைக்கடக்கும் பெரும்புகழான் | மார்ச் | 2009 |
| 33. | ஸ்ரீராமாயண ஸாரம் | ஏப்ரல் | 2009 |
| | மொழியைக்கடக்கும் பெரும்புகழான் | ஏப்ரல் | 2009 |
| 34. | வரதவைபவம் | மே | 2009 |
| 35. | எங்களாழ்வான் வைபவம் | மே | 2009 |
| 36. | இராமாயணமும் விரோதியும் | மே | 2009 |
| 37. | ஆழ்வார்களும் தேவதாந்தரங்களும் | ஜூன் | 2009 |
| 38. | பெரியாழ்வார்திருமொழி வ்யாக்யானம் | ஜூன் | 2009 |
| 39. | பெரியாழ்வார் சிந்தனைகள் | ஜூலை | 2009 |
| 40. | கம்பரது இராமகாதையில் சில மறைபொருள்கள் | ஆகஸ்ட் | 2009 |
| 41. | ப்ரஶ்நத்ரயம் | ஆகஸ்ட் | 2009 |
| 42. | கண்ணபிரானும் நம்மாழ்வாரும் | செப் | 2009 |
| 43. | பிள்ளைப்பெருமாள் அய்யங்கார் அநுபவித்த க்ருஷ்ணலீலைகள் | செப் | 2009 |
| 44. | அழகியமணவாள மாமுனிகளும் த்ராவிடவேதாந்த ஸம்ரக்ஷணமும் | நவ | 2009 |
| 45. | வசநபூடணத்தின் சொன்னேரிலநுட்டிப்பார் | டிஸ | 2009 |
| 46. | பொன்வட்டில் தனையெறிந்த புகழுடையோன் | பிப்ரவரி | 2009 |
| 47. | ஆசார்யாபிமாந நிஷ்டர் | ,, | |
| 48. | நேரார் கூரத்தாழ்வானை ஒத்தார் யாவர் இருநிலத்தே | ,, | |
| 49. | ஆழ்வானின் ஆசையும், வருத்தமும் | ,, | |
| 50. | அழகில் தோய்ந்த அரக்கி | பிப்ரவரி | 2010 |
| 51. | ஏதேனுமாவேனே | மார்ச் | 2010 |
| 52. | புலம்பிய புலம்பல் | மார்ச் | 2010 |
| | அழகில் தோய்ந்த அரக்கி | மார்ச் | 2010 |
| 53. | திருவேங்கடமுடையான் வைபவம் | ஏப்ரல் | 2010 |
| 54. | வால்மீகி ராமாயணம் | ,, | |
| 55. | ஶரணவரணம் | ஏப்ரல் | 2010 |

பெரியபெருமாளே ஸ்வாசார்யரான மணவாளமாமுனிகளின் திருநாமத்தில் இப்பத்ரிகையைத் தொடங்கி நடத்திவருகிருரேயன்றி அற்பஜ்ஞனும் எலிஎலும்பனுமான அடியேன் இதனை நடத்துகிறேனல்லேன். அடியார்கள் பலர் திருவுள்ளம் உகக்கும்படி இப்பத்ரிகை நடந்துவருகிறது. மேலும் நிர்விக்நமாய் அப்படியே நடக்கவேணும் என்று பெரியபிராட்டியார் பெரியபெருமாள் திருவடிகளில் விண்ணப்பிக்கிரேம்.

ஆர்.ரகுராமன்

**Grantha Paripalana Trust (Regd), 24/71, Puthur Agraharam, Trichy-620 017.**